விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 27 வியாழக்கிழமை (11.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 023

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே


## புதுவருடம் பிறந்த முதல் நாடாளுமன்ற அமர்விலேயே

# கூச்சல், குழப்பம் பெரும் அமளி துமளி

# பிரதமர் ரணில் மீதும் தாக்குதல் முயற்சி

## இலங்கை வரலாற்றில் மோசமான நாளாகவும் பதிவு

- ரணில் மீது தாக்குதல் முயற்சி
- நாடாளுமன்றில் கூச்சல் குழப்பம்
- மயங்கி விழுந்த காவிந்த எம்.பி,
- காயங்களுக்கு உள்ளான எம்.பிக்கள்
- எதிர்வரும் 23ஆம் திகதி வரை சபை ஒத்திவைப்பு
- திருடன், திருடன் என கூச்சல்
- துரத்தித் துரத்தி தாக்கப்பட்ட உறுப்பினர்கள்
- ஆளும், எதிர்க்கட்சி மோதல்
- வேடிக்கை பார்த்த கூட்டமைப்பு, ஜே.வி.பி.



(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் இடம்பிடிக்கும் அளவுக்கு புது வருடம் பிறந்து நடத்தப்பட்ட முதலாவது நாடாளுமன்ற அமர்வுகள் பெரும் கூச்சல், குழப்பம், அமளி துமளியுடன் இடம் பெற்றது. மத்திய வங்கியின் பிணை முறிமோசடி தொடர்பில் நேற்று இடம்பெற்ற விசேட நாடாளுமன்ற அமர்வின் போது பிரதமர் ரணில் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு ஆளும், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் துரத்தித் துரத்தி தாக்குதலிலும் ஈடுபட்டனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் ஏற்பட்ட மோதலுக்கு மகிந்த அணி திட்டமிட்டே வந்தது

### அமைச்சர் ராஜித சாடல்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிரணியினர் நாடாளுமன்ற அமர்வில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு ஏற்கனவே திட்டம் தீட்டியிருந்துள்ளார்கள் என்று நல்லாட்சி அரசாங்கத்தின் தரப்பிலிருந்து குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 23

## சபையில் ஏற்பட்ட மோதல் நல்லாட்சி அரசாங்கத்தின் திட்டம்

### மகிந்த அணி சாடல்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊழல் மோசடியை மூடிமறைப்பதற்கான மற்றுமொரு திட்டமிடப்பட்ட முயற்சியே நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மோதலாகும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிரணி தெரிவித்துள்ளது.

குற்றவியல் சட்டக்கோவையின் பிரிவுகளின் கீழ் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கியின் ஊழல் மோசடிகளுக்கு அனுமதி வழங்கியவர் என்ற வகையில் தண்டிக்கப்பட வேண்டியவர் 23

### மதுபான நிலையங்களில்

## பெண்களும் பணியாற்றலாம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள மதுபான உற்பத்தி நிலையங்கள் மற்றும் மதுபான விற்பனை நிலையங்களில் பெண்கள் பணிபுரிவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. 23

## உண்மையான திருடர்கள் யார் என மக்களுக்கு நன்கு தெரியும் – மைத்திரி

(கொழும்பு)

பணப்பையை திருடிக்கொண்டு ஓடும் கள்வனின் பின்னால் கூச்சலிடுவதைப்போல இன்று பாராளுமன்றத்தில் உள்ள இரு சாராரும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொள்கின்றனர். ஆனால் உண்மையான திருடர்களை மக்கள் நன்கு அறிவார்கள் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் அநுராதபுரம் சல்காது விளையாட்டரங் 23



## ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சம்பந்தன் நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

பிணை முறிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் நன்றி தெரிவித்துள்ளார்.

சபை நடவடிக்கைகளை நேற்று புதன்கிழமை காலை ஆரம்பித்து வைத்து எதிர்க்கட்சி தலைவர் உரையாற்றியபோதே இதனைக் குறிப்பிட்டார்.

இது அரசாங்கத்தின் நிதி தொடர்பான விடயமாகும். இதில் நாடாளுமன்றத்திற்கு பொறுப்புண்டு. இது பொதுமக்களின் சொத்தாகும். 24

வலம்புரி நாளிதழின் 2018ஆம் ஆண்டு தெய்வீக வர்ண கலண்டர் உள்ளே...
உங்கள் பிரதியை கேட்டு வாங்குங்கள்

## நாடாளுமன்ற பிரச்சினைக்கு சபாநாயகரே காரணம்

### வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையில் எந்த பிரச்சினையும் இல்லை எனவும் சபாநாயகருக்கும் நாடாளு 23



## முதலமைச்சர் விக்னேஸ்வரனின் சிறப்புரையுடன் கருத்தமர்வு

### 16ஆம் திகதி பேரா.சொர்ணராஜா வழங்குகிறார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்குத் தமிழர் தம் உரிமைகளின் கேடயமாக சர்வதேச சட்டம் என்ற பொருளில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை பேராசிரியர் முத்துக்குமாரசாமி சொர்ணராஜா அவர்களின் விசேட கருத்துரை எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு 23

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கப்பலுடன் மீனவப் படகு மோதியதில் இருவர் பலி

(கொழும்பு)

தெய்வேந்திரமுனை கடற்பகுதியில் வாகனங்களை ஏற்றிச் சென்ற கப்பலொன்று மீனவப்படகொன்றுடன் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காணாமற் போயுள்ளனர்.

மீனவப்படகில் இருந்த மேலும் மூவர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

காணாமற்போன மீனவரை தேடும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக இரண்டு டோரா படகுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கமாண்டர் தினேஷ் பண்டார தெரிவித்தார்.

தெய்வேந்திர முனை கடற்பரப்பில் இருந்து 13 கடல்மைல் தொலைவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனங்களை ஏற்றிவந்த குறித்த கப்பல் சென்னையில் இருந்து கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளதுடன், அம்பாந்தோட்டை துறைமுகத்தை நோக்கி பயணித்த நிலையில் விபத்திற்குள்ளாகியுள்ளது. (ம)

**வேலைக்கு ஆள் தேவை**

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. கால்நடை வளர்ப்பில் ஆர்வமும் அனுபவமும் இருப்பதுடன் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ஆரம்ப சம்பளம் மாதம் 30, 000/- வழங்குவதுடன் பிற சலுகைகளும் உண்டு.

தொ.பே:0771681697, 0766205322 (க-1177)

# பயிற்சி வகுப்புக்களுக்கான திகதிகளில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் திணைக்களத்தினால் நாளை மற்றும் நாளை மறுதினம் நடைபெறவிருந்த, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் நாளை 2018.01.12 ஆம் திகதி நடைபெறவிருந்த பயிற்சி வகுப்பு 2018.01.18ஆம் திகதியாகவும், நாளை மறுதினம் 2018.01.13ஆம் திகதி நடைபெறவிருந்த பயிற்சி வகுப்பு 2018.01.15ஆம் திகதியாகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் ஆசிரியை இடமாற்றம் நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலய சங்கீத பாட ஆசிரியைக்கு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட நிபந்தனையுடனான இடமாற்றல் கடிதம் நீக்கப்படுவதாகவும், அந்த ஆசிரியைக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணை அறிக்கைக்கு அமைவாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது என யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

குறித்த ஆசிரியைக்கு வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதம் மீளப்பெறப்படுகிறது என்றும் அவருக்கு எதிராக எந்த ஒரு ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொண்டு முன்னெடுக்கப்படாது என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் முன்வைக்கப்பட்ட அறிக்கையையடுத்தே மேல் நீதிமன்றம் இந்தக் கட்டளையை வழங்கியுள்ளது. (ம-9)

# வயோதிபரின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நாவலடி புதிய முகத்து வாரம் கலப்பு பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று புதன்கிழமை காலை 11 மணிக்கு மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கலப்பு கரைப்பகுதியில் சடலம் ஒன்று நீரில் மிதப்பதாக, அப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து குறித்த பகுதிக்கு பொலிஸார் சென்று அடையாளம் காணப்படாத சடலத்தை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்டவர் முதியவர் எனவும் அடையாளம் காண பொதுமக்களின் உதவியை கோரியுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (ம)

## மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்

### திரு.இராமலிங்கம் அருணகிரிவாசன்

(யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி)

(11.01.2018)



அகவை அறுபதில் ஓய்வுபெறும் பிரதி அதிபர் உயர்திரு இராமலிங்கம் அருணகிரிவாசன் அவர்கள் 1993ஆம் ஆண்டு தொடக்கம் கணித பாட ஆசானாக கல்வி கற்பித்து மாணவர்களதும் ஆசிரியர்களினதும் நல்வழி காட்டியாக நிர்வாகத்துடன் ஒத்துழைப்பு நல்கியவர். பாடசாலையின் வளர்ச்சிப் படிகளில் அவரது பங்கு போற்றுதற்குரியது. புலம் பெயர்ந்து வாழும் எமது கல்லூரியின் பழைய மாணவர்களுடன் தொடர்பினை மேற்கொண்டு மாணவர்களின் கல்வி மேம்பாட்டை உயர்த்தவும், பௌதீக வளத்தை பெருக்குவதற்கும் காரண கர்த்தாவாக நின்று உழைத்தவர். இவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். தனது ஓய்வுக் காலத்தில் அவர் தம் குடும்ப சமேதராக சந்தோசமாகவும் சுக தேகியாகவும் வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை இறைஞ்சி வேண்டுகின்றோம்.

Best Wishes

அன்புடன் வாழ்த்தும்
செல்வி.பா.மார்க்கண்டு (ஓய்வுநிலை அதிபர்)
திருமதி ஜா.முத்துக்குமார் (ஓய்வுநிலை ஆசிரியர்)
திருமதி ச.சிவபாலன் (ஓய்வுநிலை ஆசிரியர்)
திருமதி வி.கடம்பமலர் (அதிபர்–யாழ்.கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்)

(2335)

## சேவைநலன் பாராட்டு

### உயர்திரு.சிவசம்பு விஜயரங்கன் அவர்கள்

(நிர்வாக உத்தியோகத்தர், விவசாய அமைச்சு, வட மாகாணம்)



அரச சேவையில் 30 வருடங்கள் பல்வேறு பதவி நிலைகளில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி இன்று (11.01.2018) தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் **உயர்திரு. சிவசம்பு விஜயரங்கன்** அவர்களின் சிறப்பான சேவையினைப் பாராட்டுவதுடன் அவர் இன்னும் பல ஆண்டுகள் தனது குடும்பத்தினருடன் நோய் நொடியின்றி மகிழ்ச்சியாக வாழ்ந்து பல சமூக சமய பணிகளை மேற்கொள்ள எல்லாம் வல்ல நல்லூர் முருகப் பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**செயலாளர் மற்றும்
உத்தியோகத்தர்கள்,
உத்தியோகத்தர்
நலன்புரிச் சங்கம், விவசாய
அமைச்சு, வட மாகாணம்**

(2363)

## துயர் பகிர்கின்றோம்

எமது சக பணியாளர் ச.பாலச்சந்திரன் (எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்) அவர்களின் அன்பு உறவுகளின் அகால மரணச் செய்தி கேட்டு ஆற்றொணாத் துயர் அடைகின்றோம். அன்னார்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.



தோற்றம் 24.09.1980 மறைவு 09.01.2018
**ச.ஜெயச்சந்திரன்**



தோற்றம் 17.11.1993 மறைவு 09.01.2018
**ந.அருண்**



தோற்றம் 27.07.1999 மறைவு 09.01.2018
**சி.சிந்துஜன்**



தோற்றம் 18.04.1999 மறைவு 09.01.2018
**சி.கிருஷ்ணரூபன்**

(சி-1180)

கட்/நெல். ப.நோ.கூ.சங்கம்
கரவெட்டி

சி.சிதம்பரநாதன், நா.கிருஷ்ணமூர்த்தி,
கா.சிவகேசன், ஆ.சங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழு அறிக்கை ஒருவாரத்தில் சபையில் சமர்ப்பிக்கப்படும்-சபாநாயகர்

(கொழும்பு)

மத்திய வங்கியின் பிணை முறி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை ஒரு வார காலத்தில் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்ததாக சபாநாயகர் தெரிவித்தார்.

பல்வேறு அரசியல் சர்ச்சைகள், கட்சிகளுக்கிடையிலான கருத்து முரண்பாடுகளுக்கு மத்தியில் நேற்று விசேட ப்ாராளுமன்ற அமர்வு சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடிய



# ஐ.தே.க.உறுப்பினர்கள் 60பேர் ஜனாதிபதி மைத்திரிக்கு ஆதரவு

(கொழும்பு)

மேல் மாகாண சபையின் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும் கொட்டிகாவத்தை முல்லேரியா பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான சுனில் லெஸ்லி உள்ளிட்ட பலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளித்துள்ளனர். ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்றுப் புதன்கிழமை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 60 பேர் அடங்கிய குழுவினர் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வருகை தந்து ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்ததாகவும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்கு பாடுபடவுள்ளதாக தெரிவித்ததாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன் பின்னர் குறித்த உறுப்பினர்களுக்கான உறுப்புரிமை வழங்கும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்வில் அமைச்சர் மகிந்த அமரவீர, பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொலன்னாவ தொகுதி பிரதான அமைப்பாளர் பிரசன்ன சோலங்க ஆராச்சி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்த தேசிய அரசாங்கத்தின் ஆயுட்காலம், கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி நிறைவடைந்தது. தேசிய அரசாங்கம் எதிர்வரும் 2020ஆம் ஆண்டுவரை நீடிக்குமென இரு தரப்பினரும் குறிப்பிட்டு வந்தாலும், அதனை நீடிப்பது குறித்து எவ்வித கருத்துக்களையும் இரு தரப்பினரும் வெளியிடவில்லை. அத்தோடு, இரு கட்சிகளும் தனித்து ஆட்சியமைப்பதிலேயே தீவிரம் காட்டி வருகின்றன.

இந்நிலையில், தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து மகிந்த அணியைச் சேர்ந்த மற்றும் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த பலர் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்தனர். எனினும், தேசிய அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து முதல்தடவையாக நேற்று பலர் ஜனாதிபதிக்கு ஆதரவளித்துள்ளனர்.

குறிப்பாக அரசாங்கத்திற்கு பாரிய சவாலாக அமைந்துள்ள மத்திய வங்கியின் பிணை முறி விவகாரம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் மீது பகிரங்க குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி தாம் சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இவ்விடயம் காரணமாக அரசாங்கத்திற்குள் கருத்து வேறுபாடுகள் நிலவுவதாக தகவல்கள் கசிந்திருந்த நிலையில், தற்போது ஐ.தே.க.வினர் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்துள்ளமை அரசியல் வட்டாரத்தில் பாரிய அதிர்வலைகளை தோற்றுவித்துள்ளது. (இ-7)

# டெங்கு நுளம்பை ஒழிக்க "Wolbachla" பற்றீரியா

(கொழும்பு)

'Wolbachla' எனும் பற்றீரியாவின் மூலம் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கான நியம வேலைத்திட்டமொன்றை அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சில பிரதேசங்களில் செயற்படுத்துவது தொடர்பில் சுகாதாரம், போசனை மற்றும் தேசிய மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரட்னவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

டெங்கு நோய் பரவுவதை தடுப்பதற்காக 'Wolbachla' எனும் பற்றீரியாவினை பயன்படுத்துவதன் சாதக தன்மை தொடர்பில் அவுஸ்திரேலியாவின் மொனேஸ் பல்கலைக்கழகம் வெற்றிகரமாக ஆய்வுகளை மேற்கொண்டு வெற்றி கண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்முறை தொடர்பில் அவுஸ்திரேலியா, வியட்நாம், இந்தோனேஷியா, பிரேசில் மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளில் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வெற்றியும் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சைட்டம் கல்லூரியை தடைசெய்யுமாறு பல்கலை. மாணவர்கள் ஆர்ப்பாட்டம்





(ஏறாவூர்)

மாலபே சைட்டம் தனியார் மருத்துகக் கல்லூரியின் பெயரை மாற்றி பதிவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளைக் கண்டித்து, சைட்டத்தை உடனடியாக மூடிவிட வேண்டுமெனக் கோரி, கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாக முன்றலில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவான மாணவர்கள்கலந்துகொண்டனர்

மாணவர்கள் தமது கோரிக்கைகளடங்கிய பதாகைகளை ஏந்தியவண்ணம் விடுதி பகுதியிலிருந்து புறப்பட்டு ஊர்வலமாக வந்து, பிரதான வீதியோரம் நின்று, தமது கோஷங்களை எழுப்பினர்.

"மருத்துவப் படிப்பை பணத்துக்கு விற்பனை செய்தால், பணம் படைத்தவர்களுக்கு வழங்கும் சலுகையாகவே அமையும். ஏழைகளைக் காப்பற்றுவதற்கும் எமது பெற்றோர், மாணவர்களைக் காப்பாற்றுவதற்கும் சைட்டத்தை உடனடியாக தடை செய்யுங்கள்" எனத் தெரிவித்தனர். (இ-7)

# அரசியல் யாசகராக என்னை நோக்காதீர்

## ரவி கருணாநாயக்க ஆவேசம்



(கொழும்பு)

அரசியல் யாசகராக தன்னை நோக்க வேண்டாம் என முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி பிணை முறி விவகாரம் தொடர்பில் நேற்று கொழும்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்.

நான் அரசியல் யாசகம் (பிச்சை) பெறும் ஒருவன் என நினைக்கின்றீர்களா?.. 8 மில்லியன் தொடர்பிலேயே கதைக்கின்றார்கள்.

8 மில்லியன் ரூபா மோசடி செய்வதற்குரிய நிதியா? 30-40-50 கோடி ரூபாய் மூலதனமுள்ள நிறுவனத்திற்கு குறித்த தொகை எதற்காக?

குறித்த அளவில் மூலதனம் கொண்டுள்ள நிறுவனத்தின் ஊழியர் ஒருவருக்கு 8 மில்லியன் ரூபாயில் வாடகை வீடு பெறமுடியாதா?

அர்ஜுன் அலோசியசினால் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் வீடு, தனது மகளால் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டது.

அதனை தவறு என்று யாராலும் கூற முடியாது. மத்திய வங்கி என்னுடைய கட்டுப்பாட்டிற்குள் காணப்படவில்லை.

ஆனால் அனைவருக்கும் தெரியும் மத்திய வங்கி யாருடைய கட்டுப்பாட்டிற்குள் காணப்பட்டது என்று என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரணிலும் மகிந்தவும் மைத்திரியும் ஒரே கூட்டணியை சேர்ந்தவர்கள்

## ஜே.வி.பியின் கே.டி. லால்காந்த விசனம்

(கொழும்பு)

ஊழல்வாதிகளுக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்குவதா? இல்லையா? என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, ரணில், மகிந்த, மைத்திரி ஆகியோர் ஒரே கூட்டணியைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்தார். மேலும், அரசாங்கத் தில் கொள்ளையிட்டவர்கள் உள்ளூராட்சி சபைகளிலும் கொள்ளையடிப்பார்கள் எனவும் லால் காந்த தெரிவித்தார். (இ-7)

# தேர்தல் விதி மீறல்கள் குறித்து அறிவிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபை தேர்தல்கள் தொடர்பாக இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் தேர்தல் விதி முறைக்கு அமையாத பிரசாரம் மற்றும் செய்திகள், தகவல்கள் குறித்தான முறைப்பாடுகளை மாவட்டச் செயலக குறைகேள் மையத்தின் 021 222 5000 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக அறிவிக்க முடியும் என யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானுடனான ஒரு நாள் தொடர்

# கப்ரில் கலக்கல்: நியூசிலாந்து வெற்றி



மார்ட்டின்கப்ரிலின் அரைச சதம் கைகொடுக்க, பாகிஸ் தானுக்கு எதிரான இரண்டா வது ஒரு நாள் போட்டியில், நியூசிலாந்து அணி 'டக் வொர்த்-லூயிஸ்' விதிப்படி, 8 விக்கெட்டுக்கள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கி றது. முதல் போட்டியில் நியூ சிலாந்து வென்றது.

இந்நிலையில் இரண் டாவது ஒரு நாள் போட்டி நேற்று நெல்சனில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித தலைவர் சர்ப்ராஸ் அகமட் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**ஹபீஸ் அரை சதம**

பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. இமாம் உல் ஹக் (2), அசார் அலி (6) ஒற்றை இலக்கில் திரும்பி னர். பாபர் அசம் (10), சோயப் மாலிக் (27), சர்ப்ராஸ் (3) நிலைக்கவில்லை. ஹபீஸ் (60) அரை சதம் கடந்தார். ஹசன் அலி 51, ஷடப் கான் 52 ஓட்டங்கள் எடுத்தனர்.

50 ஓவர்கள் நிறைவில் பாகிஸ்தான் 9 விக்கெட்டுக் களை இழந்த 246 ஓட்டங் களை எடுத்தது. அமிர் (8), ரம்மன் (6) ஆட்டமிழக்கா மல் இருந்தனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் அதிகபட்ச மாக பெர்குசன் 3 விக்கெட் டுக்களை வீழ்த்தினார்.

**மழையால் தாமதம்**

பின், களமிறங்கிய நியூ சிலாந்து அணிக்கு, முன்ரோ 'டக்' அவுட்டாகி அதிர்ச்சி அளித்தார். அணித் தலை வர் வில்லியம்ஸன் (19) கைவிட, கப்டில், றோஸ் ரெய்லர் ஜோடி அணியை மீட்டது. 14 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, மழை குறுக்கிட்டது.

2 மணிநேரம் 20 நிமிட தாமதத்திற்குப்பின் போட்டி ஆரம்பித்தது. நியூசிலாந்து அணியின் இலக்கு (25 ஓவரில் 151 ஓட்டங்கள்) இலக்கு மாற்றப்பட்டது. ஷடப் பந்தை சிக்ஸருக்கு பறக்க விட்ட கப்டில் அரை சதம் விளாசினார். இவருக்கு ரெய்லரும் ஒத்துழைப்பு தர வெற்றி எளிதானது.

நியூசிலாந்து அணி 23.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக் களை 151 ஓட்டங்கள் எடு த்து வெற்றி பெற்றது. கப்ரில் (86), ரெய்லர் (45) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

ஆட்ட நாயகன் விருதை கப்ரில் வென்றார். இதை யடுத்து, நியூசிலாந்து அணி தொடரில் 2-0 என முன் னிலை பெற்றது. மூன்றா வது போட்டி நாளை மறு தினம் 13ஆம் திகதி டுனிடி னில் நடக்கிறது.

# மாற்றம் வருமா... கலக்கம் தீருமா...



"தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ டில் பங்கேற்கும் இந்திய அணியில் பெரிய அளவில் மாற்றம் இருக்காது," என முன்னாள் அணித் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக கேப் டவுனில் நடந்த முதல் டெஸ்டில் இந்திய அணி, 72 ஓட்டங்கள் வித் தியாசத்தில் தோல்வியடைந் தது. இரண்டாவது டெஸ்ட் நாளை மறுதினம் 13ஆம் திகதி செஞ்சுரியனில் ஆரம் பமாகிறது.

முதல் டெஸ்டில் நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர் ரகானே சேர்க்கப்படாதது குறித்து விமர்சனம் எழுந் தது. இதனால் 2ஆவது டெஸ டில் ரகானேவுக்கு வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க் கப்படுகிறது.

இதுகுறித்து இந்திய அணி யின் முன்னாள் அணித் தலைவர் சௌரவ் கங்குலி கூறியதாவது.

தொடக்க வீரர் ஷிகர் தவான், ரோகித் சர்மாவின் டெஸ்ட் போட்டி செயற்பாடு களை எடுத்துப் பார்த்தால், அந்நிய மண்ணில் பெரிய அளவில் சோபிக்கவில்லை. இவர்கள், இந்திய மண்ணில் விளையாடிய டெஸ்டில் சிறப் பாக செயல்பட்டனர். இதே போல புஜாரா பதிவு செய்த 14 சதத்தில், 13 இந்தியா (10 சதம்) மற்றும் இலங்கை (3) மண்ணில் அடிக்கப்பட்டவை.

அதேநேரத்தில் அவுஸ்தி ரேலியா, மேற்கிந்தியத் தீவு கள், இலங்கை மண்ணில் ஓட்ட மழை பொழிந்த தொட க்க வீரர் லோகேஷ் ராகுல், சேர்க்கப்படாதது வியப்பாக இருந்தது. இதைப்போல, அந்நிய மண்ணில் ஓட்ட வேட்டை நடத்திய நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர் அஜின்கியா ரகானேவுக்கு இடம் கிடைக்காதது ஏன் எனத் தெரியவில்லை. கேப் டவுன் டெஸ்ட் போட்டியின் முடிவு, ஆச்சர்யம் அளிக்க வில்லை. ஆனால், அந்நிய மண்ணில் விளையாடக் கூடிய வீரர்களுக்கு இடம் கிடைக்காதது அதிர்ச்சி அளித்தது.

செஞ்சுரியன் டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி யில் பெரிய அளவில் மாற் றம் இருக்கப் போவதில்லை. ரகானே அல்லது ராகுலுக்கு வாய்ப்பு கிடைக்கலாம். தொடக்க வீரராக தவான் நீக் கப்பட்டு ராகுல் சேர்க்கப் படலாம் அல்லது நடுத்தர வரிசையில் ரோகித் சர்மா வுக்கு பதிலாக ரகானேவுக்கு இடம் கிடைக்கலாம். செஞ் சுரியன் ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக் கும். இங்கு, கேப் டவுன் ஆடு களத்தைவிட பந்து அதிக மாக 'பவுன்ஸ்' ஆகும் இதனை இந்திய வேகப்பந்து வீச்சா ளர்கள பயன்படுத்திக் கொண்ண டால் நல்லது. இப் போட்டிக்கு முன், இந்திய வீரர்கள் தங் களை சிறப்பாக தயார்படுத் திக் கொள்வது அவசியம். இவ்வாறு கங்குலி கூறினார்.

# மீண்டும் தலைவராக மத்யூஸ்

இலங்கை ஒரு நாள், 'ரி20' அணிகளின் தலை வராக மத்யூஸ் மீண்டும் நியமிக்கப்பட்டார்.

இலங்கை அணியின் 'சீனியர்' வீரர் மத்யூஸ் (வயது -30), மூன்று விதமான போட்டிகளுக்கும் தலைவ ராக இருந்தார். இவர் தலை மையிலான அணி, கடந்த ஜூலையில் சொந்த மண் ணில் ஒரு நாள் தொடரை சிம்பாப்வே அணியிடம் பறி கொடுத்தது. இதனையடுத்து, தலைமைப் பதவியிலிருந்து மத்யூஸ் விலகினார்.

**தொடர் தோல்வி**

அடுத்து, உபுல் தரங்க தலைமையிலான இல ங்கை அணி இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு எதிரான ஒரு நாள் தொடரை இழந்தது. இதனால், மீண் டும் தலைவரை மாற்றுவது என, இலங்கை அணி நிர் வாகம் முடிவு எடுத்தது. இதன படி, 6 மாதத்திற்குப் பின் மீண்டும் மத்யூஸ் ஒரு நாள், 'ரி20' போட்டி அணிக்கான தலைவராக நியமிக்கப்பட் டார். டெஸ்ட் தலைவராக சண்டிமல் தொடர்வார்.




இது குறித்து மத்யூஸ் கூறுகையில், "மீண்டும் தலைவராக தேர்வு செய்யப் படுவேன் என நினைத்தது இல்லை. ஆனால், இந்தியா வில் போட்டிகளில் பங்கேற்று நாடு திரும்பியபின், கிரிக் கெட் சபைத் தலைவர், பயிற் சியாளர் ஹத்துருசிங்கவுடன் ஆலோசனை நடத்தினேன். மீண்டும் தலைமைப பொறுப் பேறக வற்புறுத்தினர். சில நாட களுக்குப்பின், தற்போது ஏற் றுக்கொண்டேன்," என்றார்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் கல்வித் திட்ட பிரிவில் இணைந்து கல்வி கற்று வந்த



## வசந்தராஜன் சாரங்கன்

மு/மல்லாவி மத்திய கல்லூரியில் க.பொ.த உயர்தர பிரிவில் கணித பாடத்துறையில் கல்வி பயின்று 3A சித்திகளைப் பெற்றதோடு முல்லைத்தீவு மாவட்ட ரீதியாக 1ஆம் நிலையைப் பெற்று வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் கல்விப் பிரிவுக்கு பெருமை சேர்த்தமையையிட்டு வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் சார்பில் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன், தொடர்ந்தும் பல சாதனைகள் படைத்து எம் மக்களுக்கு சேவை செய்ய வாழ்த்துகின்றோம்.

தகவல்: கல்வித் திட்ட பிரிவு, வட்டு இந்து வாலிபர் சங்கம், யாழ்ப்பாணம்.

(C-1182)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 44 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முற்றவெளியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. கடந்த 1974 ஆம் ஆண்டு யாழில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது 11 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இவர்களின் நினைவாக முற்றவெளியில் யாழ்.வீரசிங்கம் மண்டபம் முன்பாக நினைவுத் தூபியும் அமைக்கப்பட்டுள்ளது. அந்த நினைவுத் தூபியில் வருடா வருடம் அவர்களின் நினைவுதினத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றன. இதற்கமைய இம் முறையும் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண கூட்டுறவுத்துறை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ப.கஜதீபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-உ.சாளின்)

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை தமிழினப் படுகொலையின் அங்கம்

## மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழினப்படுகொலையின் அங்கமாகத்தான் உலக தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நடைபெற்றது என தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழர் தாயகத்தில் நடைபெற்ற அனைத்து படுகொலைகளும் நினைவுகூரப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 44 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முற்றவெளியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் திகதியிலிருந்து ஒன்பதாம் திகதி வரை நான்காவது உலக தமிழாராய்ச்சி மாநாடு நிகழ்வுகள் நடைபெற்று பத்தாம் திகதி இறுதி நாள் பரிசளிப்பு நிகழ்வும், கௌரவிப்பு நிகழ்வும் திறந்தவெளியில் நடைபெற ஏற்பாடாகியிருந்த வேளையில் அன்றைய மேயர் அல்பிரட் துரையப்பாவினால் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், வீரசிங்கம் மண்டபத்தில் இறுதி நாள் நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

எனினும் இடவசதி போதாமையால் வெளியே மண்டபம் அமைக்கப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. அந்தநேரத்தில் பாராளுமன்ற



உறுப்பினர் சித்தார்த்தன் மற்றும் நான் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த வேளையிலே பொலிஸார் வருகை தந்து. வீதியை மறித்து நின்றவர்களோடு தகராறில் ஈடுபட்டு வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன்போது திட்டமிட்டு மின்சாரக் கம்பிகளை நோக்கியும் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்து பொது மக்கள் பலர் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்காணக்கான மக்கள் சிதறி ஓடினர். இது இனப்படுகொலையின் அங்கமாகத்தான் அன்று நடைபெற்றிருந்தது. இந்தக் கொடூரச் சம்பவம் நடைபெற்று இன்றுடன் 44 ஆவது ஆண்டுகள் கடந்துள்ளன.

இந்த நினைவு தினத்தை நாங்கள் ஒன்றுகூடி அனுஷ்டித்து கொண்டிருக்கின்றோம். விழ விழ எழுவோம் என்பது போல,

தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கத்தின் ஏற்பாட்டில் கட்டியெழுப்பினோம், மீண்டும் இருமுறை இடித்து அழித்தார்கள். எனினும் மீளவும் கட்டியெழுப்பினோம். பின்னர் 1995 ஆம் ஆண்டு இந்த நினைவுத் தூபி தமிழீழ விடுதலை கழகத்தினரால் புனரமைக்கப்பட்டு இந்த நினைவுச் சின்னம் தலை நிமிர்ந்து நின்று கொண்டிருக்கின்றது. இதில் கொல்லப்பட்ட அனைவருக்கும் எமது அஞ்சலிகளை செலுத்தி எமது இனம் சுதந்திரத்தை அடையும் வரை, தமிழ் மக்கள் தங்களை தாங்களே ஆளும் நிலை வரை, தமிழ்த்தேசியம் சுய நிர்ணய உரிமை தாயகம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், இந்த இனப்படுகொலைக்கு நீதி கிடைக்கும் வரையில் போராடுவோம் என்பதை இந்த அஞ்சலி நிகழ்வும் உறுதி எடுத்து ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். மேலும் தாயகத்தில் ஆங்காங்கே கொல்லப்பட்ட மக்களை தொடர்ந்தும் நினைவுகூர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## இராசி பலன்

11.01.2018

மார்கழி 27, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.33 மணிக்கு

தசமி முன்னிரவு 11.08 மணிக்கு

சுவாதி முற்பகல் 9.13 மணிவரை

சுபநேரம் 8.03-9.33 மணிவரை

இராகுகாலம் 2.03-3.33மணிவரை

கெர்ப்போட்ட முடிவு

அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி, விசாகம் | | ராகு |
| கேது | | | |
| சுக்,சனி சூரி, புத | | குரு, சந், செவ் | |

**மீனம்:** பிரயாணத்தின் போது விழிப்புணர்வு அவசியம், எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம், உடல் உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**மேடம்:** மறக்கமுடியாத இனிய சம்பவம் ஒன்று நடைபெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உடல் நலம் சீராகும்.

**இடபம்:** செய்தொழிலில் மேன்மையுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்ப மகிழ்ச்சி உண்டு.

**மிதுனம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கும்பம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**கடகம்:** சுப செலவுகள் இடம் பெறலாம், மதிப்பும் மரியாதையும் இடம் பெறலாம், வேலையில் அதிக் பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** ஆரோக்கியமான நாள், செய்தொழிலில் அதிக பரயாசை காட்டுவீர்கள், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், உடன் பிறப்புக்கள் ஒத்துழைப்புக்கள் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள், போசனக் குறைவுகள் ஏற்படலாம், சுபசெலவுகள் அதிரிக்கும் நாள்.


**துலாம்:** திட்டமிடப்படாத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** சுயமுயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வாக்குமேன்மையுண்டு, வீட்டுத்தேவைகளில் அக்கறை காட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சியுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் ஓயப்போவதில்லை

## சித்தார்த்தன் எம்.பி.தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

**தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு நீதியாக ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரையில் நாம் எமது போராட்டத்தில் இருந்து ஓயப்போவதில்லை என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்..**

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது படு கொலை செய்யப்பட்டவர்களின் 44 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முற்றவெளியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எமது இனம் மிகப்பெரிய படுகொலைகளை சந்தித்து வந்துள்ளது.

இந்த படுகொ லைகளில் 1974 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநட்டுப் படுகொலையானது தமிழ் மக்களிடையே பல அதிர்வ லைகளை ஏற்படுத்த அடிப்படையாக இருந்துள்ளது.

இந்தியாவில் இருந்து வந்த தலைவர்கள், எமது தலை வர்கள், ஆகியோரது உரைகளை அப்பாவி தமிழர்கள் கேட்டுக் கொண்டிருந்த போது பொலிஸார் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத் தியதால் மின்சாரக் கம்பிகள் அறுந்து மக்கள் துடிதுடித்து உயிரிழந்தனர்.

மேலும் பொலிஸாரின் தடியடிக்கு பயந்து அப்பாவி மக்கள் சிதறி ஓடிய போது நூற்றுக்கணக்கான மக்கள் படுகாயமடைந்தனர். இவ்வாறு எம்து வரலாற்றில் கறைபடிந்த நாளாக இந்த நாள் இருக்கின்றது. அதே நேரத்தில் -மக்கள் தமது உணர்வுகளை இதுபோன்ற நினைவு தினங்களில் வெளிக்காட்ட வேண்டும். மேலும் இந்த படுகொலைகளுக்கு நீதியாக இறுதித் தீர்வு எட்டும் வரையில் ஓயமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## டெங்கு நுளம்பு ஒழிப்பு

(யாழ்ப்பாணம்)

டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் எதிர்வரும் 17ஆம் 18 ஆம் திகதிகளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. டெங்கு நுளம்பு பெருகக் கூடிய சூழலை அகற்றி டெங்கு நுளம்பு தாக்கத்திலிருந்து பாதுகாக்குமுகமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய் தாக்கத்திலிருந்து விடுபட முடியும். இந்த தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலருக்கும் ஒத்துழைப்பு வழங்கி தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச்சந்தைகள், மயானங்களின் சுற்றுச் சூழலை துப்புரவாக பேணுமாறும், 17 ஆம் திகதி புதன் கிழமை நாவாந்துறை ஜே/88, ஜே /87 கிராம சேவகர் பிரிவுகளிலும், 18 ஆம் திகதி வியாழக்கிழமை வண்ணார் பண்ணை ஜே/100,ஜே /102, கிராம சேவகர் பிரிவுகளிலும் டெங்கு ஒழிப்பு களத்தரிசிப்பு நடைபெறும்.

இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அர, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்குபெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளுக்கு களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பி.ஜெசிதரன் அறிவித்துள்ளார். (இ)

## மத்தியஸ்த அமர்வு 13ம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

பிரதிஞாயிற்றுக்கிழமைநடைபெறும் நல்லூர் மத்திய ஸ்த சபைஅமர்வுதைப்பொங்கல்திருநாளை முன்னிட்டு 14.01.2018 இல் நடைபெற மாட்டாது.




இத்தினத்திற்குப் பதிலாக 13.01.2018 சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை அமர்வு இடம்பெறுமென மத்தியஸ்த சபைத் தவிசாளர் நா.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (இ)

## கலைஞர்கள் ஆவணக் காப்பகம்

(யாழ்ப்பாணம்)

அகில உலக கலைஞர் சங்கமானது உலகெங்கும் வாழ்கின்ற கல்லைஞர்களின் விபரங்களை பதிவு செய்து ஆவணமாக்கி வெளியீடு செய்யவுள்ளதால் இலங்கையில் வாழ்கின்ற தமிழ் கலைஞர்களும் தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், துறை போன்றவற்றை குறிப்பிட்டு, அகில உலக கலைஞர் சங்கத் தலைவர் பண்டிதர் பொன்.சுகந்தன், அகில உலக கலைஞர் சங்கம், மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி, கரவெட்டி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அகில உலக கலைஞர் சங்கத்தின் இலங்கைக்கான செயலாளரும் வைத்திய கலாநிதியும் எழுத்தாளருமான எம்.கே.முருகானந்தம் கேட்டுக் கொண்டுக் கொண்டுள்ளார். (இ)

## நாம் அனைவரும் ஒற்றுமையாக இந்த நாட்டில் வாழ வேண்டும்

### தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களின் உதவி குறித்து வடக்கு ஆளுநர் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய மாணவர்களுக்கு தென்னிலங்கையிலிருந்து வருகை தந்த வர்த்தகர் சஞ்சீவ ஜெயவர்த்தன மற்றும் நண்பர்கள் சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்களை வழங்கினர்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கற்றல் பொதிகளை வழங்கினார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் பாடசாலை அதிபர் வை.ஜெயகாந்தன் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன. தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.



புத்தகப்பை, பாதணி, அப்பியாசாகக் கொப்பிகள், தண்ணீர்ப்போத்தல்கள், பேனா, பென்சில் உள்ளிட்ட கற்றல் நடவடிக்கைக்கான அனைத்துப் பொருட்களும் வழங்கப்பட்டன.

ஆளுநரின் உதவிச் செயலர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், பிரத்தியேகச் செயலர் ஜே.எம்.சோமசிறி, மக்கள் தொடர்பு அதிகாரி நிசாந்த அல்விஷ் ஆகியோர் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

இங்கு உரையாற்றிய ஆளுநர், தென்னிலங்கையிலிருந்து சிங்கள மொழி பேசும் நண்பர்கள் உங்களுக்காக பல இலட்சம் ரூபாய் செலவளித்து இங்கே வந்திருப்பது நாம் அனைவரும் ஒற்றுமையாக இந்த நாட்டில் வாழ வேண்டும் என்ற செய்தியைச் சொல்வதற்காகவே. அவர்கள் அன்பு, இரக்கம், கருணை உள்ளிட்டவற்றினை மனங்களில் கொண்டு இங்கே உங்களுக்கு உதவி செய்ய வந்திருக்கின்றார்கள். உங்களிடமிருந்து எதனையும் அவர்கள் எதிர்பார்த்து இந்த உதவிகளைச் செய்யவில்லை. யுத்தத்தால் பின்னடிக்கப்பட்ட இந்த மாணவர்கள் தமது கல்வியில் உயர் நிலையினை அடைய வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கோடு இந்தக் கற்றல் உபகரணங்களை அங்கிருந்து கொண்டு வந்து உங்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

கொழும்பு பக்கத்திலே வெளிநாட்டிலே எல்லா இடங்களிலும் பெரிய உயர் பதவிகளை வகிப்பவர்கள் தமிழர்களே. பொறியியல் துறையிலும் மருத்துவத்துறையிலும் யாழ்ப்பாண தமிழர்களே சிறந்து விளங்குகின்றார்கள்.

எனவே நீங்கள் அந்த மாதிரி பெரிய ஆளாக வருகின்றபோது இன, குலம் மொழி பார்க்காது நாட்டில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் உங்களது கடமையினை வேறுபாடின்றி ஆற்ற வேண்டும்என்றே நான் எதிர்பார்க்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-60)

## புதிய மாணவர்களுக்கும் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் 2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. (உயர்) தர விஞ்ஞான, கலை, வர்த்தக, தொழில்நுட்பபிரிவுகளுக்கான வகுப்புக்கள் 15.01.2018 ஆம் திகதிதிங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதால் புதிய மாணவர்களும் அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (இ)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு பெரிய புலம் மஹா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம்பெறும். (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவரிடம் இலஞ்சம்; பொலிஸ் அதிகாரிகள் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

நாரஹேன்பிட்டியில் மருத்துவர் ஒருவரிடம் 80 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற முயற்சித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களான இரு பொலிஸ் அதிகாரிகளை பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் உபுல் தம்மிக்க மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சித்திரசிறி சுகதபாலா ஆகியோரே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு நீதிபதி சம்பத் அபேகோன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் குற்றம் சுமத்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளனர்.

கடந்த 2015ஆம் ஆண்டு சந்தேகநபர்கள் மருத்துவரிடம் 80 இலட்சம் ரூபாவை இலஞ்சமாகக் கோரி, அதில் 25 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டுள்ளதாக இலஞ்ச ஆணைக்குழு நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொலைச் சந்தேக நபர்கள் நால்வர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கடவத்தை - ரன்முதுகல பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இவர்கள் வசம் இருந்து கொலைக்காக பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, கொலையான நபரின் முதல் மனைவி உள்ளிட்ட நால்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை மஹர நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தபால் மூல வாக்குச் சீட்டு விநியோகம் ஒத்திவைப்பு

## வடக்கிற்கு திட்டமிட்டபடி நாளை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில், தபால் மூல வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டுக்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளை நாளை மறுதினம் 13 ஆம்திகதிவரை பிற்போட, தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இன்று முதல் தபால் வாக்குச் சீட்டுக்களை விநியோகிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருந்தது.

இந்தநிலையில், தபால் மூல வாக்குச் சீட்டுக்களுடன் வாக்காளர்களுக்கு அனுப்பப்படவிருந்த வேட்பாளர்கள் பட்டியல், அரச அச்சுத் திணைக்களத்தில் இருந்து கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டால் ஏற்படப் போகும் பாதிப்பு என்பவற்றை கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, தேர்தல்கள்ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய, தபால் மூல வாக்குச் சீட்டு விநியோகம் எதிர்வரும் 13 ஆம் திகதி இடம்பெறும் எனவும், வட மாகாணம் மற்றும் மட்டக்களப்பில் திட்டமிட்டபடி நாளை 12 ஆம் திகதியே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
உயர்பட்டப்படிப்புகள் பீடம்

# புதிய அனுமதிகள்

## முதுகலைமாணி-சைவசித்தாந்தம் 2018/2019 (அணி VI)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியரனவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏதாவது ஒரு கற்கைநெறியில் பட்டம்

**குறிப்பு:-** பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடிய வேறு தகைமைகளும் அனுபவமும் பரிசீலிக்கப்படலாம்.

**கற்கைநெறிக் காலம் : ஒரு வருடம்**
**மொழி மூலம் : தமிழ்**
**தெரிவு முறைமை : நேர்முகத்தேர்வு**
**கற்கைநெறிக் கட்டணம் : 85,000/-**
**விண்ணப்பப் படிவக் கட்டணம் : 1,000/-**

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை:**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையில் **162-1-001-8-0000902** எனும் கணக்கு இலக்கத்திற்கு கட்டணத்தை செலுத்தி உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

தபால்மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பப்படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23 X 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப் பதிவாளர், உயர் பட்டப்படிப்புகள்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் **www.grad.jfn.ac.lk** எனும் பல்கலைக்கழக வலைத்தள வசதியூடாகவும் (website) பெற்றுக் கொள்ளலாம். வலைத்தளம் மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/-பெறுமதியான காசுக் கட்டளையை/ மக்கள் வங்கியில் மேற் குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் கற்கை நெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 15.02.2018 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர் பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப் [illegible] கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்.**



இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

# விலை மனுக்கோரல்

## இலங்கை வங்கியின் தெரிவு செய்யப்பட்ட தங்க நகைப் பொதிகளின் விற்பனை

## கேள்வி இல. 2018/NP/01

இலங்கை வங்கியின் தெரிவு செய்யப்பட்ட தங்க நகைப் பொதிகளை விற்பதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விக்கான விண்ணப்பங்களை செயற்பாட்டு முகாமையாளர் (வடமாகாணம்), இலங்கை வங்கி, வட மாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் இடமிருந்து மீளளிக்கப்படாத தொகையாக கிளை ஒன்றிற்கு ரூபா 10,000/- + வரிகள் (VAT+NBT) இனையும், மீளளிக்கப்படும் தொகையாக கிளை ஒன்றிற்கு ரூபா 250,000/- இனையும் வைப்புச் செய்ததன் பின்னர் பெற்றுக் கொள்ள முடியும். (காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

விலை கோருபவர்கள் மீளளிக்கப்படும் மற்றும் மீளளிக்கப்படாத தொகைகளை வைப்பிலிடும் போது பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

வியாபார நிறுவனமெனின் - வியாபார பதிவுச் சான்றிதழ் பிரதி/ கூட்டிணைவுச் சான்றிதழின் பிரதி

தனிப்பட்ட நபரெனின் - தேசிய அடையாள அட்டையின் பிரதி/ சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் கிளையில் தங்க நகைப் பொதிகளை பரிசீலிக்க முடியும்.

| கிளைகள் | நடைபெறும் இடம் மற்றும் முகவரி | பரிசீலனைத் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|
| இலங்கை வங்கி<br>1.யாழ்ப்பாணம் இரண்டாம் மேற்தரக் கிளை<br>2.கரணவாய் கிளை<br>3.பூவரசங்குளம் கிளை<br>4.தொகுதி 1:<br>i.காரைநகர் கிளை<br>ii.நெடுந்தீவு கிளை<br>iii.காங்கேசன்துறை கிளை<br>iv.மருதன்கேணி கிளை<br>v.சாவல்கட்டுகிளை<br>vi.பூநகரி கிளை<br>vii.விசுவமடு கிளை<br>viii.செட்டிகுளம் கிளை<br>ix.மல்லாவி கிளை | இலங்கை வங்கி<br>யாழ்ப்பாணம் அதி மேற்தர கிளை | திகதி: 21.01.2018<br>நேரம்: மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணிவரை<br><br>பரிசீலனை நேரத்தினை விண்ணப்பதாரர்கள் வட மாகாண செயற்பாட்டு முகாமையாளர் ஊடாக முற்பதிவு செய்து கொள்ள வேண்டும்.<br><br>பெயர்: திரு.க.சகாதேவன்<br>தொலைபேசி இல:<br>021 222 4683,<br>077 512 1983 |

**கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம்: 23.01.2018 பி.ப. 3.00 வரை**

**கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி மற்றும் நேரம்: 24.01.2018 மு.ப. 10.00 வரை**

- விண்ணப்பதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட தங்க நகைப் பொதிகளுக்கு விலைகோர முடியும். அதேசமயம் அவ்விலை கோரல்கள் யாவும் ஒரே விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டு ஒரே கடித உறையினுள் இடப்படலாம்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம், விபரம் மற்றும் திறக்கப்படும் திகதி ஆகியன குறிப்பிடப்பட வேண்டும்.
- முத்திரையிடப்பட்ட விலை கூறல்களை 24.01.2018 (கேள்வி முடிவுத் திகதி) மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு உதவிப் பொது முகாமையாளர் (வடமாகாணம்), இலங்கை வங்கி, வடமாகாண அலுவலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இட வேண்டும். காலதாமதமாகிய விலை கூறல்கள் யாவும் நிராகரிக்கப்படுவதோடு திறக்கப்படாது விலை கூறியோரிற்கு மீள் அனுப்பப்படும். காலதாமதமான விலை கூறல்கள் தொடர்பாக தபாலில்'இட்டமைக்கான சான்றுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- விலை கூறல்கள் ஏற்கப்படும் முடிவு நேரத்தின் பின்னர் உடனடியாக கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.விலை கோரியவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி (விலைகூறிய ஒருவருக்கு ஒரு பிரதிநிதி) கேள்விகள் திறப்பின் போது சமுகமளிக்கலாம். தெரிவு சம்பந்தமாக தெரிவு செய்யப்பட்ட விலை கூறியோர்/களுக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளரினால் அறியத்தரப்படும்.
- தெரிவு செய்யப்பட்ட விலை கூறியோர், தெரிவு செய்யப்பட்டமை அறியத்தரப்பட்ட நாளிலிருந்து 3 வேலை நாட்களினுள் முழுத் தொகையையும் செலுத்த வேண்டும். முழுத் தொகையை செலுத்திய நாளிலிருந்து 7 நாட்களினுள் சம்பந்தப்பட்ட கிளையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட விலை கூறியவரிற்கு தங்க நகைப் பொதி கையளிக்கப்படும்.

**எக் காரணமும் குறிப்பிடாது விலை கூறல் எல்லாவற்றையும் அல்லது எவற்றையேனும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.**

தொலைபேசி இல:
021 222 3985

உதவிப் பொது முகாமையாளர்,
(வடமாகாணம்),இலங்கை வங்கி,
வடமாகாண அலுவலகம்,
ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

11.01.2018 (சி-1176)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்ரக வாகனத்தில் மறைத்து வைத்து கொண்டு செல்லப்பட்ட முதிரைக்குற்றிகள் மீட்பு

## சாரதி உட்பட இருவர் கைது



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரிப் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது தென்னை மட்டைக்குள் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட சுமார் ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய 8 முதிரைமரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் இதனை ஏற்றிச் சென்ற கப்ரக வாகனம் மற்றும் அதன் சாரதியுட்பட இரண்டு பேரையும் பூநகரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்

பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஏ-32 வீதியூடாக நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் சந்தேகத்திற்கிடமான கப்ரக வாகனம் ஒன்றை சங்குப்பிட்டிப்பாலத்தில் வைத்து பூநகரிப் பொலிஸார் சோதனையிட்டபோது, குறித்த வாகனத்தில் தென்னை மட்டைகளுக்குள் மறைத்து கொண்டு செல்லப்பட்ட சுமார் ஒரு இலட்சம்ரூபா பெறுமதியுடைய எட்டு முதிரை மரக்குற்றிகளை பொலிஸார் மீட்டுள்ளதுடன், குறித்த வாகனத்தையும் அதன் சாரதி உட்பட இரண்டு பேரையும் கைது செய்து விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த இருவரையும் சான்றுப்பொருட்களையும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-315)




# வடக்கு மாகாணத்தில் வாழ்ந்த மக்கள் நாடு முழுவதும் உயர்பதவி வகித்தார்கள்

## வடபிராந்திய சிவில் பாதுகாப்புக் குழுக்களின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பெருமிதம்





(கண்டாவளை)

முன்னைய காலத்தில் வடக்கு மாகாணத்தில் வாழ்ந்த எங்கள் மக்கள் நாடுமுழுவதும் உயர் பதவி வகித்தார்கள், இன்று இந்த நிலைமை மாறி விட்டதென வடபிராந்திய சிவில் பாதுகாப்புக் குழுக்களின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.கணேசநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு துணுக்காய் கல்விக்கோட்டங்களில் இருந்து 2017ஆம்ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை கௌரவிக்கின்ற நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்விற்கு முதல் நிகழ்வாக முதன்மை விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் பாண்ட் வாத்தியத்துடன் சென்றடைந்து அங்கு கௌரவிப்பு நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிற்கான பிரதிப்பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிக்கன்ன, சிறப்பு விருந்தினர்களாக வடபிராந்திய விசேட பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.கணேசநாதன், துணுக்காய் பிரதேச செயலாளர் எம்.பிரதாபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மேற்படி கல்விக்கோட்டங்களில் சித்தியெய்திய 31 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வடபிராந்திய விசேட பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.கணேசநாதன் முன்னர் பொலிஸாரைக் கண்டு மக்கள் ஓடுகின்ற காலம் போய் இப்போது பொது மக்களைத் தேடி பொலிஸார் வரும் காலம் உருவாகியிருக்கின்றது.

மாணவர்கள் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற காலம் குறிப்பிட்ட காலமாகும். இக்காலப்பகுதியில் மாணவர்கள் நல்ல முறையிலேயே கல்வி கற்று சமூகத்தில் சிறந்த மனிதர்களாக வாழவேண்டும்.

இப்போது இருக்கின்ற கலாச்சார பிறழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். முன்னைய காலத்தில் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தான் வைத்தியர்களாகவும் பொறியிலாளர்களாகவும் நாடுமுழுவதும் கடமையாற்றியிருந்தார்கள், தற்போது இந்த நிலைமை மாறி யிருக்கின்றது.

நாங்கள், கல்வியில் உயர்ந்த மனிதர்களாக வாழ வேண்டும். இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். துணுக்காய் பிரதேச செயலாளர் எம்.பிரதாபன் உள்ளிட்ட பலர் கலந்துரையாடியிருந்தனர். (2-315)

# யானைகளால் நெற்பயிர்கள் நாசம் பல இலட்சம் ரூபா நட்டம்

## கிழவன்குளம் விவசாயிகள் ஆதங்கம்

(மல்லாவி )

மாங்குளம் பகுதியில் உள்ள கிழவன் குளத்திற்குட்பட்ட 20 ஏக்கரில் நெற்செய்கையை மேற்கொண்டிருந்த விவசாயிகளின் நெற்பயிர்களை யானைக்கூட்டம் உள்நுழைந்து நாசமாக்கியதால் தாம் பல இலட்சம் ரூபா நட்டத்தை சந்தித்து நிர்க்கதியான நிலையில் உள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமது ஆதங்கத்தை தெரிவித்துள்ளார்கள். இது தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த சில நாட்களாக கிழவன் குளம் காட்டுப் பகுதியில் யானைகளின் நடமாட்டம் அதிகமாக இருந்ததுடன் எமது வயல்களுக்குள் நுழைந்து பயிர்களை நாசப்படுத்தியது. இதேவேளை காவலுக்கு இருந்த விவசாயிகளையும் தாக்கும் நோக்குடன் துரத்திச் சென்ற போது, விவசாயிகள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாங்கள் விவசாயத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் மற்றும் மாங்குளம் பொலிஸ் நிலையத்திலும் மாங்குளம் இராணுவ முகாமிலும் யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி உதவுமாறு கோரிக்கை விடுத்த போது மாங்குளம் பொலிஸார் எமக்கு யானைகளை விரட்டுவதற்கு சத்த வெடி பொருட்களை வழங்கி யானைகள் வரும் போது கலைப்பதற்கு பயன்படுத்துமாறு தெரிவித்தனர்.

இதற்கமைய நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விவசாயிகள் வயல் பரப்பில் காவலுக்கு இருந்த நிலையில் கூட்டமாக வந்த யானைகள் நெற்பயிர்களை நாசப்படுத்திய போது, தீப்பந்தங்களை எரிய விட்டும், தகரப் பொருட்களில் தட்டி ஒலி எழுப்பியதுடன் பொலிஸார் வழங்கிய சத்த வெடிகளையும் வெடிக்க வைத்த போது அவை நகராமல் விவசாயிகளை துரத்தி கலைத்த நிலையில், விவசாயிகள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

இந்த யானைத் தாக்குதல் காரணமாக கிழவன் குளத்தின் கீழ் மேற்கொண்ட 20, ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாகவும் இதனால் அரச வங்கிகள் மற்றும் தனியாரிடம் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாத அவல நிலையை தாம் எதிர் நோக்கியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமது ஆதங்கத்தை தெரிவித்துள்ளார்கள். (2-15)

# வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக பாதசாரிகள் கடவையை அமையுங்கள்

(பனிக்கன்குளம்)

வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாகவுள்ள வீதியில் பாதசாரிகள் கடவை இல்லாததால் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த முதலாம் திகதியிலிருந்து வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தனியார் மற்றும் இ.போ.ச. சேவைகள் நடைபெற்று வருகின்றன. எனினும் புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக பாதசாரிகள் கடவை அமைக்கப்படவில்லை.

சுமார் 195மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தப் பேருந்து நிலையத்துக்கு முன்பாக பயணிகள் பாதசாரிகள் கடவை அமைக்கப்படவில்லை.

இதன் காரணமாக பேருந்து நிலையத்திலிருந்து ஏ-9 வீதியைக் கடந்து செல்லும் பயணிகள் பெரும் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

விபத்து இடம்பெறலாம் என்ற பயத்துடன் ஏ-9வீதியைக் கடக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வடக்குப் பகுதிக்கான முதன்மையான கண்டி வீதியில் இரவு - பகலாக கனரக வாகனங்கள் பயணிக்கின்றன. விபத்துகள் இடம்பெறும் அபாயம் அதிகம் காணப்படுகின்றது.

ஆதலால் பாதசாரிகள் கடவையை அமைக்குமாறு பயணிகள், பொதுமக்கள் கோருகின்றனர். (2-281)

# கப்-ஆட்டோ விபத்து; சாரதி வைத்தியசாலையில்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மல்லாவிப் பகுதியில் கப்ரக வாகனம் ஒன்றுடன்வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஆட்டோ ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஆட்டோ சாரதி மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு-மல்லாவி பிரதான வீதி மல்லாவி பேருந்து நிலையத்திற்கு அருகில் மூன்றாம் யூனிற்றிலிருந்து பிரதான வீதிக்கு விரைந்த கப்ரக வாகனத்துடன் துணுக்காய் பகுதியிலிருந்து மல்லாவி நோக்கி வேகமாக வந்த ஆட்டோ மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது ஆட்டோவை செலுத்திச்சென்ற சாரதி காயமடைந்த நிலையில் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் பிற்பகல் 12.15 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இதில் மல்லாவி அனிஞ்சியன் குளத்தைச் சேர்ந்த எஸ்.சந்திரகுமார் (வயது-28) என்ற இளைஞனே காயம் அடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவராவார்.

இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-315)

# ஆதனவரி செலுத்த வரியிறுப்பாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது

## மேலதிக ஏற்பாடுகள் செய்யப்படும் என்கிறார் வவுனியா நகரசபை செயலாளர்

(குருமன்காடு)

வவுனியா நகர சபையில் ஆதனவரி செலுத்த வரியிறுப்பாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி இருப்பதால் மேலதிக ஏற்பாடுகளை செய்ய நடவடிக்கை எடுப்பதாக வவுனியா நகரசபை செயலாளர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தெரிய வருவதாவது.

வவுனியா நகரசபையில் ஆதனவரி செலுத்த வரியிறுப்பாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியேற்படுவதாக தெரிவிக்கின்றனர்.

2018ஆம் ஆண்டுக்கான ஆதனவரி செலுத்தும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஜனவரி மாதத்திற்குள் ஆதனவரியை செலுத்துவோருக்கு 10 வீதம் கழிவு வழங்கப்படும் என்பதனால் அதிகளவானோர் ஆதனவரியை தற்போது செலுத்தி வருகிறனர்.

இந் நிலையில் நகரசபையினால் இரு உத்தியோகத்தர்களே ஆதனவரியை பெறுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளதுடன் போதுமான ஏற்பாடுகளும்மேற்கொள்ளப்படவில்லை எனவும் வரியிறுப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக வரியிறுப்பாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்படுவதாகவும் சிலர் தமது வேலைப்பழு காரணமாக ஆதனவரியை செலுத்தாது செல்வதாகவும் வரியிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந் நிலையில் இவ்விடயம் தொடர்பாக வவுனியா நகரசபையின் செயலாளரிடம் வினவிய போது, இச் செயற்பாடு ஒன்லைன் மூலமாக செயற்படுத்தப்பட்டு வருவதனால் அவ்வாறான நிலை காணப்படலாம். இரு கணனிகளிலேயே இவ் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் வரியிறுப்பாளர்களுக்கு இதனால் அசௌகரியங்கள் எற்படும் பட்சத்தில் மேலதிக ஏற்பாடுகளை செய்ய தான் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 72 மாதிரி வீட்டுத்திட்டத்தில் வசித்த மக்கள் வசதிகளின்றி வீடுகளைவிட்டு வெளியேற்றம்



(கண்டாவளை)

மன்னார் வெள்ளாங்குளம் பிரதேசத்திற்குட்பட்ட கணேசபுரம் 72 வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் மக்கள் தமக்கான அடிப்படை வசதிகள் இன்மை, தொழில் வாய்ப்பின்மை மற்றும் வீடுகள் சேதமடைந்துள்ளமை என்பவற்றால் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு வெள்ளாங்குளம் பிரதேசத்திற்கு உட்பட்ட கணேசபுரம் கிராமத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் 2012 ஆம் ஆண்டு அமைத்து வழங்கப்பட்ட 72 மாதிரி வீட்டுத்திட்டத்தில் இலுப்பைக்கடவை, வெள்ளாங்குளம், கணேசபுரம், கள்ளியடி உள்ளிட்ட மாந்தை மேற்குப்பிரதேசத்தில் சொந்தக்காணிகளின்றி, வீடுகள் இன்றி வாழ்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு இக்குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றப்பட்டனர்.

குறித்த குடியிருப்பில் ஆரம்பத்தில் போதிய அடிப்படை வசதிகள் இன்மை, தொழில் வாய்ப்பின்மை காரணமாக இங்கு வாழ்ந்த குடும்பங்கள் பல தமக்கு வழங்கப்பட்ட வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவ்வாறு 72 வீடுகளில் 30 இற்கு மேற்பட்ட வீடுகள் ஆட்களற்ற வீடுகளாகவே காணப்படுகின்றன.

அத்துடன் குறித்த வீடுகள் உரிய முறையில் அமைக்கப்படாது தலா எட்டு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப் பட்டதாக குறிப்பிடப்படும் இவ்வீடுகள் அனைத்தும் சேதமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன என்றும் இவ்வாறு வீடுகள் ஆபத்தான நிலையில் காணப்படுவதால் அச்சத்துடன் வாழ வேண்டியிருப்பதாகவும் இங்கு வாழும் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை அமைத்துத்தருமாறும் இப் பகுதியில் ஒரு நிரந்தரத் தொழில் வாய்ப்பினைப் பெற்றுத் தரு மாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (2-315)

# 2 பிள்ளைகளின் தாயை காணவில்லை; பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு


(பனிக்கன்குளம்)

இரண்டு பிள்ளைகளின் தாயைக் காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா புதிய கற்பகபுரம் பகுதியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயைக் காணவில்லையென அவரது கணவரால் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப் பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி திங்கட்கிழமை மதியம் முதல் குறித்த பெண்ணை காணவில்லை என முறைப்பாட்டில் கணவன் தெரிவித்துள்ளார்

எனவே குறித்த பெண்ணை காண்பவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்குமாறும் 077-0745487 என்ற தனது தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தருமாறும் கணவன் கேட்டுள்ளார். (2-281)



(பனிக்கன் குளம்)

வவுனியா பட்டானிச்சூரிலுள்ள ஆ. இராசேந்திரனின் வீட்டுத் தோட்டத்தில் அதி கூடிய நிறையைக் கொண்ட இராசவள்ளிக்கிழங்கு அறுவடை செய்யப்பட்டுள்ளது.

இந்த இராசவள்ளிக் கிழங்குக் கொடியானது வெறு மனே 10 மாதங்களில் 30 கிலோ கிராம் நிறையுடன் காணப்படுகின்றது. அது மட்டுமன்றி இலங்கையிலேயே இது முதல் முறையாக எனவும் கருதப்படுகின்றது. (2-281)

# நீதிமன்ற உத்தரவை மீறி பாடசாலை காணியை கையகப்படுத்த முயற்சி

## பெற்றோர் ஆர்ப்பாட்டம்; பொலிஸார் தலையீடு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்ப்பட்ட பூதன்வயல் கிராமத்தில் 1986ஆம் ஆண்டு முதல் இயங்கிவந்த பாடசாலை காணி ஒன்றினை மீள்குடியேற்றத்தின் பின்னர் தனிநபர் ஒருவர் சுவீகரித்த நிலையில் மக்களால் பல்வேறு தரப்பினரிடமும் முறையிடப் பட்டும் பல வருடங்களாக தீர்க்கப்படாமல் இருந்த இந்த பிரச்சினை சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் நீதிமன்றுக்கு எடுத்துச்செல்லப்பட்டு கடந்த டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து நீதிமன்ற பதிவாளர் உள்ளிட்டோர் சென்று பாடசாலை நிர்வாகத்திடம் காணி கையளிக்கப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது

இருப்பினும் குறித்த தனிநபர் நேற்று முன்தினமிரவு வெடிகள் கொளுத்தி காணிக்குள் நுழைந்து நேற்று மாணவர்கள்,ஆசிரியர்களை பாடசாலைக்குள் செல்லவிடாது தடுத்துள்ளார்.

இந்நிலையில் பாடசாலை சிரமதானத்துக்கு மற்றும் மாணவர்களை அழைத்து சென்ற பெற்றோர் அதிபர், ஆசிரியர்கள் பாடசாலை வளாகத்துக்கு செல்ல விடாது தடுத்தமையால் அப்பகுதியில் முறுகல் நிலை ஏற்பட்டது

தொடர்ந்து அங்கு கூடியவர்கள் வாசலை மூடி வீதியை மறித்து போராட்டத்தில் குதித்தனர். இதனால் அப்பகுதியில் குழப்பநிலை ஏற்பட பாடசாலை அதிபர் முள்ளியவளை பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் சம்பவ இடத்துக்கு வருகைதந்த முள்ளியவளை பொலிஸார் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், கிராம அலுவலர், பாடசாலை அதிபர் மக்களுடன் கலந்துரையாடி குறித்த இடத்தில் அடாத்தாக குடியேறியிருந்த நபரை வெளியேற்றி பாடசாலை நடத்த ஏற்பாடுகளை செய்தனர்.

இதனைத் தொடர்ந்து போராட்டத்தை கைவிட்ட மக்கள் தமது இந்த பிரச்சனையை முற்று முழுதாக தீர்த்து பாடசாலை கட்டடங்களை அமைத்து எமது பிள்ளைகளின் கல்விக்கு வழிவகுக்குமாறும் கோரினர்.

இங்கு கருத்து தெரிவித்த பாடசாலை அதிபர் சிவராசா குகதாசன், பாடசாலைக்காக பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட காணியில் தனியார் ஒருவர் குடியிருந்தமையினால் நீதிமன்றம் ஊடாக பல்வேறு வழக்குகள் இடம்பெற்று கடந்த டிசெம்பர் 14 ஆம் திகதி பாடசாலைக்குரிய காணி தான் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்ட போதும் குறித்த தனிநபர் வீட்டினை விட்டு வெளியேற முடியாத நிலையில் கடந்த 4ஆம் திகதி நீதிமன்ற பதிவாளர் ஊடாக அவர்கள் சட்டரீதியாக வெளியேற்றப்பட்டு குறித்த காணி பாடசாலைக்கு என்று முல்லை வலய கல்வித்திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. நாங்கள் பாடசாலை செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் போது இன்று பாடசாலை துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்காக பெற்றோர்களை அழைத்திருந்தோம். இந்நிலையில் குறித்த பெற்றோர்களை காணிக்குள் செல்ல வேண்டாம் என்று காணிக்குள் வீடுகட்டிய குறித்த தனிநபர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த கிராமத்தில் ஆரம்ப கல்வியினை திறம்பட செயற்படவைக்க வேண்டும். இதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (2-281)




# வடமாகாண சுகாதார அமைச்சரின் பொலிஸ் பாதுகாப்பில் மாற்றம்

## குணசீலன் குற்றச்சாட்டு

(பனிக்கன்குளம்)

தனக்கு வழங்கப்பட்டுள்ள தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு கடந்த 4 வருடங்களாக எனக்கும் வழங்கப்பட்டிருந்தது.

மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸார் கடந்த 4 வருடங்களாக எனது மெய்ப்பாது காவலர்களாக கடமையாற்றி வந்தனர்.

இந்த நிலையில் தற்போது வடக்கு மாகாண சுகாதார அமைச்சராக நான் நியமிக்கப் பட்டுள்ள நிலையில் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு தற்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிலைய பொறுப்பதிகாரி கடமையை மட்டுப் படுத்தியுள்ளார்.

குறித்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் மன்னார் பொலிஸ் நிலைய பிரிவை தவிர வேறு எங்கும் செல்ல வேண்டாம் என மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

இதனால் அவர்கள் மீள பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய மாகாண சபை உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்களுக்கு பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ள பொலிஸார் கூடவே செல்லுகின்றனர். இவ்விடயம் தொடர்பில் வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதோடு,பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு செல்ல உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-281)

# கைவிடப்பட்ட சிசு பொலிஸாரால் மீட்பு

(கண்டாவளை)

கிளிநொச்சியில் சில மணி நேரங்களே நிரம்பிய சிசு ஒன்று பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்திய சாலைக்கு அண்மித்த பகுதியில் பெற்றோரால் கைவிடப் பட்ட சிசுவே இவ்வாறு கிளிநொச்சி பொலிஸாரால் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

சிசுவை இவ்வாறு கைவிட்டு சென்ற பெற்றோர் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315-312)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களை ஜேர்மன் நாட்டு ஊடகவியலாளர்கள் சந்திப்பு

(பனிக்கன்குளம்)



முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை வழங்குமாறு கோரி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக இன்றுடன் 309 ஆவது நாளாகவும் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில் இவர்களின் போராட்டத்திற்கு ஜேர்மன் நாட்டின் ஊடகவியலாளர்கள் நேற்றுமுன்தினம் வருகை தந்து அவர்களின் நிலைமைகளை நேரில் கேட்டறிந்து ஆராய்ந்தனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைத்தீவில் கடந்த மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக 309 ஆவது நாளாக தொடர்ந்து வருகிறது

இந்நிலையில் இவர்களின் போராட்டத்துக்கு எந்தவித பதில்களும் கிடைக்காத நிலையில் தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிடோம் என உறவுகள் தெரி வித்துள்ளனர்

அத்தோடு நேற்று முன்தினம் இவர்களின் போராட்டத்துக்கு ஜேர்மன் நாட்டின் ஊடகவியலாளர்கள் வருகை தந்து அவர்களது நிலைகளை கோரிக்கைகளை கேட்டறிந்தனர்

இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தலைமைகள் மீது குற்றத்தை உறவுகள் சாடியுள்ளனர். (2-281)

# தட்டுவன்கொட்டி பிரதேசத்திற்கான குடிநீர் திட்டம் 90 மில். செலவில் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி தட்டுவன் கொட்டிப் பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகத்திட்டம் 90 மில்லியன்ரூபாசெலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் குடிநீர்த்தட்டுப்பாடு நிலவும் தட்டுவன்கொட்டிப்பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகத் திட்டத்தை ஏற்படுத்துமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுக் கப்பட்ட நிலையில் இப் பகுதிக் கான குடிநீர்த்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.


தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையினூடாக தட்டுவன்கொட்டி உமையாள்புரம், ஆனையிறவு, ஆகிய பகுதிகளில் சுமார் 400 குடும்பங்களுக்கான குடிநீர் வசதியை ஏற்படுத்தும் வகையில் வேலைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

90 மில்லியன் ரூபாவுக்கான குறித்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்தரிசனம்





## மூத்த அண்ணாவியார் ப.அந்தோனிமுத்து அவர்களுடனான சந்திப்பு

"1989 ஆம் ஆண்டு ''திசைமாறும் உறவுகள்'' எனும் முழு நீளத் திரைப்படத்தைத் தயாரித்து தென்னிந்திய திரைப்படங்களுக்கு இணையான வரவேற்பைப் பெற்றுக் கொண்டார். இவர் நகைச்சுவை நாடகங்கள், சமூக நாடகங்கள், சமய நாடகங்களைத் தயாரித்து வழங்குவதோடு நாட்டுக் கூத்துக்களையும் அரங்கேற்றி சிறந்த அண்ணாவியாராக வலம் வருகின்றார். 1980இல் சுந்தரியின் சிரமதானம் எனும் நகைச்சுவை நாடகத்தை அரங்கேற்றி நகைச்சுவை மன்னன் என்ற பட்டத்தை அன்றைய கிராமசேவகர் நா. கணபதிப்பிள்ளை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

1957ஆம் ஆண்டு மார்கழி மாதம் பத்தாம் திகதி நெடுந்தீவில் பிறந்த இவர் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலத்தில் கலை மீதான நாட்டம் இவருக்கு ஏற்பட்டது. பாரம்பரியக் கலைகளை அழிய விடாது காக்க வேண்டும் என்பதில் உயிர்த்துடிப்புடன் செயற்பட்டு வருபவர். 2016இல் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகம் அவர்களினால் மூத்த அண்ணாவியாராகக் கௌரவிக்கப்பட்டார். மூத்த அண்ணாவியார் ப.அந்தோனிமுத்து அவர்கள் தன் கலைப்பணி பற்றி மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது."

✦ தாங்கள் விசயமனோகரன் நாட்டுக் கூத்தில் கட்டியனாகவும் சம்மனசாகவும் பாத்திரமேற்று நடித்து கலையுலகில் கால் பதித்தீர்கள். தங்களின் கலைப்பிரவேசம் பற்றி?

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்தேன். பாடசாலை கலை, கலாசாரத்தில் கலந்து கொண்டதை விட 7ஆம் தரத்தில் படிக்கும் போதே விசயமனோகரன் நாட்டுக்கூத்தில் கட்டியனாகவும் சம்மனசாகவும் நடித்தேன். அதுவே கலை உலகில் முதல் காலடி பதித்த நேரம். பின்னர் 8ஆம் தரத்தில் படிக்கும் போது அரசினால் நெடுந்தீவில் நாடக மன்றங்களுக்கிடையிலான நடைபெற்ற கலாசார போட்டியில் எமது மன்றத்தினால் போடப்பட்ட "மங்கம்மா சபதம்" நாட்டுக்கூத்தும் "அண்ணா" என்ற சமூக நாடகமும் முதல் இடங்களைப் பெற்றுக்கொண்டன. மங்கம்மா சபதத்தில் கட்டியனாகவும் "அண்ணா" நாடகத்தில் வழிப்போக்கனாகவும் நடித்து வெற்றி பெற்றது இன்றும் மறக்க முடியாத பசுமரத்து ஆணிபோல் உள்ளது. எமது நாடக மன்றமான "சென்.அன்ரனிஸ் நிலா ஜோதி" முத்தமிழ்நாடகமன்றமானது இப்போதும் நெடுந்தீவில் கலை கலாசாரத்தில் முன்னோடியாக திகழ்கின்றது. படிக்கும் காலத்தில் பெரியோர்களுடன் சேர்ந்து நடித்த நாட்டுக் கூத்தும் நாடகமுமே கலைப்பயணத்தில் நடிக் கும் அனுபவத்தையும் ஆர்வத்தையும் உண்டாக்கியது. பாடசாலையை விட்டு வெளியேறியதும் நாடக மன்றத்தினால் நடத்தப்படும் நாடகங்களில் நடித்தேன். மற்றவர்களினால் எழுதப்படும் நாடகங்களில் நடிக்கும் எனக்கு ஏன்? என்னால் என் கற்பனையில் நாடகம் எழுத முடியாதா? என்று சிந்தித்தேன். அந்தச் சிந்தனையின் வடிவம் தான் 1978 இல் "வியாபாரி" என்ற நகைச்சுவை நாடகம் எழுதி கதை ஆசிரியராக உருவாக்கம் பெற்றேன்.

✦ 1986 ஆம் ஆண்டு ''திசைமாறும் உறவுகள்'' எனும் முழுநீள திரைப்படத்தைத் தயாரித்தீர்கள். அந்த தயாரிப்பின் மூலம் தங்களுக்குக் கிடைத்த அனுபவம் பற்றி ?

நாடகத்துறையில் மிகவும் ஆழமாக காலூன்றிய எனக்கு மக்களின் ஆதரவும் கலை ஆர்வமும் பெருகத் தொடங்கியது. இதனால்தான் புதுப்புது படைப்புக்களை படைக்க வேண்டும் என என் மனம் சிந்திக்கத் தொடங்கியது. அந்த சிந்தனையின் வடிவம்தான் வீடியோ திரைப்படமான "திசைமாறும் உறவுகள்'' 1986ஆம் ஆண்டு இவ் வீடியோ திரைப்படத்தை தயாரித்தேன். முதலில் என் கற்பனையால் மூலக்கதையை வடித்தேன். இதற்கு அதிகமான நிதி தேவைப்படும் என்பதற்காக நடிகர்கள் தொகையை 20 ஆக்கினேன். இப்படம் தயாரித்த காலம் போர்க்காலம். அப்போது நெடுந்தீவு தனிமைப்படுத்தப்பட்ட காலம். நெடுந்தீவு தமிழீழ விடுதலை புலிகளின் ஆட்சியில் இருந்த காலம். ஒவ்வொரு நடிகருக்கும் இப்படத்திற்கான நிதியை சமமாக பங்கிடுவதென முடிவு. இப்படத்தில் நடிக்க இரு பெண்கள் தேவை. ஆனால் நடிப்பதற்கு இரு பெண்கள் கிடைக்காமல் பெண் நடிகைகள் தேடும் பயணத்தில் ஈடுபட்டேன். எனது கடும் முயற்சியின் காரணமாக எம் தீவிலேயே முதல் முதலாக இரு பெண்கள் நடிப்பதற்கு சம்மதித்தார்கள். இப்படத்திற்கு ''திசைமாறும் உறவுகள்'' என்றும் பெயரை சூட்டினேன். இப்படத்தினை படமாக்கும் கருவியோ படப் பிடிப்பாளரோ நெடுந்தீவில் எவரும் இல்லை.

நான் நன்கு விசாரித்ததில் புங்குடுதீவில் ஒரு திறமையான படப்பிடிப்பாளர் திரு. பன்னீர் என்பவர் இருப்பதாக அறிந்தேன். அவருடன் நான் ஒப்பந்தமும் செய்து கொண்டேன். ஆனால் அவர் தன் ஒலிப்பதிவு கருவிகளுடன் குமுதினிப் படகில் வர முடி யாது எனவும் தனக்கு பாதுகாப்பு பிரச் சினை இருப்பதாகவும் தனக்கு தனிப் படகு வசதி செய்ய வேண்டும் என்றார். அப்போது கடல் பாதுகாப்பு சட்டம் இருந்ததால் கடலில் குமுதினி படகு மட்டும் அனுமதிக்கப்பட்டி ருந்தது. கடலில் வேறு எந்தப் படகுகளுக்கும் கடலில் அனுமதி இல்லை. ஆனால் எப்படியும் படம் எடுக்க வேண்டும் என்ற கடும் ஆசையினால் படப்பிடிப்பாளருக்கு புங்குடு தீவுக்கும் நெடுந்தீவுக்கும் நேரடியாக இரவு நேரத்தில் போய் வரும் படகு வசதி செய்யப்பட்டது. நெடுந்தீவில் ''திசைமாறும் உறவுகள்'' படம் படமாக்கிக் கொண்டிருந்த வேளை படமாக்கும் கருவி (கமரா) பழுதடைந்து விட்டது.

இதனால் மீண்டும் படப்பிடிப்பாளர் வேறு கமரா கொண்டுவர புங்குடுதீவு பயணம் மேற்கொண்டார். புங்குடுதீவு சென்ற படப்பிடிப்பாளர் மூன்று நாட்கள் ஆகியும் திரும்பி வரவில்லை. அப்போது நெடுந்தீவில் சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருந்தது. படப்பிடிப்பாளரைக் காணாமல் மிகவும் வேதனையும் விரக்தியும் அடைந்த நான் எனது நண்பன் காலஞ்சென்ற ஆ.பவுன் என்பவருடன் ஒரு இறாத்தல் பாணும் தண்ணீரும் கொண்டு ஒரு சிறிய கட்டுமரத்தில் துடுப்பால் வழித்து புங்குடுதீவு சென்றோம். அன்றிரவே படப்பிடிப்பாளருடன் வந்து மீண்டும் படப்பிடிப்பு செய்து ''திசைமாறும் உறவுகள்'' எனும் திரைப்படம் வெளியிட்டோம். இத்திரைப்படம் நெடுந்தீவில் மட்டுமல்ல வெளி ஊர்களிலும் வெற்றியின் உச்சக்கட்டத்தை தொட்ட படமாகும். இப்படத்தில் நெடுந்தீவின் வரலாற்று சின்னங்களான மன்னர் கோட்டைகள், பெருக்கு மரத்தடி, குமுதினி நினைவுத்தூபி, பழைய தண்ணீர் தாங்கி, குதிரைகள் போன்றவற்றையும் கடலில் படகுகளில் சண்டைகளும் நெடுந்தீவு வைத்தியசாலை, பாடசாலைக் காட்சிகளும் நிறைந்த மாபெரும் வெற்றிப் படமாகும். இப்படத்தினால் ஏற்பட்ட அனுபவங்கள் பெறுமதிமிக்கது. சாகாவரம் பெற்றது. நான் இந்தியாவுக்கு குடும்பத்துடன் அகதியாக சென்ற வேளை எம் உறவினரிடம் இப்படக் கொப்பியை கொடுத்து விட்டுச் சென்றேன். திரும்பி வந்து திசைமாறும் உறவுகள் படக்கொப்பியை பெற்றுக்கொண்டேன். பழுதடைந்த நிலையில் இப்படக் கொப்பி இப்போது என்னிடம் இருக்கின்றது.

✦ தாங்கள் 1978ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை நகைச்சுவை நாடகங்கள், சமூக, சமய நாடகங்கள், நாட்டுக் கூத்துக்கள் எனப் பல்வகையான அளிக் கைகளைச் செய்து வருகின்றீர்கள். தாங்கள் தயாரித்து அரங்கேற்றிய நாடகங்கள் பற்றி?

1978-வியாபாரி,1980-சுந்தரியின் சிரமதானம், 1984-நட்டத்தின் மேல் நட்டம், 1985-டிஸ்கோ நவரசம்,1998-நவீன திருவிளையாடல், 2015 மூடடி வாயை, 2016-ஆண்சிங்கமடி ஆகிய நகைச்சுவை நாடகங்களையும் 1979-அன்பின் சுடர், 1981- சிந்திய முத்துக்கள், 1982-தவிக்கும் உறவுகள், 1986-உயர்ந்த உள்ளம், 1986-இதய ராகம், 1988-சோகமே வாழ்க்கை, 1989-மலர், 1990-அவலக்குரல், 1995-இனிய நிலா, 1996-நெஞ்சில் ஆடும் உஷா, 1997-யானி தேடும் கனி, சாரி, 1998-நதிக்கரை ஓரத்திலே, 2013-சந்தித்த வேளை, 2014-என்றும் பிரியமுடன் ஆகிய சமூக நாடகங்களை யும் 1989-மனமாற்றம், நத்தார் பரிசு, 1995-இயேசு காவியம் ஆகிய நாடகங்களையும் 2014-அண்ணன் கட்டியதாலி, 2015-மாறிய நெஞ்சம்,தந்தை சொல்லைத் தட்டாதே, 2016-தந்தையைக் கொன்ற மகன்,2017-மகுடம் காத்த மங்கை ஆகிய நாட்டுக் கூத்துக்களையும் 1982-சோக ராகம், 1989-மலரும் நிகழ்வுகள், 1997-வாடும் நெஞ்சங்கள் ஆகிய தலைப்பில் இசையும் கதையும் 1996-அன்றிலிருந்து இன்றுவரை 1996-பல்சுவை நிகழ்ச்சி ஆகிய புதிய நாடகங்களுமாக 35 இற்கு மேற்பட்ட நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றினேன்.

✦ தங்களுடைய கூத்துக்களில் இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள், முதியவர்கள் எனப் பலரையும் உள்வாங்கி அரங்கேற்றுகிறீர்கள். அவர்களை எவ்வாறு தெரிவு செய்கிறீர்கள்?

எனது நோக்கம் நாட்டுக்கூத்தானது இன்னும் 10 வருடங்களாவது இளைஞர்கள் கொண்டு செல்ல வேண்டும். அதிகமாக இளைஞர்களையும் ஓரிரு சிறுவர்களையும் கூத்துக்களில் அவசியம் சேர்க்க வேண்டும். அண்ணாவியாராகிய நான் நகைச்சுவை மன்னன் என்பதால் பிறருடன் கதைக்கும் போது பிறரை சிரிக்க வைக்கும் தன்மை என்னிடம் இயல்பாக உள்ளது. நான் கதைத்துக் கொண்டிருக்கும் இடம்தேடி இளவட்டம் வரும். அல்லது அவர்களைத் தேடிச்சென்று அவர்களுடன் அவர்களின் வயதுக்கேற்ற கதைகள் கதைத்து அவர்களைச் சிரிக்க வைப்பதுடன் கதைகளுக்கிடையேயும் காணும் போது அடுத்த நாட்டுக்கூத்தில் நீதான் அரசன் அல்லது மந்திரி என்று நகைச்சுவையுடன் கூறி நாட்டுக்கூத்து ஆசையை மெதுவாக ஏத்துவேன். அவர்கள் முதலில் மாட்டேன் என்று அடித்துக் கூறுவார்கள். பின்பொருநாள் நடித்து பழக்கமில்லை என்பார்கள். மற்றொரு நாள் எனக்கு பயமாக இருக்கு மாஸ்டர் என்பார்கள். கடைசியாக உன்னை நம்பித்தான் நடிக்கிறேன். என்மானம் மரியாதையெல்லாம் உங்கள் கையில் தான் என்பார்கள் .இவர்களை விட இவர்களது பெற்றோர்கள், உறவுகள் இவர்களை விட என்னிடம் வந்து மிகவம் சந்தோசம் கொண்டாடுவார்கள்.


✦ கலையுலகில் 49 வருடங்களாக சிறந்து விளங்கும் தாங்கள் கலையுலகிற்கு மனந்திறந்து கூறுவது?

கலையோடு தொடர்புடைய பல துறைகள் உண்டு. அதில் நாடக நாட்டுக்கூத்து துறை என்பது பல பேர் சேர்த்து பலதொகை செலவழித்து பாரம்பரியங்களை என்றும் தொண்டு செய்ய வேண்டியது. ஒவ்வொரு நாடக மன்றங்களுக்கும் நாடக நாட்டுக் கூத்துக்கு பயிற்சிப் பட்டறைகள் அமைத்து பயிற்சிகள் கொடுக்கவேண்டும். பயிற்சிகளுக்காக போதிய நிதிவசதிகள் செய்தல் வேண்டும். நாடக நாட்டுக்கூத்துக்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு தகுந்த சன்மானங்கள் வழங்க வேண்டும்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களுக்கு முதலமைச்சரின் அறிவுரை



(யாழ்ப்பாணம்)

2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட்மாதம்நடைபெற்றக.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்துவிட்ட நிலையில் வடபகுதி மாணவர்களில் குறிப்பிட்ட வகுதியினர் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முன்னிலை வகிப்பது வாழ்த்துக்குரியது. அதேபோன்று கணிதத்துறையில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற தமிழ் மாணவனின் அயரா உழைப்பும் புத்திக் கூர்மையும் பாராட்டுக்குரியது. நாம் எமது பழைய நிலைக்குச் செல்ல ஆயத்தமாகி வருகின்றோம் என்பது புலனாகின்றது என வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்தவர்களில் முதன்மை நிலைகளை வகிக்கக் கூடிய ஒரு தொகுதி மாணவர்கள் மருத்துவத்துறை, பல் வைத்தியத்துறை, மிருக வைத்தியத்துறை மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்று பல்கலைக்கழகங்களுக்கு செல்கின்ற அதேநேரம் 03 பாடங்களில் சித்தி பெற்றும் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகாத பல நூற்றுக் கணக்கான மாணவ, மாணவியரில் ஒரு சிலர் இரண்டாவது தடவை பரீட்சைக்காக தம்மைத் தயார் செய்கின்ற போதும் ஏனைய மாணவர்கள் எதிர்காலம் பற்றிய எந்தவித ஆக்கபூர்வமான வழிமுறைகளும் தெரியாத நிலையில் வீட்டில் முடங்கிக் கிடக்கின்றார்கள். இதனை நான் புதன்கிழமைகளில் மக்களைச் சந்திக்கும் போது அவதானித்து வருகின்றேன். மிகச் சொற்ப மாணவ, மாணவியர் தவறான முடிவுகளுக்குக் கூட சென்று விடுவது வேதனையளிக்கின்றது.

விஞ்ஞானத் துறையில் 03 பாடங்களில் சித்தியடைந்த மாணவ, மாணவியருக்கு தாதியர் சேவை.மருந்தாளர் சேவை, க்திரியக்கவியலாளர் சேவை. கண், காது தொழில்நுட்பவியலாளர் சேவை, ஆய்வுகூடப் பரிசோதகர் சேவை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சேவை என பல்வேறுபட்ட தொழில் வாய்ப்புக்கள் அதி கூடிய ஆரம்பச் சம்பளத்துடன் இருக்கின்ற போதும் இம் மாணவ, மாணவியர் அவற்றில் ஆர்வம் காட்டாது சோம்பி இருக்கின்றமை தவிர்க்கப்பட வேண்டியது. பலருக்கு இவ்வாறான இடைவெளிகள் இருப்பது பற்றித் தெரியாதுள்ளது.

அதேபோன்று உயிரியல் துறையில் இரு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் கூட

1.குண்டசாலை விவசாயக் கல்லூரி

2.வவுனியா விவசாயக் கலலூரி

3.அம்பாறை ஹார்டி தொழில்நுட்பக் கல்லூரி

ஆகியவற்றில் இணைந்து கொண்டு விசேட தேர்ச்சிகளைப் பெறலாம். எதிர்பார்க்கப்பட்ட சம்பள அளவுத் திட்டங்களுக்கு மேலதிகமாக ஊதியங்களைப் பெறவும் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளவும் வழிவகைகள் காணப்படுகின்ற போதும் இவை பற்றிய விழிப்புணர்வுகளை எம் மாணவர்களிடையே எடுத்துச் செல்லாத காரணத்தால் அவர்களில் பெரும்பாலானவர்கள் இவை பற்றி அறியாது அல்லது அதிகளவு நாட்டம் காட்டாமல் இருந்து விடுகின்றார்கள்.

வர்த்தகத் துறையில் அல்லது முகாமைத்துவத் துறையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்ற மாணவர்கள் தமது பல்கலைக்கழக பட்டப் படிப்பினை நிறைவு செய்த பின்னர் வங்கிகளிலோ அல்லது அரச துறைகளிலோ குறிப்பிட்ட சில தொழில் முயற்சிகளில் தம்மை இணைத்துக்கொள்ள முடியும். உதாரணமாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் 80% இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுகின்ற மாணவர்கள் ஒரு மருத்துவராகவோ அல்லது பொறியியலாளராகவோ அல்லது கணக்காளராகவோ அல்லது ஆசிரியராகவோ வங்கி ஊழியராகவோ நியமனத்தைப் பெற முடியும். ஆனால் க.பொ.த. உயர்தரத்தில் 60% இற்கும் 80% இற்குமிடையே புள்ளிகளைப் பெறுகின்ற மாணவ, மாணவியர் மேலே குறிப்பிட்ட மாணவர்களின் நேரடி அதிகாரிகளாக அவர்களின் கடமைகளை கண்காணிப்பவர்களாக அமர்ந்திருக்க வாய்ப்புண்டு. அதேபோன்று 50% இற்கு மேற்பட்டதும் 60% க்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவ, மாணவியரில் சிலர் அனைவருக்கும் மேலாக முதன்மைத்தர முகாமையாளர் பதவிகளை அலங்கரிப்பது பல வேளைகளில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இம் மாணவ, மாணவியர் தாம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 80% புள்ளிகளுக்கு மேல் பெறுகின்ற மாணவர்களே தப்பிப் பிழைப்பர்.ஏனைய மாணவர்கள் வேலைவாய்ப்பை இழந்தவர்களாக மாற்றப்படுவார்கள் என்ற தவறான கருத்தை தங்கள் மனதில் இருந்து அகற்றிக் கொள்ள வேண்டும். எந்தத் துறை மீது ஆர்வம் இருக்கின்றதோ மாணவ, மாணவியர் அந்தத் துறையில் தொடர்ந்து கற்பதற்கும் முன்னோக்கிப் பயணிப்பதற்கும் உயர்ந்த பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் வழி வகுக்கக்கூடிய கல் வித் துறைகளை தேர்ந்தெடுக்க முன்வர வேண்டும். எமது எல்லா மாணவ, மாண வியரின் எதிர்காலமும் சிறப் புற விளங்க ஆசீர்வதிக் கின்றேன் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-7)

# திடீரென தீப்பற்றிய ஆட்டோ



(கொழும்பு)


கொழும்பில் வீதியில் சென்று கொண்டிருந்த ஆட்டோ ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

மருதானை வைத்திய சாலைக்கு முன்னால் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீப்பற்றியமைக்கான காரணம் என்ன என இன்னமும் தெரியவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் எரிந்த ஆட்டோவுக்கு அருகிலிருந்த அனைத்து வாகனங்களையும் அங்கிருந்து அகற்றியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# விடுதலைப்புலிகளின் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தென்னிலங்கை இளைஞர்கள் புதிய கண்டுபிடிப்பு




(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தொழில்நுட்ப வழிமுறைகளை பயன்படுத்தி, தென்னிலங்கை இளைஞர்கள் சிலர் படகு ஒன்றை தயாரித்துள்ளனர்.

ஆட்டோவை பயன்படுத்தி கடலில் பயணிக்கும் இயந்திரம் ஒன்றை இளைஞர்கள் சிலர் கண்டுபிடித்துள்ளனர்.

ஆட்டோவுக்கு சில இயந்திரங்களைப் பயன்படுத்தி அதில் வெற்றிகரமாக கடலில் பயணிப்பதற்கான முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தகவல்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த முயற்சி வெற்றியளித்தால், இதனை மேலும் விருத்தி செய்து தூர இடங்களுக்குப் பயணிக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களுக்கு தேவையான இயந்திரங்களை, அங்குள்ள வளங்களை கொண்டு தயாரித்து வெற்றி கண்டிருந்தனர்.

இவ்வாறு தயாரிக்கப்பட்டவையில் கடற்கரும்புலிகளுக்கு தேவையான படகுகள் சிறப்பு வாய்ந்ததாகும். விடுதலைப் புலிகளின் தொழில்நுட்ப உத்திகள் சர்வதேசத்தை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது.

இந்நிலையில் அதே பாணியில் தென்னிலங்கை இளைஞர்களும் கடலில் சவாரி செய்யும் ஆட்டோ படகினை தயாரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வில்பத்து வனப்பகுதி அழிகிறது சூழலியலாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வில்பத்து வனப்பகுதிக்கு அருகாமையில் நிர்மாணிக்க திட்டமிட்டுள்ள கீழ் மல்வத்து ஓய நீர்த்தேக்க செயற்றிட்டம் காரணமாக 19 ஆயிரத்திற்கும் அதிகமாக ஏக்கர் வனப் பகுதி அழிவடையும் என சூழலியலாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இயற்கையை கண்காணிக்கும் மத்திய நிலையத்தின் தேசிய இணைப்பு அதிகாரி ரவிந்ர காரியவசம் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

இந்தச் செயற்றிட்டத்திற்கான அடிக்கல் அண்மையில் நாட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அதிகளவில் யானைகள் சஞ்சரிக்கும் பரம்பிக்குளம், தெதிவெவ, சின்னம்பிக்குளம், முதிலியகுளம் மற்றும் வில்பத்து ஆகிய காடுகளே அழிக்கப்படவுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)



சீரடி சாயிபாபாவின் நூறாவது சமாதி ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரத்ததான முகாம் ஈழத்து சீரடி சாயி மந்திர் ஆலயத்தில் நடைபெற்றது. இதில் பக்தர்கள் பல கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதம்



## போக்குவரத்து ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்த உத்தேசம் முதல்வர் தெரிவிப்பு



(சென்னை)

போக்குவரத்து ஊழியர்களின் சம்பளத்தை 2.44 மடங்கு உயர்த்த உத்தேசித்துள்ளதாகவும், அதனை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சட்டசபைக் கூட்டத்தில், போக்குவரத்து ஊழியர்களின் பிரச்சினை குறித்து எதிர்க்கட்சி கள் கேள்வி எழுப்பிய போதே முதல்வர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தற்போதுள்ள நிலைமையினை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். அரச போக்குவரத்து கழகம் நட்டத்தில் இயங்குகிறது. எனவே இந்த சம்பள உயர்வை ஏற்று, மக்களின் நிலைமையை கருத்தில் கொண்டு ஊழியர்கள் பணிக்குசெல்ல வேண்டும். அதேபோன்று உயர் நீதி மன்றம் இரண்டு தடவைகள் ஊழியர்கள் பணிக்கு செல்ல வேண்டும் என உத்தர விட்டுள்ளது. அதை மதித்து பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

## கட்சிக்கு களங்களம் ஏற்படுத்த விரும்பமாட்டேன்-மதுசூதனன்

(சென்னை)

கருணாநிதியை எதிர்த்து பொதுக்குழுவுக்குப் போய் அந்த பொதுக்குழுவில் இருந்து அ.தி.மு.கவை உருவாக்க நானும், வண்ணை மு. பாண்டியனும் சேர்ந்து ஆரம் பிக்கப்பட்ட இயக்கம். இந்த இயக்கத்திற்கு களங்கம் ஏற்ப டுத்த விரும்பமாட்டேன் என அ.தி.மு.க. அவைத் தலைவர் மதுசூதனன் தெரிவித்துள்ளார்.

ஆர்.கே.நகர் தோல்வி தொடர்பாக அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி கடிதம் கொடுத்ததாக வெளியான தகவல் குறித்து மதுசூதனனிடம் செய்தியாளர் கள் கேட்ட கேள்விக்கு, அது கட்சி இரகசியம் என்று பதிலளித்தார்.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் ஆளும் அ.தி.மு.க. அரசு சார்பில் போட்டியிட்ட கட்சியின் அவைத்தலைவர் மதுசூதனன். குக்கர் சின் னத்தில் போட்டியிட்ட சுயே ச்சை வேட்பாளர் தினகரனிடம் 40,707 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். இது கட்சி தொண்டர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதையடுத்து கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும் முதல்வருமான எடப்பாடி பழனிச்சாமி ஆகியோருக்கு மதுசூதனன், இடைத்தேர்தல் பணியில் அமைச்சர் ஜெயகுமார் தாமதம் காட்டியதே தோல்விக்குக் காரணம் என்றும் இரு அணிகள் இணைப்புக்குப் பிறகு உண்மையில் மனங்கள் இணைந்து தான் இருக்கின்றனவா?. தி.மு.க, தனது தோல்வி குறித்து ஆராய்ந்து தேர்தலில் பொறுப்பாளர்களாக நியமிக்கப்ப களை கூண்டோடு நீக் கியுள்ளனர். ஆனா போது வரை தோல்வி குறித்து அ.தி.மு.க. எந் ஷ் கூட்டமும் நடத்த வில்லை. ஜெயலலிதா திருந்தால், இவ் வாறு நடந்திருக்குமா என இரு அணிகள் இணைப்புக்குப் பிறகு உ யில் மனங்கள் இணைந்து தான் இருக்கின்ற உள்ளிட்ட 14 கேள்விகளை கேட்டு கடிதம் யிருப்பதாகவும் தகவல் வெளியானது. அமைச்சர் ஜெயக்குமார் மீது 7 நாட் களுக்கு வடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இ யென்றால் அவைத்தலைவர் என்ற முறைய நடவடிக்கைகளை தன்னிச்சையாக மேற்கெ வேண்டியிருக்கும் என்று அந்த கடிதத்தில் ரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்

இந்த விவகாரம் அரசியலில் பரபரப் படுத்திய நிலையில், இதுபற்றி மதுசூதன செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இ பதிலளித்த மதுசூதனன், 'நான் கடிதம் தேனோ? இல்லையா? என்பது ஓபிஎ இபிஎஸ்க்கு தெரியும். என் னைப் பொ வரை அது கட்சி இரகசியம்.

நான் கட்சியை மதிப்பவன். கருணாநி எதிர்த்து பொதுக்குழுவுக்குப் போய் பொதுக்குழுவில் இருந்து அ.தி.மு.கவை வாக்க நானும், வண்ணை மு.பாண்டிய சேர்ந்து ஆரம்பிக்கப்பட்ட இயக்கம். அந்த கத்திற்கு களங்கம் ஏற்படுத்த விரும்ப மாட் என்றவர் ஆர்.கே.நகர் தோல்விக்கான கார குறித்து முதல்வர், துணை முதல்வரிடம் கேட்க வேண்டும்' என்றும் தெரிவித்தார்.

## விக்ரமாதித்யா கப்பலுக்கு பாதுகாப்பு அமைச்சர் விஜயம்



(டில்லி)

இந்திய பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், போர் விமானங்களைத் தாங்கிச் செல்லும் ஐ.என்.எஸ். விக்ரமாதித்யா என்ற கப்பலுக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா, பாதுகாப்பு அமைச்சருக்கு வரவேற்பளித்திருந்தார். இந்தியாவின் மேற்கு கடற்கரையிலுள்ள போர் விமானங்களைத் தாங்கிச் செல்லும் ஐ.என்.எஸ்.விக்ரமாதித்யா என்ற கடற்படைக் கப்பல் தொடர்பில் கண்காணிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் அமைந்திருந்தது. (இ-8)

## 'எச்-1 பி' விசா நீட்டிப்பு கொள்கையில் மாற்றமில்லை- அமெரிக்கா அறிவிப்பு

(வோஷிங்டன்)

எச்-1 பி' விசா நீட்டிப்பு கொள்கையில் மாற்றம் இல்லை என்று அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவைகள் அமைப்பு அறிவித்துள்ளது.

'அமெரிக்க பொருட்களையே வாங்க வேண்டும், அமெரிக்கர்களையே பணி நியமனம் செய்ய வேண்டும்' என்ற கொள்கையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தீவிரமாகவுள்ளார்.

இந்த நிலையில், 'எச்-1 பி' விசாக்களை நீட்டிப்பதை தடுக்கிற வகையில், புதிய கட்டுப்பாடுகளை ட்ரம்ப் நிர்வாகம் கொண்டுவரப்போகிறது என அமெரிக்காவின் 'மெக்கிளாட்சி' செய்தி நிறுவனம் கடந்த வாரம் தகவல் வெளியிட்டது.

இது அமெரிக்க வாழ் இந்திய தகவல் தொழில்நுட்பத்துறையினருக்கு பேரிடியாக அமைந்தது. விசாக்களை நீட்டிப்பதில் சிக்கல் ஏற்பட்டால் ஏறத்தாழ 7 இலட்சத்து 50 ஆயிரம் இந்தியர்கள் நாடு திரும்ப வேண்டிய சூழல் உருவாகும் எனக் கூறப்பட்டது.

இந்த நிலையில் 'எச்-1 பி' விசா நீட்டிப்பு கொள்கையில் மாற்றம் இல்லை என்று அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவைகள் அமைப்பு அறிவித்துள்ளது.

இதுபற்றி அதன் தலைமை செய்தித்துறை அதிகாரி ஜோனத்தான் விதிங்டன் வெளியிட்டுள்ள அறிக்கையில், " 'எச்-1 பி' விசாக்களை வைத்திருப்பவர்கள், நாட்டை விட்டு வெளியேறுகிற விதத்தில், எந்த ஒரு ஒழுங்குமுறை மாற்றத்தையும் அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவைகள் அமைப்பு பரிசீலிக்கவில்லை.

அப்படியே மாற்றம் கொண்டு வந்தால் கூட, அந்த மாற்றமானது 'எச்-1 பி' விசாக்களை வைத்திருப்போர் நாட்டை விட்டு வெளியேறுகிற நிலைமையை உருவாக்காது.

ஏனென்றால் 21 ஆம் நூற்றாண்டு சட்டம் விதி எண் 106(ஏ) (பி)படி, முத லாளிகள் ஓராண்டு ஊதிய உயர்வின் அடிப்படையில், நீட்டிப்பு கோர முடியும்" என்று தெரிவித்துள்ளார். (இ-8)

## இங்கிலாந்து பிரதமரின் முடி கல்வி அமைச்சர்

(லண்டன்)

இங்கிலாந்து பிரதமர் தெரேசா மே அமைச்சரவையில் மாற்றம் செய்துள்ளார். அமைச்சராக பணியாற்றி வந்த ஜஸ்டின் ங்கை அவர் பணியாளர், ஓய்வூதியத் அமைச்சராக நியமிக்க முடிவு செய்தார்.

ஜஸ்டின் கிரீனிங் அந்த முடிவை மறுத்து பதவி விலகியுள் ளார். இதற் கடிதத்தை அவர் பிரதமர் தெரெசா மே

## சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஊதிய உயர்வுக்கு தி.மு.க.எதிர்ப்பு



(சென்னை)

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஊதிய உயர்வுக்கு தி.மு.க. தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

சட்டமன்ற உறுப்பினர்களின் ஊதிய உயர்வு சட்டமூலம் நேற்று புதன்கிழமை தமிழக துணை முதலமைச்சர் பன்னீர்ச்செல்வம் தாக்கல் செய்திருந்த நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தி.மு.க.தரப்பினர் சட்டமன்றிலிருந்து வெளிநடப்பு செய்துள்ளனர்.

போக்குவரத்து ஊழியர்கள் ஊதிய உயர்வை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வரும் இத்தருணத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கும் சட்டமூலம் நிறைவேற்றப்படுவதானது கேலிக்குரியது என்று தி.மு.க. சார்பில் கட்சியின் செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அதேவேளை டி.டி.வி. தினகரன் தரப்பினரும் குறித்த சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

சட்டமன்ற உறுப்பினர்களின் ஊதியம் அதிகரிக்கப்படும் என கடந்த ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற கூட்டத்தொடரில் முதலமைச்சர் பழனிச்சாமி அறிவித்திருந்த நிலையில் நேற்று சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படின் தற்போது 55 ஆயிரமாக உள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் ஊதியம் ஒரு இலட்சத்து 5 ஆயிரம் வரை அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் 20 ஆயிரம் ரூபாய் வரை ஓய்வூதியம் பெறுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அ.தி.மு.க.மதுசூதனன் தோல்விக்கு ஓ.பி.எஸ்.-இ.பி.எஸ்ஸே காரணம் தினகரன் சுட்டிக்காட்டு



(சென்னை)

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் அ.தி.மு.க வேட்பாளர் மதுசூதனனின் தோல்விக்கு முதலமைச்சரும் துணை முதலமைச்சரும், அமைச்சர் ஜெயக்குமாருமே முக்கிய காரணம் என்று டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் துணை முதலமைச்சர் பன்னீர்செல்வம் அணியில் பங்காளிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடுகள் அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டிய அவர் விரைவில் ஒவ்வொருவராக வெளியேறுவர் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா இருக்கும் வரையே இரட்டை இலைக்கு மரியாதை இருந்ததாகவும் தற்போது எஸ்.பி. வீரப்பா மற்றும் நம்பியார் கைகளில் இரட்டை இலை இருப்பதாகவே மக்கள் நினைப்பதாகவும் தெரிவித்துள்ளார். (இ-8)

## மின்சார ரயிலில் தீ விபத்



(பாட்னா)

பீகாரில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மி ரயிலில் தீ விபத்து ஏற்பட்டது. இதில் ரயி நான்கு பெட்டிகள் எரிந்து நாசமாகின. பீகார் மா பாட்னா அருகே, ' நிறுத்திவைக்கப்ப ட்டி பயணிகள் ரயில் பெட்டிகளில் திடீரென த்தது. இதில் 4 பெட்டிகள் முற்றிலும் எ சாம்பலாகின. பாட்னா-மொகாமா பய ரயில் நேற்று முன் தினம் இரவு மொகாமா நிலைத்திற்கு வந்தது. அதன் பின்னர், பயணிகளை இறக்கி விட்டு சுத்தம் செ தற்காக யார்டுக்கு கொண்டு செல்லப்பட்ட

இந்நிலையில், அந்த ரயிலின் பெட்டி நள்ளிர வில் திடீரென தீப்பிடித்தது. இதைய சம்பவ இட த்துக்கு வந்த தீயணைப்பு வீர தீயை அணைக்க கடுமையாகப் போர போதும், இயந்திரத்துடன் நான்கு பெட்டிக தீயில் முற்றிலுமாக எரிந்து சேத மன விட்டன. பயணிகள் யாரும் இல் லாதால் விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் நிகழ வில்

தீ விபத்துக்கான கார ணம் குறித்து க றிய விசாரணைக்குழு அமைக் கப்பட்டுள் இந்த தீ விப த்து நாசவேலை காரண இருக்கக்கூடும் என்று முதற் கட்டமாக த கள் வெளி யாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு




## டுத்த
## னன்

நியமிக்கப்பட்டவர்
னர். ஆனால் இப்
தி.மு.க. எந்த ஆய்
ஜெயலலிதா இருந்
ருக்குமா என்றும்,
ப் பிறகு உண்மை
இருக்கின்றனவா?
கட்டு கடிதம் எழுதி
ரியானது. மேலும்,
நாட் களுக்குள் நட
என்றும், இல்லை
ன்ற முறையில் சில
யாக மேற்கொள்ள
த கடிதத்தில் எச்ச
ளியாகியுள்ளன.
ல் பரபரப்பை ஏற்
மதுசூதனனிடம்
ழப்பினர். இதற்கு
ன் கடிதம் கொடுத்
ர்பது ஓபிஎஸ் -
னைப் பொறுத்த

. கருணாநிதியை
ப் போய் அந்த
தி.மு.கவை உரு
மு.பாண்டியனும்
க்கம். அந்த இயக்
விரும்ப மாட் டேன்
விக்கான காரணம்
தல்வரிடம் தான்
ரிவித்தார். (இ-8)

# கலிபோர்னியாவில் பாரிய மண்சரிவு!





## 13 பேர் உயிரிழப்பு

(கலிபோர்னியா)

அமெரிக்காவின் தெற்குக் கலிபோர்னிய மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பாரிய மண்சரிவில் சிக்கி 13 பேர் உயிரிழந்துள்ளதுடன், 163 பேர் காயமடைந்துள்ள நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும், அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


தெற்குக் கலிபோர்னியாவில் கடந்த சில நாட்களாக அடைமழை பெய்துவரும் நிலையில், அங்கு பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, கலிபோர்னியாவின் கிழக்கு சாண்டா பார்பராவிலுள்ள ரோமியோ கன்யோனில் கடந்த செவ்வாய்க்கிழமை பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் 300 இற்கும் மேற்பட்டோர் சிக்கியுள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடுமென, அவசர அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், மேற்படி பகுதியிலிருந்து மழை மற்றும் வெள்ளம் காரணமாக ஏற்கனவே ஆயிரக்கணக்கானோர் வெளியேறியுள்ளனர்.

50 இற்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். (இ-8)

# எதிர்வரும் 22ம் திகதி ட்ரம்ப்- மோடி சந்திப்பு



(வோஷிங்டன்)

சுவிட்சர்லாந்தில் இடம்பெறவுள்ள உலக பொருளாதார கருத்தரங்கில் கலந்துகொள்ளும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவுள்ளதாக வெள்ளை மாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாவோஸ் நகரில் உலக பொருளாதார கருத்தரங்கு எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த கருத்தரங்கில் உலகம் முழுவதும் இருந்து 3 ஆயிரம் தலைவர்கள், பங்கேற்கின்றனர்.

1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கருத்தரங்கு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் தனது அமர்வை தாவோஸ் நகரில் நடத்துகிறது.

அத்துடன், உலக பொருளாதார கருத்தரங்கில் பங்கேற்று உலக தலைவர்களுடன் தாம் கலந்துரையாடவுள்ளதை டிரம்ப் வரவேற்றுள்ளார்.

இதில் அமெரிக்க வணிகம், அமெரிக்க தொழிற்றுறை மற்றும் அமெரிக்க தொழிலாளர்கள் பற்றி அவர் கலந்துரையாடுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## ந்து அமைச்சரவை மாற்றம்

# முடிவை எதிர்த்து
# ச்சர் இராஜினாமா



ரேசா மே தனது
சய்துள்ளார். கல்வி
த ஜஸ்டின் கிரீனி
ஓய்வூதியத்துறை
பு செய்தார்.
முடிவை ஏற்க
ளார். இதற்கான
தெரெசா மேயு க்கு அனுப்பிவைத்தார்.

அதில் அவர், அமைச்சரவைக்கு வெளியே இருந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளார்.

புதிய கல்வி அமைச்சராக டேமியன் ஹிண்ட்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார். எஸ்தர் மெக்வேயுக்கு பணியாளர், ஓய்வூதியத்துறை அமைச்சர் பதவி அளிக்கப்பட்டுள்ளது.

மேத் ஹான்காக் கலாசார அமைச்சராகவுள்ளார்.

உடல்நலக்குறைவை காரணம் காட்டி வடக்கு அயர்லாந்து அமைச்சர் ஜேம்ஸ் புரோக்கன் ஷயர் பதவி விலகியுள்ளார். அவரது இடத்துக்கு கரேன் பிராட்லி வந்துள்ளார்.

சர் பேட்ரிக் மெக்லாலின் வகித்து வந்த கன்சர்வேடிவ் கட்சித்தலைவர் பதவி நீர்ப்பாசனத்துறை அமைச்சர் லெவிசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நீதித்துறை அமைச்சர் டேவிட் லிதிங்டன், அமைச்சரசை அலுவலகத்துக்கு மாற்றப்பட்டார்.

அமைச்சரவை மாற்றத்தில் உள்துறை அமைச்சர் ஆம்பர் ரூட், 'பிரிக்ஜிட்' துறை அமைச்சர் டேவிட் டேவிஸ், வெளியுறவு அமைச்சர் போரிஸ் ஜான்சன் துறைகளில் கை வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-8)

## தீ விபத்து



ட்டிருந்த மின்சார
இதில் ரயிலின்
ன. பீகார்மாநி லம்
வக்கப்ப ட்டிருந்த
திடீரென தீப்பிடி
ற்றிலும் எரிந்து
ாமா பயணிகள்
மொகாமா ரயில்
பின்னர். அங்கு
சுத்தம் செய்வ
சல்லப்பட்டது.
ின் பெட்டிகளில்
து. இதையடுத்து
ணைப்பு வீரர்கள்
ாகப் போராடிய
ர்கு பெட்டிகளும்
சேத மடைந்து
ல் லாதால் இந்த
நிகழ வில்லை.
குறித்து கண்ட
க கப்பட்டுள்ளது.
ல காரணமாக
ட்டமாக தகவல்
(இ-8)

## முதலமைச்சர் திடீர் இராஜினாமா!

# பாகிஸ்தானின் பலுசிஸ்தான் சட்டசபை அருகே குண்டுவெடிப்பு

## 7 பேர் உயிரிழப்பு



(கராச்சி)

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாண சட்டமன்றம் அருகே நடந்த குண்டுவெடிப்பில் பொலிஸார் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாண சட்டமன்றத்தில் நேற்று முன்தினம் முதலமைச்சர் சனாவுல்லா ஜெரி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், முதலமைச்சர் ஜெரி திடீரென தன் பதவியை இராஜினாமா செய்ததால் சட்டமன்ற கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டது.

சட்டமன்றம் கூடும் என்று அறிவிக்கப்பட்டதால் குவெட்டாவிலுள்ள சட்டமன்ற கட்டடத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சட்டசபையை சுற்றி 300 மீற்றர் சுற்றளவுக்கு உயர் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், முதலமைச்சர் பதவி விலகிய சிறிது நேரத்தில் சட்டசபை அருகே சக்திவாய்ந்த குண்டு வெடித்தது.

இதில் நான்கு பொலிஸார் உட்பட 7 பேர் உடல்சிதறி உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர்.

இது பொலிஸாரின் வாகனத்தை குறிவைத்து நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். (இ-8)

# வடகொரியா-தென்கொரியா இடையிலான ஒப்பந்தம் ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் பாராட்டு

(நியூயோர்க்)

வடகொரியா மற்றும் தென் கொரியா இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபை பொது செயலாளர் அந்தோனியோ குட்ரேரஸ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

வடகொரியா ஐக்கிய நாடுகள் சபையின் எதிர்ப்பையும் மீறி அணு ஆயுத சோதனை, ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகின்றன. அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் இதற்கு கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இதற்கிடையே, தென் கொரியாவில் அடுத்த மாதம் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ள வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன் விருப்பம் தெரிவித்தார். இதையடுத்து, தென்கொரியாவுடன் பேசுவதற்கு வசதியாக 'ஹொட்லைன்' தொலைபேசி (நேரடி தொலைபேசி) வசதியை தொடங்க வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் உத்தரவிட்டார்.





இரு நாடு களிடையே பான்முன்ஜோம் என்ற கிராமத்தில் ஹொட்லைன் தொலைபேசி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில், வடகொரியா மற்றும் தென் கொரியா இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் மிகவும் வரவேற்கத்தக்கது என ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவரது செய்தி தொடர்பாளர் தெரிவிக்கையில், இரு நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம், கொரிய தீபகற்பத்தில் நிலவிய பதற்றமான சூழ்நிலையை தணிக்க உதவும். இது அமைதி திரும்புவதற்கான முதல்படியாகவே பார்க்கப்படுகிறது என தெரிவித்துள்ளார். (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி




(கொழும்பு)

கருணா அம்மான் என அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவருக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுத் தடையை நீக்கி நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க உத்தரவு பிறப்பித்தார்.

ஒன்பது கோடிக்கும் அதிகமான பெறுமதிவாய்ந்த பதிவு செய்யப்படாத ஜீப் வண்டி ஒன்றை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பில் அவருக்கு எதிராக இந்த தடை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்கத் தூதரக உயர் அதிகாரி கிழக்கு கடற்படைத் தளபதி சந்திப்பு



(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியான கெல்லி பில்லிங்ஸ்லி திருகோணமலையில் உள்ள கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தலைமையகத்துக்குச் சென்று பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

கிழக்குப் பிராந்திய கடற்படைத் தலைமையகத்தில், கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் நிமால் சரத்சேனவைச் சந்தித்தார்.

இதன்போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த, பரஸ்பரம் அக்கறையுள்ள பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக கடற்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# உயர்தர பரீட்சை மீளாய்வுக்கான கால எல்லை திங்களுடன் நிறைவு

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள்களை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் எதிர்வரும் திங்கட்கிழமையுடன் நிறைவடைவதாக பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் சனத் பூஜித் தெரிவிததார்.

பாடசாலை பரீட்சார்த்திகள் இதற்கான விண்ணப்பங்களை பாடசாலை அதிபர் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

தனியார் பரீட்சார்த்திகள் பரீட்சை திணைக்களத்தினால் தேசிய பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாக விண்ணப்பங்களை தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டும். இதே வேளை, பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இதற்கான விண்ணப்பத்தை பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ரவி கருணாநாயக்கவுக்கு நீதிமன்று அழைப்பாணை



இந்த அழைப்பாணையை இலஞ்ச, ஊழல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்கவுக்கு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவுபிறப்பித்துள்ளது. (இ-7)

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேலதிக நீதவான் துலானி அமரசிங்க அழைப்பாணை விடுத்துள்ளார்.

ரவி கருணாநாயக்க வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சராக இருந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல் விவகாரம் ஒன்று தொடர்பில் சாட்சியமளிக்கவே அவருக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில், விலைப்பட்டியலுக்கு முரணாக 1000 மெற்றிக் தொன் அரிசி விற்பனை செய்ய உத்தரவு பிறப்பித்ததன் மூலம் 4 மில்லியன் ரூபாய் அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் அப்போதைய சதொச பொது முகாமையாளருக்கு எதிரான வழக்கில் சாட்சியமளிக்கவே ரவி கருணாநாயக்க எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

# ஹக்கீம் தனியாக வந்தால் வடக்கு-கிழக்கு பிரிப்பு குறித்து விளக்கத் தயார் - றிசாத்



(கொழும்பு)

வடக்கும் கிழக்கும் பிரிந்திருக்க வேண்டும் என்று தனித்துவமாகவும் தைரியமாகவும் எழுதிக் கொடுத்த கட்சி தமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி மட்டும் தான் என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் என்னுடன் தனியாக வந்து அமருவாராக இருந்தால் அவருக்கு தெளிவாக எடுத்துக் காட்ட நான் தயாராகவுள்ளேன். வடக்கில் பிறந்தவனாக இருந்தாலும், வடக்கும் கிழக்கும் பிரிந்திருக்க வேண்டும் என்பதில் தான் உறுதியாக இருக்கின்றேன் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஏறாவூரில் நேற்று முன்தினம் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### மனிதனுக்குள் இருக்கும் மிருகங்கள்

ஒருவர் சொல்லுகிறார். அவனை மாதிரி ஓர் அயோக்கியனைப் பார்க்கவே முடியாது. மற்றவர் அதை மறுக்கிறார். சேச்சே! அவரைப் பற்றி உனக்குத் தெரியாது. அவரைப் போல் ஒரு நல்ல மனிதரை நீ பார்க்கவே முடியாது.

இதென்ன முரண்பாடு?

இரண்டுமே உண்மையாக இருக்கலாம்.

சந்தர்ப்பம், சூழ்நிலைகள் ஆகியவை தாம் ஒரு மனிதனை நல்லவனாகவோ கெட்டவனாகவோ ஆக்குகின்றன. இவை போதாவென்று மற்ற மனிதர்களும் இந்தச் செயலுக்குத் துணையாகவோ தூண்டுகோலாகவோ இருக்கிறார்கள்.

கொலைக்காரப் பாவி என்று பட்டம் வாங்கியவனின் தாய் சொல்கிறாள், என் மகன் நல்லவன் என்று.

அவள் அன்பையே காட்டினாள். அவளும் அன்பையே பதிலாகப் பெற்றாள். அதனால் அவள் கண்ணுக்கு அந்தக் கொலையாளி இன்னமும் நல்லவனாகத் தெரிகிறான்.

கொலையுண்டவன், அவனது மிருக உணர்ச்சியைத் தூண்டிவிடக் காரணமானான். அதற்குத் தானே களமும் ஆனான்.

ஒவ்வொரு மனிதனிடமும் நன்றியுள்ள நாய்க்குணமும் உண்டு. பேய்க்குணமும் உண்டு. அன்புள்ளமும் உண்டு. அரக்கத் தனமும் உண்டு.

இவற்றில் எவற்றை நாம் தேர்ந்தெடுத்து தூண்டிவிட்டு அவற்றைப் பதிலாகப் பெறுகிறோம் என்பதே முக்கியம்.

மற்றவர்கள் கோளாறாக நடந்து கொண்டால் அதற்கு அவர்கள் மட்டும் காரணமல்ல, நாமும் ஒரு காரணம்.

முதல் மனைவியை விவாகரத்துச் செய்த மனிதர் இரண்டாவது மனைவியிடம் பிரியமாக நடந்து கொள்கிறார் என்றால் பெருமை அவருக்கல்ல, இரண்டாவது மனைவிக்கு. அவளுக்குத் தெரியும் எது ஷாக் தரும் வயர் எது நியூட்றல் வயர் என்று.

நல்ல குடித்தனக்காரர் என்று பழைய வீட்டுக்காரரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருவர் புதிய வீட்டுக்காரரைப் படாதபாடு படுத்துகிறார் என்றால் கோளாறு புதுவீட்டுக்காரரிடம் அதிகம் என்று பொருள்.

மனிதர்கள் உணர்ச்சி பூர்வமானவர்கள். அவர்களின் உணர்ச்சிகளில் நல்லவையும் உண்டு. தீயவையும் உண்டு. அவற்றுள் எவற்றை நாம் வெளிப்படுத்தத் துணையாகவும் தூண்டுகோலாகவும் இருக்கிறோம் என்பது முக்கியம்.

**லேனா தமிழ்வாணன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷவின் இருண்ட ஆட்சிக்காலத்தில் நடந்த கொலைகளுக்கு எதிராக நீதி நிலைநாட்டப்படும்!

## பிரதமர் ரணில் விசேட அறிக்கை

(கொழும்பு)

லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டு 9 வருடங்களும் நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து 3 வருடங்களும் கடந்து விட்டன. ராஜபக்ஷவின் இருண்ட ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட கொலைகளுக்கு எதிராக நீதியை நிலைநாட்ட நல்லாட்சி அரசு இன்றுவரை அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஊழல் நிறைந்த அரசுக்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தானும் கடந்த 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி நல்லாட்சிக்காக அரசியல் போராட்டத்தில் கைகோர்த்தோம். நாங்கள் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டுமானால் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி எமக்கு வாக்களிக்குமாறு வேண்டியிருந்தோம். இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்றி, அரசாங்கத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத வன்முறையை ஒழிப்பதற்கும், நமது சட்ட முறைமை மற்றும் குற்றவியல் நீதி அமைப்பு முறையின் சுயாதீனத் தன்மை மற்றும் கௌரவத்தை பாதுகாப்பதற்கும் நாங்கள் உறுதியளித்தோம்.

இப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற இன்னும் பல காலம் தேவைப்பட்டாலும், இதுவரை கடந்து வந்த பயணத்தில் பல தடைகளுக்கும் சவால்களுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுத்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறோம் என்று பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளில், 17 ஆவது திருத்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அரசியலமைப்பு சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டதன் மூலம் பொலிஸ், நீதித்துறை, அரச சேவை ஆகியவற்றை விரிவுபடுத்தவும், அரசியல்வாதிகளின் கட்டளைகளுக்கு அடிபணியாது மனச்சாட்சியுடன் சேவை வழங்கவும் சுதந்திரமளிக்கப்பட்டது.

இலங்கை பிரஜைகளுக்கு தகவல் அறிவதற்கான சட்டத்தை இயற்றியதோடு, குற்றத்திற்கு ஆளானவர்களுக்கும், நீதியின் முன்னால் நிற்கும் சாட்சியாளர்களுக்கும் உதவி மற்றும் பாதுகாப்புக்கான உரிமையை உறுதிப்படுத்தியுள்ளோம்.

நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக அரசிற்கு எதிரான சிக்கலான நிதியியல் குற்றங்களை விசாரணை செய்வதற்கும், நீதிக்கு முன் கொண்டு வருவதற்கும் பொலிஸிற்கு அதிகாரம் வழங்கப்பட்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இப்போதைக்கு லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டு 9 வருடங்களும் நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து 3 வருடங்களும் கடந்து விட்டன. ராஜபக்ஷவின் இருண்ட ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட கொலைகளுக்கு எதிராக நீதியை நிலைநாட்ட நல்லாட்சி அரசு இன்றுவரை அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகிறது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளை நடத்தியவர்களுக்கு எதிராக நீதி பயன்படுத்தப்படுமென நாங்கள் உறுதியளிப்பதோடு, அந்த நோக்கத்திற்காக அரசு மேலும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

## புலமைப் பரிசில் பரீட்சை 234 மாணவர்களின் புள்ளிகளில் மாற்றம்

(கொழும்பு)

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் குறித்த மீள் மதிப்பீட்டில் 234 மாணவர்களின் புள்ளிகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் திருப்தியில்லாத 20 ஆயிரம் மாணவர்கள் மீள் மதிப்பீட்டுக்காக விண்ணப்பம் செய்திருந்தனர்.

இவர்களில் 234 மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் குறிப்பாக புள்ளிகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

புள்ளிகளில் மாற்றம் ஏற்பட்டுள்ள மாணவர்களின் பெறுபேறுகள் கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், மீள்மதிப் பீட்டுககாக விண்ணப்பித்து புள்ளிகளில் மாற்றம் ஏற்படாத மாணவர்களின் விபரங்கள் அந்தந்த பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளில் அனுமதி வழங்கும் நடவடிக்கைகள் இந்த மாத இறுதிக்குள் பூர்த்தியாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகள் கிடைக்கப் பெறாத மாணவர்கள் எதிர்வரும் மாதம் 15 ஆம் திகதி வரையில் மேன்முறையீடு செய்ய முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கர்ப்பிணிப் பெண் படுகொலை வழக்கு; மரபணு பரிசோதனை அறிக்கை தாமதம்

(யாழ்ப்பாணம்)

கர்ப்பிணிப் பெண்ணான ஹம்சிகா கொலை வழக்கில் மரபணு பரிசோதனை அறிக்கை மன்றுக்கு சமர்ப்பிக்கப்படுவது தாமதிக்கப்படுவது தொடர்பாக சட்டத்தரணிகள் நீதிமனறின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

நேற்று முற்பகல் குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது சந்தேக நபரகள் தரப்பு சட்டத்தரணி திருக்குமார் குறித்த வழக்கு தொடர்பான மரபணு பரிசோதனை அறிக்கை மருதனார்மடத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சி.சி.ரி.வி. காணொலி தொடர்பான அறிக்கை என்பன கிடைக்கப்படாமை குறித்தும் மன்றில் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து நீதவான் இவ் வழக்குத் தொடர்பாக மரபணு அறிக்கை கிடைக்காமை குறித்து இந்தத் தடவையும் இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அறியப்படுத்துவதாக குறிப்பிட்டார்.


அத்துடன் மரபணு பரிசோதனைக்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ள நிலையில் அதற்கான பற்றுச்சீட்டுக்கள் மன்றில் சமர்பிக்கப்படுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் சி.சி.ரி.வி. காணொலி தொடர்பாக மன்றில் முன்னிலையாகியிருந்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் நீதவான் வினவிய போது, அவர் இது தொடர்பாக தமக்கு தெரியாது என கூறியதையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸ்தலைமையதிகாரியை அடுத்த வழக்கு தவணையின் போது மன்றில் முன்னிலையாக உத்தரவிட்டார்.

அத்துடன் குறித்த வழக்கு விசாரணையை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை ஒத்தி வைத்ததுடன் அதுவரை குறித்த இரண்டு சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார். (இ-4)

## ராஜபக்ஷக்கள் திருடர்கள் அல்லர்

### மேர்வின் சில்வா கூறுகிறார்



(கொழும்பு)

ராஜபக்ஷக்கள் திருடர்கள் அல்லர் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். ராஜபக்ஷக்கள் திருடர்கள் அல்லர் எனவும், அவர்கள் சொந்த சொத்துக்களை விற்று அரசியல் செய்தவர்கள் என அவர் தெரிவித்தார். கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தனக்கு வேட்பு மனு வழங்கப்படாத காரணத்தினால் ராஜபக்ஷக்களுடன் முரண்பாடு கிடையாது என அவர் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கம் கடன் மற்றும் நிதி உதவிகளைப் பெற்றுக் கொண்டு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார். தேர்தலில் போட்டியிட முடியாமல் போனதற்கு சந்திரிகாவே காரணம் என அவர் குற்றம் சாட்டினார். (இ-7)

## சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சீரடி சாயி பாபாவின் 100 ஆவது சமாதி ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரத்ததான முகாமில் பங்கேற்ற அடியவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 6.30மணிக்கு ஈழுத்து சீரடி சாயி மந்திர ஆலயத்தில் இடம்பெறும். (இ-7)

## இரத்த பற்றாக்குறை ஏற்படும் அபாயம்

### இரத்த வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்காலத்தில் பாரிய இரத்த பற்றாக்குறை ஏற்படும் என்றும், அதனை தவிர்த்துக் கொள்ள இரத்ததானம் செய்ய கொடையாளர்கள் முன்வர வேண்டும் என்றும் இரத்த பரிமாற்ற சேவை மையம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் கடந்த காலத்தில் அதிகரித்த டெங்கு மற்றும் பிற நோய்களின் காரணமாக இந்தப் பற்றாக்குறை நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் குறைவாகவே இரத்த தானம் செய்யப்படும்.

தற்போது இரத்த பற்றாக் குறை ஏற்படும் அபாயம் நிலவியுள்ளதால், கொடையாளர்கள் முன்வந்து இரத்த தானம் செய்ய வேண்டும். இதன்மூலம் இரத்த பற்றாக்குறையால் எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளை தவிர்க்க ஒத்துழைப்பு நல்க வேண்டும், எனக் கோரப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய ஊழல் மோசடிகள் குறித்தும் விரைவில் விசாரணை நடத்தப்படும்

## ஜனாதிபதி மைத்திரி அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் குறித்து தற்போது அனைவரும் பேசுகின்றனர். ஆனால், அதற்கு முன்னர் நடைபெற்ற ஊழல் மோசடிகள் குறித்து எவரும் பேசுவதில்லை. அந்த விடயங்கள் குறித்தும் உரிய விசாரணை நடத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலில் நாம் ஒன்றிணைந்து வெற்றியை பெறவேண்டும். அதற்கான செயற்பாடுகளில் அனைவரும் ஈடுபடவேண்டும். தற்போது மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பிலேயே பொது எதிரணியினர் உட்பட அனைவரும் பேசுகின்றனர். கடந்த ஆட்சிக்காலத்தில் பல்வேறு ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. அவை தொடர்பான அறிக்கையும் என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அந்த விடயம் குறித்தும் உரிய விசாரணை இடம்பெறும் என்று தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் தலைவர் முத்து சிவலிங்கம், ஜனநாயக தொழிலாளர் சார்பில் அதன் தலைவர் பிரபா கணேசன், சிறிரெலோ கட்சியின் செயலாளர் ப. உதயராசா மற்றும் ஈ.பி.டி.பி. கட்சி பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (இ-7)







கைதடி வடக்கு அம்பிகா முன்பள்ளியின் வருடாந்த கலைநிகழ்வும், பரிசளிப்பு விழாவும் நேற்று முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், விருந்தினரால் சிறார்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. விருந்தினர்களுடன் முன்பள்ளிச்சிறார்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## சுதந்திர ஊடக நிலையம் ஜனாதிபதியால் திறந்து வைப்பு



(கொழும்பு)

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊடக பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுதந்திர ஊடக நிலையம் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டது.



இல.65, ஆனந்த ராஜ கருணா மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரியில் இந்த சுதந்திர ஊடக நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் மேற்கொள்ளவுள்ள ஊடகப் பிரசார நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன்போது ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இது தொடர்பான விபரங்கள் அடங்கிய Nidahasugayak.com இணையத்தளமும் இதன்போது ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர்கள் சுசில் பிரேமஜெயந்த, எஸ்.பி.திஸாநாயக்க, ஏ.எச்.எம்.பௌஸி, மகிந்த அமரவீர, சந்திம வீரக்கொடி, திலங்க சுமதிபால, அனுராத ஜயரத்ன உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

## இலங்கை- ஜப்பான் பாராளுமன்ற உறவுகளை வலுப்படுத்தல் அவசியம்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும், ஜப்பானுக்கும் இடையில் பாராளுமன்ற மட்டத்தில் அரசியல் உதவிகளை மேம்படுத்துவது அவசியமாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் காணப்படும் தொழில்நுட்பங்கள் இலங்கைக்கு முக்கியமானவை யாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை - ஜப்பான் உறவுகளை வலுப்ப டுத்தும் நோக்கில் பாராளு மன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வில் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.



ஜப்பானின் உதவிகள் இலங்கையை சுபீட்சமான நாடாக மாற்ற உதவியிருப்பதாகவும் பிரதமர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

## மருந்து விலைக்குறைப்பால் 9 பில்லியன் ரூபா பிரதிபலன்

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

மருந்து விலைக் குறைப்பின் பிரதிபலன் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

இலங்கையில் மருந்து விலை குறைக்கப்பட்டுள்ளது போன்றே சர்வதேச நிறுவனங்களும் மருந்து உற்பத்திகளின் விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த விலை குறைப்பின் காரணமாக ஆண்டொன்றுக்கு 9 பில்லியன் ரூபாய் பிரதிபலன் நாட்டுக்கு கிடைப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.



சர்வதேச மருந்து உற்பத்தி விலைகள் குறைக்கப்பட்டதன் பிரதிபலன் இலங்கைக்கு மாத்திரம் கிடைப்பது விசேட அம்சமாகும் என்று தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘வன்முறையற்ற தேர்தலுக்கு வழிகோலவும்’

(கொழும்பு)

எதிர்வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அமைதியாகவும் சுமுகமானதாகவும் வன்முறையற்ற தேர்தலாக நடத்தி, சிறந்த முறையில் முடிவுகளைப் பெற்றுக்கொள்ள உதவுமாறு, அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் திலிக விக்ரமரத்தின வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனைத்து அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் மற்றும் பொது அமைப்புகளிடம், அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அக்கரைப்பற்று மாநகரசபை, பிரதேச சபை ஆகியவற்றின் அபேசட்கர்கள் மற்றும் அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாயல்களின் சம்மேளனம் ஆகியோருக்கு, தேர்தல் விதிமுறை தொடர்பிலான விளக்கம், அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலில், நேற்று இடம்பெற்றது.

அம்பாறைமாவட்ட உதவித் தேர்தல் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் கலந்துகொண்டு விளக்கமளித்த போதே, மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், மேற்குறிப்பிட்ட வேண்டுகோளை முன்வைத்தார்.

“புதிய தேர்தல் முறையில் இடம்பெறும் கலப்புமுறை மற்றும் விகிதாசார தேர்தல் முறையின் கீழ், இலங்கையில் ஆகக்குறைந்த வட்டாரங்களைக் கொண்ட ஒரு பிரதேச சபையாக, அக்கரைப்பற்று பிரதேச சபை காணப்படுகின்றது.

“இப்புதிய தேர்தல் முறைமைகள் பற்றி அபேட்சகர்கள் முறையாக விளங்கிக்கொண்டு செயற்படும் போதே, மக்களுக்கு எதிர்காலத்திட்டங்கள், வரப்பிரசாதங்கள் மற்றும் பாதிப்புகள் பற்றி விளக்கமளிக்க முடியும்.

“பெருங் கூட்டங்கள், ஊர்வலங்கள், வீண் செலவினங்களைத் தவிர்த்து, 10 பேருக்கு உட்பட்ட குழுவாக வீடு, வீடாகச் சென்று பிரசாரங்களை நடத்துவதும் மக்களைத் தெளிவூட்டுவதும், தமது கொள்கைகள், எதிர்கால நடவடிக்கைகளை எடுத்துக் கூறுவது நன்மை பயக்கக் கூடியதாக



அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தபால் திணைக்களத்தின் சேவைகள் விஸ்தரிப்பு

(கொழும்பு)

தபால் திணைக்களத்தின் சேவையை விஸ்தரித்து, அதனை மேலும் மக்களுக்கு பயனுள்ளதாக வழங்குவது தொடர்பான புதிய மறுசீரமைப்புத் திட்டம், தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக, தபால் சேவைகள் மற்றும் இஸ்லாமிய மத விவகார அமைச்சின் செயலாளர் ஆர். எம்.டி.பி.மீகஸ்முல்ல தெரிவித்தார்.

பிரதமர் தலைமையில் செயற்படும் பொருளாதார விவகாரம் தொடர்பான குழுவின் பணிப்புரைக்கு அமைய, இந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். அத்துடன், இதன் மூலம் தபால் திணைக்களத்தில் வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, இலாபம் பெறக்கூடிய நிறுவனமாக அதனை மாற்ற எதிர்பார்த்துள்ளதாகவும், மீகஸ்முல்ல மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, தபால் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பில், தபால்மா அதிபர், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழுவினர் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி தீர்வு காண நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர்தெரிவித்துள்ளார். (இ-7)

# பாணந்துறையில் துப்பாக்கி முனையில் துணிகரக் கொள்ளை

(கொழும்பு)

பாணந்துறை பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் துப்பாக்கி முனையில் மிரட்டி துணிகரக் கொள்ளைச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக் கொள்ளைச் சம்பவம் இலத்திரனியல் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கியுடன் குறித்த வர்த்தக நிலையத்திற்குள் நுழைந்த துப்பாக்கிதாரிகள் இருவர் அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு பணத்தினை கொள்ளையடித்துவிட்டு அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் மற்றும் அவரது சகோதரர் ஆகியோர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி திக்கம் பகுதியில் வைத்து 30 கிராம் கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு பருத்தித்துறை பொலிஸாரின் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் மறைத்து வைக்கப்பபட்டிருந்த 30 கிராம் கஞ்சாவை மீட்டதுடன் அதே பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபரையும் கைது செய்தனர். (இ-60)

# பேருந்திலிருந்து தவறி விழுந்த பெண் மரணம்

(கரணவாய்)

பேருந்திலிருந்து இறங்கும் போது தவறி விழுந்து படுகாயமடைந்த குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை இரவு பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தில் இருந்து விழுந்த துன்னாலை குடவத்தையைச் சேர்ந்த செல்வரத்தினம் கோகிலம் என்ற குடும்பப்பெண் பருத் தித்துறை ஆதார வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் இரவு மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

# மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வவுச்சரின் காலஅளவு நீடிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டு பாடசாலை மாணவர்களின் சீருடைகளுக்காக வழங்கப்பட் வவுச்சரின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைய இருந்த குறித்த வவுச்சர்கள் மேலும் ஒரு மாத காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அந்த வவுச்சர்கள் இம் மாதம் 30 திகதி வரை செல்லுபடியாகும் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1302

Search for people, places and things  Nagendram Home

### யசோதா


எவ்வளவு பட்டாலும் என் புருஷனுக்கு புத்தியே வரமாட்டேங்குது. எதை வைச்சு சொல்ற?



பூரிக்கட்டையை இரும்புல வாங்கிட்டு வந்திருக்காருன்னா பாரேன்...

### அபஜன்

ஏதோ புது வருஷம் பிறக்கப் போகுதாமே...



எந்த ஆஸ்பத்திரியில பிறக்கும்னு கேட்டா அடிக்க வராங்க

### சான்

நமக்குப் பிடிச்ச பாட்டெல்லாம்



பக்கத்து வீட்ல தான் கேட்கும்....

### கிருபா

கையேந்தி நிற்பவரெல்லாம் பிச்சைக்காரர் என்றால்



கையில் ஆண்ட்ரொய்டு போன் வைத்துள்ளவர்களை என்ன சொல்வது?

### ஆதன்

ஒவ்வொரு அரிசியிலும் நம்ம பேரை கடவுள் எழுதனாம்



அது பிரியாணியா? பழைய சோறான்னு முடிவு பண்றது பொண்டாட்டிதான்...

### கார்த்திகா

வீட்டுக்கு மூத்த பிள்ளையா பிறந்தா வேலைக்குப் போகனும்...



கடைக்குட்டியா பொறந்தா கடைக்குப் போகனும்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை ... www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் மீதான படுகொலைகளுக்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும்

## அமைச்சர் அனந்தி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தில் படுகொலைகள் நடைபெற்ற அந்தந்த இடங்களில் நினைவுத் தூபிகளை கட்டுவதற்கு புலம்பெயர் தமிழர்கள் முன்வர வேண்டும் எனத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண கூட்டுறவுத்துறை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு இலங்கை அரசு பொறுப்புக் கூறலை வழங்க சர்வதேச சமூகமும், தமிழ் தலைவர்களும் அழுத்தம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 44 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முற்றவெளியில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

1974 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக இன்றைய தினம் நாம் இந்த இடத்தில் கூடியுள்ளோம். இன அழிப்பின் ஒரு கட்டமாக ஆரம்பித்த இந்த அழிப்பு இன்றுவரை முடிவுறாத நிலையில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பாக தொடர்ந்து கொண்டுள்ளது. எனவே இன அழிப்பை தொடர்ந்து செய்து வருகின்ற அரசாங்கம் பொறுப்புக் கூறலில் இருந்து தப்பித்து வருகின்றது.

எனினும் இந்தப் படுகொலைகளுக்கு நீதியை பெற்றுக் கொள்ள அழுத்தங்களை கொடுக்க வேண்டிய நிலையில் தமிழர் தரப்பு தற்போது இருந்து வருகின்றது. எங்களுடைய தமிழ்த் தலைவர்களும், சர்வதேச சமூகமும் இலங்கை அரசுக்கு அழுத்தங்களை வழங்க வேண்டிய



கடப்பாட்டில் உள்ளது. இந்தப் பொறுப்புக்களில் இருந்து நாம் விலகி விட முடியாது.

காலம் காலமாக எங்களுடைய மக்கள் கொல்லப்பட்ட இடங்களில் இவ்வாறான நினைவுத் தூபிகள் கட்டியெழுப்பப்பட வேண்டும். இந்த நினைவுத் தூபிகள்மூலமே எம் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளை வெளிப்படுத்த முடியும் அதேவேளை ஈழத்தில் அப்பாவி மக்கள் உட்பட மாணவர்கள் என அனைவரும் கொல்லப்பட்ட இடங்களில் வருடா வருடம் தினமும் அந்தந்த தினங்களில் நினைவு தினங்களை, அஞ்சலிகளை நடத்த வேண்டும்.

இந்த நினைவுத் தூபிகளை அமைப்பதற்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் உதவி செய்ய வேண்டும் ஒவ்வொரு நினைவுத் தூபிகளையும் ஒவ்வொருவர் பொறுப்பெடுத்து கட்ட வேண்டும். கொல்லப்பட்டவர்கள் நினைவாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி திட்டங்களையும் வழங்க வேண்டும். இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் தமிழர் வரலாற்றில் நிலைத்திருப்பார்கள் என அமைச்சர் அனந்தி சசிதரன் மேலும் தெரிவித்தார். (இ-4)

# தொகுதி வாரி தேர்தல் முறைமை-அன்றும் இன்றும்

1970ஆம் ஆண்டு காலப் பகுதியானது இலங்கை வரலாற்றில் திருப்புமுனையான காலகட்டங்களில் ஒன்றாகும். 1972ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு ஒன்றை அறிமுகப்படுத்திய சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் இலங்கையில் மூடிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தினார்.

இப்பொருளாதாரக்கொள்கை இலங்கைக்கு உகந்ததாகக் காணப்பட்டாலும் அது தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதால் அக்கால இலங்கை மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இது அவருடைய அரசாங்கத்தின் மீது மக்களை வெறுப்புக் கொள்ளச் செய்தது.

இந்த வெறுப்பு, 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தலைமையில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியை அதிகூடிய பெரும்பான்மை வாக்குப் பலத்துடன் வெற்றி பெற வைத்தது. ஜே.ஆர் ஜயவர்த்தன இப்பெரும்பான்மை பலத்தின் அனுக்கிரகத்துடன் முக்கியமான இரண்டு விடயங்களை இந்நாட்டுக்கு அன்பளிப்பு செய்தார். ஒன்று புதிய அரசியல் யாப்பாகும். மற்றையது புதிய தேர்தல் முறையாகும்.

இந்த புதிய தேர்தல் முறை எந்த ஒரு கட்சியும் அதிகூடிய பெரும்பான்மையை பெற்று ஆட்சியமைக்கும் வழியை அடைத்துவிட்டிருந்தது. இது விகிதாசார தேர்தல் முறையாகும். தொகுதிவாரி முறையில் அதிகூடிய பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்த அதற்கு முன்னைய அரசாங்கங்கள் தமது பெரும்பான்மை பலத்தை தன்னிச்சையாகப் பயன்படுத்தியதன் காரணமாகவோ என்னவோ ஜே.ஆர்.ஜயவர்த்தன இந்த விகிதாசார தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்தி இருக்கலாம். விகிதாசார தேர்தல் முறை நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் நடைபெற்ற எந்தப் பொதுத் தேர்தலிலும் எந்த ஒரு அரசாங்கமும் அதிகூடிய பெரும்பான்மைப் பலத்தை பெற்று 2010ஆம் ஆண்டு வரை ஆட்சியமைக்கவில்லை. அதற்கு அவற்றுக்கு சிறுபான்மை கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியப்பட்டன. உதாரணமாக 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உதவி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு கிடைக்காமல் ஐக்கிய தேசிய கட்சிக்குக் கிடைத்திருந்தால் ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சி அமைத்திருக்கும்.

ஆனால்2010ஆம்ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த விகிதாசார தேர்தல் முறையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைத்தார். இதற்கு யுத்த வெற்றியுடன் கிடைத்த மக்கள் அபிமானமும்சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட பிரசார உத்திகளும் காரணமாகின. விகிதாசாரத் தேர்தல் முறை மாகாணசபை தேர்தல்களினும் உள்ளுராட்சி மன்றத் தேர்தல்களிலும் அது அறி முகப்படுத்தப் பட்ட காலத்திலே நடைமுறைப்படுத்தப்பட்டது.

காலப்போக்கில் விகிதாசார தேர்தல் முறைக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. இது விருப்பு வாக்குப் போட்டியை ஏற்படுத்தி அபேட்சகர்களிடையே குரோதத்தை ஏற்படுத்துவதாகவும் அரசியல்வாதிகளை பணக்காரர்களின் அடிமைகளாக்குவதாகவும் பணம் படைத்தவர்களுக்கே இதனால் பாராளுமன்றத்துக்கு செல்ல முடியும் என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இந்த தேர்தல் முறையின் கெட்ட விளைவுகளை கடந்த மூன்று தசாப்தங்களாக கண்டிருக்கிறோம். 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இந்தத் தேர்தல் முறையை மாற்றி தொகுதிவாரி தேர்தல் முறையை நடைமுறைப்படுத்துவதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் வாக்குறுதிகளில் முக்கியமான ஒன்றாகக் காணப்பட்டது. இப்போது புதிய எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டு தொகுதிவாரி முறையில் எதிர் வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. ஆனால் இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் தொகுதிவாரி தேர்தல் முறை ஆபத்தானதாக உள்ளது. இது பல இனங்கள் கலந்து வாழும் தொகுதிகளில் இனவாதத்தை கூர்மைப்படுத்தும். அதற்கான ஆதாரங்களை இக்குறுகிய கால தேர்தல் பிரசாரத்தில் அவதானிக்கக் கூடியதாகவும் உள்ளது.

தொகுதிவாரி தேர்தல் முறை நடைமுறைப்படுத்தப்பட்ட ஆரம்ப காலப்பகுதியில் அதாவது 1980ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் இனத்தை மையப்படுத்திய கட்சிகள் காணப்படவில்லை.

இரண்டு பெரும்பான்மை கட்சிகளே பிரதானமாக இருந்தன. அக்கட்சிகளில் இனவாதக் குழுக்கள் செயற்பட்டாலும் ஒரு இனத்தை மையப்படுத்திய கட்சிகளாக அவை காணப்படவில்லை.

மாறாக அவற்றில் இரண்டு பொருளாதாரக் கொள்கைகளே முக்கியத்துவப்படுத்தப்பட்டன. அக்காலத்தில் காணப்பட்ட சிறிய கட்சிகளும் இன அடிப்படையில் பாகுபட்டதாகக் காணப்படவில்லை. அவை சமூகத்தின் ஒவ்வொரு வகுப்பினரையும் கொள்கைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியதாகக் காணப்பட்டன. தேர்தல்களின் போது அந்த இரண்டு கட்சிகளிலும் எல்லா இனங்களையும் சேர்ந்த அபேட்சகர்கள் முன்னிறுத்தப்பட்டனர். அங்கே இனரீதியாக வாக்கைப் பயன்படுத்துவதை விட கட்சியைப் பார்த்தே மக்கள் வாக்குப் போட்டனர். இந்த இரண்டு கட்சிகளும் இலங்கை மக்களின் உதிரங்களில் ஒரு சமய நம்பிக்கையைப் போல் கடுமையாக ஊறிப் போயிருந்தன. எனவே இந்த தொகுதிவாரி முறை அந்த காலத்துக்கு பொருத்தமானதாகக் காணப்பட்டது.

ஆனால் அன்றைய காலத்தைப் போல் இன்றைய காலம் காணப்படவில்லை. 1980ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் இலங்கையில் இனவாதக் கட்சிகள் தோற்றம் பெற்றன. இலங்கையில் இனவாதம் தூண்டப்பட அரசியலும் ஊடகமும் பிரதான காரணிகளாகும். இனவாதத் தூண்டலின் காரணமாக நாட்டின் நலன் என்று சிந்திக்கின்ற மக்களை விட இனத்தின் நலன் என்று சிந்திக்கின்ற மக்களே இன்று தோற்றம் பெற்றுள்ளனர். நல்லிணக்கம் தொடர்பான என்ன வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் ஒவ்வொரு இனமும் மற்றைய இனத்தை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற நிலையே காணப்படுகின்றது. இன்று பகிரங்கமாகவே இனவாதம் செயற்படுகிறது. முகப் புத்தகம் இக்கருத்துக்கு நல்ல சான்றாகும். இனவாதம் தூண்டப்பட்ட சூழ்நிலையை தமக்கு கிடைத்த வரப்பிரசாதமாக பயன்படுத்திக் கொள்கின்ற வகுப்பினராக அதிகமான அரசியல்வாதிகள் காணப்படுகின்றனர். அவர்கள் இதற்கு இன்னும் தீனி போடுவர்.

இச் சூழ்நிலையில் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மேல் எழுந்துள்ள இனவாத சிந்தனை நாட்டின் மூலை முடுக்கெல்லாம் இன்னும் ஊறிப்போவதற்கு தொகுதி வாரித் தேர்தல் முறை காரணிகளை அமைத்துக் கொடுக்கும். அதிகமான அரசியல்வாதிகள் இதனை நுதலாகக் கொண்டே பிரசாரம் செய்வர். இதற்கு அனுபவம் ஆதாரமாகும். இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையில் தொகுதிவாரி தேர்தல் முறை ஒரு இனத்தை மற்றைய இனம் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற நிலையை இன்னும் கூர்மைப்படுத்தும் என்று எதிர்வுகூற முடியும்.

இத்தொகுதிவாரி முறை தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்டால் நாட்டின் இன நல்லிணக்கத்துக்கு இன்னும் படு பாதகமான விளைவுகளையே இது ஏற்படுத்தும். எனவே இந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிய இத்தேர்தல் முறையை வேறு ஒரு வடிவில் சீர்திருத்தப் பொறுப்பு வாய்ந்தவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதில் இலங்கை மக்களின் மனோ நிலை தற்போது எவ்வாறு அமைந்துள்ளது என்பதை முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும். எந்த ஒரு நடவடிக்கையும் இனங்களிடையே முரண்பாடுகளை வளர்க்காத விதத்தில் அமைய வேண்டும்.

தற்போதுள்ள தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தேர்தலின் போது நல்ல சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்தும் ஒருவராகக் காணப்படுகின்றார். சமயத்தின் அடிப்படையில் மக்கள் கூடும் இடங்களாக சமய நிறுவனங்கள் காணப்படுகின்றன. சில அபேட்சகர்கள் தொகுதிகளில் காணப்படும் இனங்களின் பரம்பலை இலக்கு வைத்து இவ்வாறான இடங்களில் இனவாதத்தை முன்னிறுத்திய கருத்துகளை முன்வைப்பதற்கு நாட்டம் கொண்டுள்ளது போன்ற ஒரு தன்மையை அவதானிக்கக் கூடியதாகவும் உள்ளது. இதனையும் தேர்தல் ஆணையாளர் கருத்தில் கொள்வது நல்லது. தேர்தல் பிரசாரங்களுக்கு சமயஸ்தலங்களை பயன்படுத்துவதை தவிர்க்க தேர்தல் ஆணையகம் நடவடிக்கை எடுப்பது நன்று. அது இனங்களிடையேயான ஒற்றுமைக்கு ஆரோக்கியமாக அமையலாம்.

மபாஸ் சனூன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமாஓயா திட்டத்தை துரிதப்படுத்த ஜனாதிபதி மைத்திரி ஆலோசனை

(கொழும்பு)

உமா ஓயா செயற்றிட்டத்தை துரிதப்படுத்தி அதன் அனுகூலங்களை மக்களுக்கு பெற்றுக்கொடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு ஆலோசனை வழிங்கினார்.

நேற்று முன்தினம் பிற்பகல் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அவ்வமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

உமா ஓயா செயற்றிட்டத்தின் செயற்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் நிதி நிலைமைகள் தொடர்பாக இதன்போது ஜனாதிபதி அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடினார்.

மகாவலி அபிவிருத்தி சுற்றாடல் அமைச்சின் 2017 ஆம் ஆண்டிற்குரிய முன்னேற்றம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனாங்களின் முன்னேற்றம் வெளிநாட்டு நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்படும் மகாவலி செயற்றிட்டங்கள், சுற்றாடல் செயற்றிட்டங்கள் மற்றும் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் வருமானம் ஈட்டும் நிறுவனாங்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் மீளாய்வு செய்யப்பட்டது.

தேசிய சுற்றாடல் கொள்கையை உருவாக்கும் செயற்பாட்டின் முன்னேற்றம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

எதிர்காலத்தில் உரிய காலத்தில் மழை பெறப்படாமையினால் நாட்டில் ஏற்படக்கூடிய வரட்சி நிலையை இனங்கண்டு அதனை எதிர்கொள்ளக்கூடியவாறு விவசாய மற்றும் உணவு உற்பத்தி துறைகளில் திட்டமிடுவதற்கு நிபுணர்களின் குழுவொன்றினை நியமிக்கவும் ஜனாதிபதி இதன்போது அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதியமைச்சர் அநுராத ஜனரத்ன, அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க, மகாவலி பணிப்பாளர் ஜயரத்ன உள்ளிட்ட அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (இ-7)






# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்:ரோகினி
கி.பா: 98 சூரி,செவ் 8 இல்
உயரம்: 6'1"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/8146

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 29
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L/லண்டன்
NOT PR
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: B/8148

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 43 சூரி செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:M.Eng/கனடா
தொ.இ: B/8151

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 33சூரி செவ் 4 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:Phd/பொறியியலாளர்
தொ.இ: B/8152

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 149cm
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/8173

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 51 செவ் 12 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:தனியார் தொழில் அமெரிக்கா
தொ.இ: G/8185

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா சூரி செவ் 11 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்
தொ.இ: G/8186

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8187

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

# அப்பா... அப்பா...!

(நேற்றைய தொடர்ச்சி)

வீர மரணம் அடைய விரும்புகிறேனே தவிர பட்டினியால் சாக விரும்பவில்லை" என்று அரசர் கேட்டுக் கொண்டும் பலனில்லை.

இளவரசரின் தாய், "அவர் உன் தந்தையடா. அவர் எப்படி அரசபோகத்தில் வாழ்ந்தவர். இன்று அவருக்கு சிறைவாழ்வா? வேண்டாம் எங்களை விட்டு விடு. எங்காவது போய் பிச்சை எடுத்தாவது அல்லது கூலி வேலை செய்தாவது பிழைத்துக் கொள்வோம். இல்லையேல் என்னையும் தந்தையுடன் சேர்த்து சிறையிலே அடைத்துவிடு" என்று எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் மகன் மனம் இளகவில்லை.

"மகன் தகாத வழியில் செல்கிறான். நாமாவது உடனிருந்து அவனைத் திருத்துவோம்' என்ற எண்ணத்தில் இளவரசரின் தாய், அனைத்தையும் பொறுத்துக் கொண்டு காலத்தை ஓட்டினாள். மகனின் மனம் மாறாதா? என்று ஏங்கி னாள்.

"சாப்பாடு, தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று அவன் என்ன எனக்கு உத்தரவு போடுவது? கொடுத்தால் கூட நான் கையால் தொடப்போவதில்லை. பட்டினி கிடந்தே உயிர் நீத்துக் கொள்கிறேன். இந்த அவல வாழ்வு வாழ்வதை விட மரணம் எவ்வளவோ மேல்!" என்று முடிவுக்கு வந்த அரசர், ராணி இரகசியமாகக் கொண்டு வந்து கொடுத்த உணவையும், தண்ணீரையும் தொட மறுத்துவிட்டார்.

அன்று பௌர்ணமி. வானில் வெள்ளி நிலா தண்ணொளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. இளவரசர் தற்போது அரசர். மாளிகையின் நிலா முற்றத்தில் அமர்ந்து தனது ஒரு வயது மகனைக் கொஞ்சிக் கொண்டிருந்தான். பக்கத்தில் இளவரசி, அரசரின் தாய் நீர் வடியும் கண்களுடன்.

"நீயும் இதேபோல் ஒரு வயதுப் பையனாக இருந்த போது, உன் தந்தையும் உன்னை இதே நிலா முற்றத்தில் இது போன்ற முழுநிலா நாளில், உன்னைத் தூக்கி கண்ணே, மணியே என்று கொஞ்சிய காட்சி நினைவுக்கு வருகிறது. உன்னைத் தூக்கிய கரங்களில் விலங்கு. கொஞ்சிய வாய்க்கு தண்ணீர் கூட கிடையாது. உன் மகனும் வளர்ந்து நாளைக்கு உனக்கும் அந்த நிலைவர நேரமாகாது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றனர்" என்று அரசருக்கு தன் தாய் சொன்னது நெஞ்சைத் தொட்டது.



அரசர் கண்ணில் அந்தக் காட்சியும் படமாக தெரிகிறது. அதே நிலா முற்றம்.. தன் தாய், தந்தையான அரசர் சிறு குழந்தையாக தான். தன்னை அரசர் கண்ணே, மணியே என்று கொஞ்சி மகிழ்ந்தது.

"அந்தத் தந்தை இப்போது என்னால் சிறைப்படுத்தப்பட்டு, தண்ணீர்கூட கொடுக்காமல் கொடுமைப்படுத்துகிறேன். தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி இதுதானா? எல்லாம் எதற்காக? இந்த ஆட்சிப் பீடத்திற்காகத் தானே? பெற்று வளர்த்த தந்தையை விடவா ஆட்சி பெரிது? கேட்பார் பேச்சைக் கேட்டு மதி கெட்டுப் போய் இத்தகைய கொடுமையை இழைத்து விட்டேன். இதோ இப்போதே நான் நேரில் சென்று தந்தையை விடுதலை செய்கிறேன். ஆட்சியை அவரிடம் ஒப்படைத்து விட்டு நான் எப்போதும் இளவரசன் என்ற கௌரவத்தோடு அரச போகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்' என்று நினைத்து நிலாமுற்றத்திலிருந்து சிறைச்சாலைக்கு ஓடினான்புதிய அரசரான மனம்மாறிய இளவரசர்.

அதற்குள் காலம் கடந்து விட்டது. உணவும், தண்ணீருமின்றி வாடிய அரசரின் உயிர், தூக்கத்திலிலேயே போய் விட்டது. மயிர் நீப்பின் வாளாக் கவரிமான் போன்ற அரசன் நீளத்துயிலில் ஆழ்ந்து விட்டார்.

"அப்பா!" என்று அலறிக்கொண்டு தந்தையின் மேல் விழுந்து புரண்டு அழத்தான் முடிந்தது அரசரால். தன் செயல் இவ்வளவு தூரத்திற்கு கொண்டு செல்லும் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை. தனது இத்தகைய நடத்தைக்குக் காரணமான புல்லுருவி நண்பர்களை முதலில் தன்னிடமிருந்து விலக்கினார்.

தன் தந்தையின் மறைவை முன்னிட்டு பெரும் தான தர்மங்களைச் செய்தான். "உயிரோடு இருக்கும் போது ஒரு குவளை நீரும் கொடுக்காது கொன்று விட்டு இப்போது அரசரின் மறைவிற்கு தான தர்மங்களா? நினைவஞ்சலியா?' என்று சனங்கள் அரசரின் காதுபடவே பேசிக் கொண்டனர்.

என்னதான் தான தர்மம் செய்தாலும் அவன் செய்த பாவம் அவன் மனதை குத்திக் குதறிக் கொண்டே இருந்தது. அந்த மனசாட்சியின் உறுத்தலிலிருந்து அவனால் தப்பவே முடியவில்லை.

(முற்றும்)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

01.2018
11

❖1569-முதலாவது குலுக்குச் சீட்டு இங்கிலாந்தில் பதிவாகியது.

❖1693- சிசிலியில் எட்னா எரிமலை வெடித்ததையடுத்து இடம்பெற்ற பெரும் நிலநடுக்கம் சிசிலி மற்றும் மோல்ட்டாவின் பல பகுதிகளை அழித்தது.

❖1782-பிரித்தானியர் சேர் எட்வேர்ட் ஹியூஸ் மற்றும் சேர் ஹெக்டர் மன்ரோ தலைமையில் திருகோணமலையைக் கைப்பற்றினர்.

❖1787- யுரேனஸ்கோளின் இரண்டு துணைக்கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

❖1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அலபாமா ஐக்கிய அமெரிக்காவில் இருந்து விலகியது.

❖1878- பால் முதற் தடவையாக புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.

❖1911- காம்ரேட் என்ற பத்திரிகையை விடுதலைப் போராட்ட வீரர் மவுலானா முகம்மது அலி கொல்கத்தாவில் வெளியிட ஆரம்பித்தார்.

❖1922- நீரிழிவுக்கு மருந்தாக மனிதரில் இன்சுலின் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது.

❖1942- இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் நெதர்லாந்தின் மீது போரை அறிவித்தது.

❖1942- இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் கோலாலம்பூரைக் கைப்பற்றியது.

❖1957- ஆபிரிக்க உடன்பாடு டக்கார் நகரில் எட்டப்பட்டது.

❖1962- பெருவில் இடம்பெற்ற சூறாவளி காரணமாக 4,000 பேருக்கு மேல் இறந்தனர்.

❖1972- கிழக்கு பாகிஸ்தான் வங்களாதேசம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

❖2007- செயற்கைக் கோள் தகர்ப்பு ஏவுகணைச் சோதனையை சீனா நடத்தியது.

**பிறப்புகள்**

❖1755- அலெக்சாண்டர் ஆமில்டன், அமெரிக்கப் பொருளியலாளர், அரசியல்வாதி (இ. 1804)

❖1859-கர்சன் பிரபு, பிரித்தானிய இந்தியாவின் 35வது தலைமை ஆளுநர் (இ. 1925)

❖ 1911-சானா, இலங்கை நாடகாசிரியர், வானொலி நாடகக் கலைஞர் (இ. 1979)

❖ 1953-ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, இலங்கை அரசியல்வாதி (இ. 2008)

❖1973- ராகுல் டிராவிட், இந்தியத் துடுப்பாளர்

**இறப்புகள்**

❖1753- ஹேன்ஸ் ஸ்லோன், அரிய-ஆங்கிலேய மருத்துவர் (பி. 1660)

❖1928- தாமஸ் ஹார்டி, ஆங்கிலேய எழுத்தாளர் (பி. 1840)

❖1932-திருப்பூர் குமரன், இந்திய விடுதலைப் போராட்ட தியாகி (பி. 1904)

❖1966-லால் பகதூர் சாஸ்திரி, இந்தியாவின் 2வது பிரதமர் (பி. 1904)

❖1975- நீலாவணன், ஈழத்துக் கவிஞர் (பி. 1931)

❖1976- ஏரம்பு சுப்பையா, இலங்கையின் நடன ஆசிரியர்

❖2007-எருவில் மூர்த்தி, ஈழத்துக் கவிஞர்

❖2008-எட்மண்ட் இல்லரி, நியூசிலாந்து மலையேறி (பி. 1919)

❖2013-ஏரன் சுவோற்சு, அமெரிக்கக் கணனியாளர் (பி. 1986)

❖2014-ஏரியல் சரோன், இஸ்ரேலின் 11ஆவது பிரதமர் (பி. 1928)

**சிறப்பு நாள்**

❖குழந்தைகள் நாள் (துனிசியா)

❖[illegible]

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 200 | 140 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 100 | 160 | 200 | 200 |
| தக்காளி | 80 | 100 | 100 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 60 | 40 | 35 |
| கோவா | 50 | 100 | 80 | 80 | 50 |
| கரட் | 100 | 100 | 180 | 120 | 120 |
| பூசணி | 80 | 100 | 60 | 80 | 50 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 400 | 300 | 260 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 100 | 140 | 150 | 130 |
| பாகற்காய் | 200 | 100 | 270 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 170 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 120 | 100 | 120 | 120 | 110 |
| லீக்ஸ் | 200 | 100 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 100 | 160 | 160 | 150 |
| கறிமிளகாய் | 200 | 100 | 270 | 200 | 200 |
| முருங்கைக்காய் | — | — | 1200 | — | — |
| போஞ்சி | 200 | 100 | 200 | 120 | 180 |
| கத்தரிதம்புள்ள | 60 | 100 | 140 | 100 | 70 |
| கீரை – 1பிடி | 20 | 50 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 40 | 20 | 60 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 75 | 75 | 90 |
| இராசவள்ளி | 200 | 100 | 300 | 250 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 100 | 200 | — | 250 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 50 |
| ஈரப்பலா | 80 | 50 | — | 80 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த வழியை மறவாதிருந்தால் எந்தப் பதவியும் பறிபோகாது.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நேர்மையோடு அரசியலை நடத்துங்கள்

அரசியல் என்றாலே ஐயோ வேண்டாம் என்று மக்கள் சுஹ்றுமளவுக்கு நிலைமை வந்துள்ளது. அந்தளவுக்கு அரசியலில் மருந்துக்கும் நேர்மை இல்லை என்ற சூழ்நிலை உருவாகி விட்டது.

அதிலும் குறிப்பாக கடந்த தேர்தல்களில் வெற்றி பெற்றவர்கள் மக்களை ஏமாற்றும் நோக்கில் பொய்ப்பிரசாரங்களை செய்வது தெளிவாகிறது.

தேர்தல் பிரசாரம் என்பது ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தத்தம் கொள்கைகள், இலக்குகள் என்பவற்றை முன்வைப்பதாக இருக்க வேண்டும்.

ஆனால் இங்கு மக்களை ஏமாற்றி வாக்குப் பெறுகின்ற தந்திரோபாயங்களே தேர்தல் பிரசார யுக்தியாகப் பின்பற்றப்படுகிறது.

ஒருமுறை மக்கள் ஆதரித்துவிட்டனர் என்பதற்காக தாம் பொய்யைக் சுஹினாலும் அதனை மக்கள் நம்புவர் என்று நினைப்பது மிகமோசமான செயலாகும்.

இன்றைய சூழ்நிலையில், தமிழ் மக்கள் எல்லாம் இழந்து வெறுமை நிலையில் உள்ளனர்.

இந்நேரத்தில் தமிழ் மக்களுக்கு ஆதரவாக, துணையாக இருக்க வேண்டியவர்கள் அரசியல்வாதிகள்.

ஆனால் அவர்கள் தமிழ் மக்களின் இழப்புக்களையும் துன்பங்களையும் தமக்குச் சாதகமாக்கி மக்களை ஏமாற்றிப் பிழைப்பு நடத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படுகின்றனர்.

இத்தகைய ஏமாற்றுத்தனங்கள் கைவிடப்பட வேண்டும். எதிலும் நேர்மை, உண்மை, நீதி என்ற உயர்ந்த சிந்தனையோடு மக்களை அணுகுவதே நல்லது.

நம்பி வாக்களித்த மக்களைத் தொடர்ந்து ஏமாற்றுவதும் அவர்களிடம் பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதும் இனத்தை அழிப்பதற்கான வேலையேயன்றி, வேறு எதுவுமில்லை என்பதே உண்மை.

இவை ஒருபுறமிருக்க தமிழ் மக்களும் அரசியல் தொடர்பில் விழிப்படைய வேண்டும். இல்லையேல், அரசியல்வாதிகளின் பொய்யுரைக்கும் ஏமாற்றுத்தந்திரத்துக்கும் ஆளாக வேண்டி வரும்.

என்று மக்கள் சிந்திக்கத் தலைப்படுகின்றனரோ, என்று அரசியல்வாதிகளிடம் கேள்வி கேட்கத் தயாராகின்றனரோ; என்று நீங்கள் என்ன செய்தீர்கள் என வினவ முற்படுகின்றனரோ அன்றுதான் அரசியல்வாதிகள் விழிப்படைவர்.

இதைவிடுத்து தேர்தல் தினத்தன்று ஆர்வமற்றவர்களாக வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று கடமையைச் செய்து விடுவோம் என்ற நினைப்போடு வாக்களித்தால் எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

எனவே அன்புக்குரிய தமிழ் மக்களே! தொடர்ந்தும் அரசியல்வாதிகளைக் குறை சொல்லாமல், எங்கே நீங்கள் ஒருக்கால் மாறிப் பார்ப்போம் விளைவு என்னவாக இருக்கும் என்று தெரிந்து கொள்வோம் எனத் துணிகின்றபோது, எல்லாம் சாதகமாக அமையும்.

ஆகையால் அரசியல்வாதிகளை வழிப்படுத்துவதற்கான ஒரே வழி மக்கள் விழிப்படைவது தான்.

# பற்றைக் காணிகளைத் துப்புரவு செய்யாத உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பற்றைக் காணிகளைத் துப்புரவு செய்யாத உரிமையாளர்களுக்கு எதிராக உடனடி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக சுகாதாரத் துறையினர் அறிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் மீண்டும் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் பாதிப்பைக் கட்டுப்படுத்தும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக பற்றைக்காணிகளில் டெங்கு நுளம்பு பரவுவதற்கான அதிகூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

எனவே பலமுறை எச்சரிக்கை விடுக்கப்பட்டும் பலர் தமது காணிகளைத் துப்புரவு செய்ய வில்லை. இவர்களுக்கு எதிராக ஒரு வாரத்தினுள் சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

அத்துடன் வீடுகளின் முன்றலில் படர்ந்துள்ள பற்றைகள் புற்களை பொதுமக்கள் துப்புரவு செய்ய வேண்டும். பல இடங்களில் பார்த்தீனியச் செடி வளர்ந்து வருகிறது.

அத்துடன் கிணற்றினுள் மீன்களை விடுவதற்கு விரும்புபவர்கள், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மீன்களை பெற்றுக்கொள்ள முடியும். இதன்மூலம் நுளம்புக் குடம்பி பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியும்.

மேலும் எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து, பொலிதீன் பாவனை தடைச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப் படவுள்ளது.

எனவே வியாபார நிலையங்கள், உணவகங்களில் தடை செய்யப்பட்ட பொலித்தீன் வகைகள் பாவனைக்குட்படுத்தப்படுவது தவிர்க்கப் பட வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-9)

# மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் நிபுணத்துவம் வாய்ந்த குழு தேவை – ராஜித

மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் நிபுணத்துவம் வாய்ந்தகுழுவொன்றை அமைத்து உண்மைகளை கண்டறிய வேண்டும் என தெரிவித்த அமைச்சரவை இணை பேச்சாளர் ராஜித சேனாரத்ன, குறித்த விவகாரத்தில் அவசரமான எந்த வித நகர்வுகளையும் முன்னெடுக்க முடியாது எனவும் ஊழல் எவ்வாறு இடம்பெற்றது என்ற தெளிவு இல்லாத நிலையில் குற்றவாளிகளை தண்டிக்க இயலாது எனவும் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போதே அமைச்சரவை இணை பேச்சாளர் ராஜித சேனாரத்ன இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை அண்மையில் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது.

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை உள்ளடக்கி அண்மையில் விசேட உரையொன்றை ஜனாதிபதி நிகழ்த்தியிருந்தார்.

இது தொடர்பில் அரசாங்கத்திற்குள்ளும் வெளியிலும் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்ற நிலையில், மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை தொடரபில் பாராளுமன்ற விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டுமென சபாநாயகரிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனை அடுத்து, நேற்று காலை கூடிய பாராளுமன்ற நிகழ்வில் மத்திய வங்கியின் பிணை முறி தொடர்பான 1500 பக்கங்கள் கொண்ட பிணைமுறி அறிக்கையை அடுத்தவாரம் பாராளுமன்றில் முன்வைப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாக சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சட்டவிரோத கேபிள் இணைப்புகள் குடாநாட்டில் அகற்றப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அனுமதிப்பத்திரமின்றி முன்னெடுக்கப்பட்ட கேபிள் இணைப்புகள் நேற்று முதல் அகற்றப்பட்டு வருகின்றன.

கொழும்பிலிருந்து வருகை தந்த தொலைத்தொடர்பு ஆணைக்குழு அதிகாரிகளாலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

அரசின் அனுமதிப்பத்திரமின்றி தொலைக்காட்சி அலைவரிசைகளின் கேபிள் இணைப்பை வழங்க முடியாது என தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

சட்டவிரோத கேபிள்கள் அனைத்தையும் டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் அகற்றுமாறும் அது கேட்டுக் கொண்டது. எனினும் அவை அகற்றப்படவில்லை.

இந்த நிலையில் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் வருகை தந்தனர். ஒவ்வொரு பகுதிகளுக்கும் சென்று சட்டவிரோத கேபிள் இணைப்புகளை அவர்கள் அறுத்து அகற்றினர்.

மேலும் சட்டவிரோதமாக கேபிள் இணைப்பை வழங்கியவர்களின் சேவை நிலையத்தை முற்றுகையிட்டு, அங்குள்ள தொழில்நுட்ப சாதனங்களை அரசுடமையாக்கும் பணிகளை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர். (ம)

## மைத்திரியின் பதவிக் காலம் நீடிக்கப்படுமா? ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு இன்று

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம் தொடர்பாக முடிவு செய்வதற்காக, உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட அமர்வு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தனது பதவிக்காலம் 2020ஆம் ஆண்டு நிறைவடைகிறதா? அல்லது 2021 ஆம் ஆண்டு நிறைவடைகிறதா? என்று விளக்கமளிக்குமாறு உச்ச நீதிமன்றத்திடம் மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், ஐந்து நீதியரசர்களைக் கொண்ட அமர்வினை நடத்தி, முடிவை அறிவிக்கும் என்று தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் அறிவித்துள்ளார்.

இதற்காக இன்று உச்ச நீதிமன்றத்தின் திறந்த அமர்வு ஒன்றில் இந்த விவகாரம் குறித்து விவாதிக்கப் படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் 2020 அல்லது 2021 வரையான காலப் பகுதியிலானதா என்பது குறித்து எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னதாக தெரியப்படுத்துமாறு நேற்றுமுன்தினம் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## சத்திய தரிசனம்



### ஆன்மீகக் காற்று வீசட்டும்

❖ இறையருளின்றி நம்மால் எதுவும் செய்ய இயலாது. தானே எதையும் செய்ய முடியும் என்ற எண்ணம், தான் எனும் இறுமாப்பை வெளிப்படுத்துவதாகும்.

❖ நாக்கு பேச்சை நிறுத்தினால், மனம் பேசத் துவங்கிவிடுகிறது. மனதின் உரையைக் கட்டுப்படுத்த அறிவு உயிர்த்தெழ வேண்டும்.

❖ உலகிலுள்ள அனைத்து பொருள்களும் ஏதோ பயனுள்ள ரகசியத்தை வெளியிட வைத்துள்ளது. பயனற்ற பொருள் எதையும் கடவுள் படைப்பதில்லை. அனைத்துப் பொருட்களும் பயனுள்ளவை; அர்த்தமுள்ளவை; மகிழ்வூட்டுபவை;மதிப்புள்ளவை. ஆனால், அதன் மர்மங்களை நாம் அறிய முயல்வதில்லை.

❖ ஆன்மீகம் எந்த ஒரு நாட்டுக்கும் உரிய தனி ஏகபோக உரிமையல்ல. எந்த இடத்திலும் அடக்கிவைக்க முடியாத காற்று போன்றது. ஆன்மிக காற்று உலகெங்கும் வீசட்டும்.

❖ கடவுள் கண்ணுக்கு புலப்படாவிட்டாலும் அவர் இருப்பது உறுதியானது. காரணம் படைப்பவனின்றிப் படைப்புக்கள் இல்லை. மண்ணின்றிப் பானையில்லை என்பது போல், பிரும்மத்தின் மூலப் பொருள்களின்றிப் பிரபஞ்சம் இல்லை.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### குழந்தைகள் படிப்பை சீரமைப்பது எப்படி?

இன்றைய காலத்தில் சில குழந்தைகள் தாய், தந்தை, ஆசிரியர் யார் சொன்னாலும் அனுசரிக்காத நிலையுள்ளது. அது நல்லதல்ல. சிறு வயதிலேயே நாம் அனுசரித்துப் பழக வேண்டும். வயதுடன் பக்குவமும் வளர்ந்தால் நன்மை தீமைகளைக் கண்டறிந்து செயற்பட முடியும். ஓரளவிற்கு நன்றாகப் படிக்கும் குழந்தைகளை உற்சாக மூட்டி அவர்கள் மேலும் நன்றாகப் படிப்பதற்கான வழி முறைகளைச் சொல்லிக் கொடுப்பது பெற்றோர்களின் கடமையாகும்.

சிலபெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை சரியாகப் படிப்பிக்கவில்லை. அதிக மதிப்பெண்கள் பெறவில்லை என்று கூறி அவர்களைத் திட்டுவார்கள். அவர்களை தகாத வார்த்தைகளால் திட்டுகிற பெற்றோர்களும் உண்டு. அவ்வாறு செய்தல்கூடாது. குழந்தைகளின் அறிவுத்திறன், ஆரோக்கியம், சூழ்நிலை அனைத்தையும் கணக்கில் கொண்டு அவனால் என்ன முடியும் என்பதை அறிந்து கையாள வேண்டும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகுவான வெற்றியை பெற்றது சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும், பாடசாலைகளின் 19 வயது, டிவிசன் - 2 அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மேற்படி சுற்றுப் போட்டியின் போட்டியொன்று யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் 5, 6 ஆம் திகதிகளில் நடைபெற்றது. அந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கண்டி, ஸ்ரீ பிரியரத்ன மகா வித்தியாலயம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்ரீ பிரியரத்ன மகா வித்தியாலய அணி, முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதற்கிணங்க களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, வசந்தன் யதுசனின் சதத்தின் உதவியுடன் 60 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்ற போது, ஆட்டத்தை இடைநிறுத்தியது. யதுசன் 106 ஓட்டங்களையும், என்.சௌமியன் 32, டி.செரோபன் 29, வி. அபிலக்சன் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பிரியரத்ன அணி சார்பாக, சந்தர சனில்க 21 ஓவர்கள் பந்துவீசி 98 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து, 7 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்ரீ பிரியரத்ன மகா வித்தியாலய அணி, 51 ஓவர்களில் 123 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்து, பலோ ஒன் நிலைக்கு தள்ளப்பட்டது. (தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடும் நிலைக்கு) துடுப்பாட்டத்தில் கவிந்து நிமேஸ், றஜித்தா அசான் ஆகியோர் தலா 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில்சென். ஜோன்ஸ் அணி சார்பாக, முர்பின் அபினாஸ் 13 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்களையும், கனகரட்ணம் கபில்ராஜ் 17 ஓவர்கள் பந்துவீசி 43 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பிரியரத்ன அணி, 149 ஓட்டங்கள் பின்னிலையில் தமது இரண்டாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. விக்கெட்களை பறிகொடுத்தாலும், இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க கடுமையாக போராடியது.

50.2 ஓவர்களில் 153 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் கவிந்து நிமேஸ் 31 ஓட்டங்களையும், ஹேசன் கவிந்த 29 ஓட்டங்களையும், யசிரு டினித் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் அணி சார்பாக, கனகரட்ணம் கபில்ராஜ் 15 ஓவர்கள் பந்துவீசி 34 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும், வசந்தன் யதுசன் 3 விக்கெட்களையும், முர்பின் அபினாஸ் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

5 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது.(7-26)

# புதிய கடினப்பந்து ஆடுகளம் இரணைமடு விமானப்படையால் அமைப்பு





(பரந்தன்)

கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் கடந்த மாதத்தில் வலயக்கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வரலாற்றில் முதல்தடவையாக கடினப்பந்து துடுப்பாட்ட பயிற்சிகள் அதிபரினதும் பழைய மாணவர்களதும் வேண்டுகோளுக்கு இணங்க கிளிநொச்சி மாவட்ட பாடசாலை துடுப்பாட்ட பயிற்சியாளரினால் ஆரம்பிக்கப்பட்டது.

அத்துடன் பாடசாலைக்கு இலங்கை துடுப்பாட்ட சபையின் துடுப்பாட்ட பயிற்சியாளர்களுக்கு பொறுப்பான முகாமையாளர், வடக்கு மாகாண துடுப்பாட்ட பயிற்சியாளர் விஜயம் செய்ததுடன் ஒருபகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கி யுள்ளதுடன்,மாவட்ட துடுப்பாட்ட சம்மேளனமும் ஒரு தொகுதி உபகரணங்கள் வழங்கியிருந்தனர்.

அவற்றை வைத்து பழைய மாணவர்களது உதவியுடன் மாவட்ட பாடசாலைப் பயிற்சியாளரினால் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது ஆடுகளம் தேவைப்பட்ட நிலையில் இரணைமடு விமானப் படையினரால் சுமார் இரண்டரை இலட்சம் ரூபா (250,000) பெறுமதியான சிறந்த ஆடுகளம் விமான படைத் தளத்தின் கட்டளை அதிகாரி நாணயக்காரவின் நேரடி மேற்பார்வையில் அமைக்கப்பட்டு அவரால் கடந்த 8 ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை அதிபர் M.C.L .மனுவலிடம் கையளிக்கப்பட்டது. (7-312)

# ஹோலி விக்கெட்தான் எங்கள் இலக்கு கூறுகிறார் தென்னாபிரிக்க வீரர் பிலாண்டர்



இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் ஹோலியின் விக்கெட் தான் எங்களது இலக்காக இருந்தது என்று தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் பிலாண்டர் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் முன்னணி வேகப்பந்து வீரர்களில் ஒருவர் பிலாண்டர்.

கேப்டவுனில் நடந்த முதல் டெஸ்டில் அவர் இந்திய துடுப்பாட்டக்காரர்களுக்கு கடும் சவாலாக திகழ்ந்தார். அவரது பந்தை எதிர்கொள்ள முடியாமல் இந்திய வீரர்கள் திணறினார்கள். அவர் 6 விக்கெட் வீழ்த்தி தென்னாபிரிக்க வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார்.

இந்த நிலையில் இந்திய அணி தலைவர் விராட் ஹோலி தான் எங்களது இலக்காக இருந்தது என்று பிலாண்டர் தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

விராட்ஹோலி மிகவும் அருமையான அதிரடி ஆட்டக்காரர். அவரை வீழ்த்துவதுதான் எங்களது இலக்காக இருந்தது. விராட் ஹோலியை தொடக்கத்திலேயே அவுட் செய்துவிட்டால் எங்களுக்கு வெற்றி எளிது என்று கணித்தோம்.

அதன்படியே இரண்டு இன்னிங்சிலும் அவரை விரைவில் அவுட் செய்தோம். விராட் ஹோலிக்கு தொடர்ந்து 'அவுட் - சுவிங்கர் பந்துகளையே வீசினேன். அதில் ஒரு பந்தில் அவர் சிக்கி விட்டார். இவ்வாறு பிலாண்டர் கூறினார். (7)

# 14 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் சதம் அடித்து ஜூனியர் டிராவிட் சாதனை




14-வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டியில் முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் ராகுல் டிராவிட்டின் மகன் சமித் சதம் அடித்து அசத்தினார்.

கர்நாடகா மாநில கிரிக்கெட் சங்கம் சார்பில் பள்ளிகளுக்கிடையேயான 14-வயதுக்குட்ட சிறுவர்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில் விவேகானந்தா பள்ளியும், மல்லையா அதிதி சர்வதேச பள்ளியும் மோதின. இதில் மல்லையா அதிதி சர்வதேச பள்ளி அணியில் முன்னால் இந்திய கிரிக்கெட் வீரர்களான ராகுல் டிராவிட் மகன் சமித்(வயது-12), சுனில் ஜோஷியின் மகன் ஆர்யன் ஜோஷியும் இடம் பெற்றிருந்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மல்லையா அதிதி சர்வதேச பள்ளி அணி, 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 500 ஓட்டங்கள் எடுத்தது. ராகுல் டிராவிட்டின் மகன் சமித் அதிரடியாக விளையாடி 150 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

தொடர்ந்து விளையாடிய விவேகானந்தா பள்ளி அணி எதிரணியினரின் பந்துவீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் 88 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதனால் மல்லையா அதிதி சர்வதேச பள்ளி அணி, 412 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபாரமாக வெற்றி பெற்றது. (7)

# ஐ.பி.எல்.போட்டிகளில் ஜோரூட் பங்கேற்கக்கூடாது இங்கிலாந்து பயிற்சியாளர் வேண்டுகோள்





ஏப்ரல் மாதம் தொடங்க உள்ள ஐ.பி.எல். தொடருக்கான ஏலத்தில் ஜோரூட் பங்கேற்கக் கூடாது என இங்கிலாந்து அணி பயிற்சியாளர் டிரிவொர் பெய்லிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரில், அவுஸ்திரேலியா 4-0 என அபாரமாக வெற்றி பெற்றது. இந்நிலையில், இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோரூட் ஐ.பி.எல். தொடரில் விளையாடக் கூடாது என அந்த அணியின் பயிற்சியாளர் கூறியுள்ளார்.

சுமார் 2 மாதத்திற்கும் மேலாக நடைபெற்ற ஆஷஸ் தொடரினால் இங்கிலாந்து வீரர்கள் உடலளவிலும், மனதளவிலும் சோர்வடைந்துள்ளனர். மேலும் ஜோரூட் தற்சமயம் நல்ல பார்மில் இல்லாததாலும், 2018 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணிக்கு அடுத்தடுத்த தொடர்களில் விளையாட இருப்பதாலும், அவர் ஐ.பி.எல். தொடரில் விளையாடாமால், தனது விளையாட்டை மேம்படுத்த வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி இரண்டு முறை ஐ.பி.எல். கோப்பையை கைப்பற்றும் போதும் டிரிவொர் பெய்லிஸ் அந்த அணியின் பயிற்சியாளாக செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களும்...

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ளதாக ஊடகத்துறை அமைச்சு தெரியவித்துள்ளது.

மது ஒழிப்பினை தனது தேர்தல் பிரசாரங்களின் போது வாக்குறுதிகளை வழங்கிய நல்லாட்சி அரசாங்கம் 2018ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பியரிற்கு விலை குறைப்பினைச் செய்திருந்தது.

இந்நிலையில், தற்போது மதுபான விற்பனை நிலையங்களில் பெண்கள் பணிபுரிவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நாடாளுமன்றில்...

மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பான விவாதத்தை குழப்புவதற்கும், நாடாளுமன்ற அமர்வில் கூச்சலிடவும் அவர்கள் தயாராகியே வந்திருந்ததாக அமைச்சரவை இணைப் பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட அமைச்சர் நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற மோதல் தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

இதற்கு முன்னர் பல்வேறு ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. ஆனால் அவை முன்வைத்திருந்த அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை. இவ்வாறே இந்த ஆணைக்குழுவை நியமித்த நேரத்திலும் காலத்தை இழுத்தடிப்பு செய்யவே ஆகும் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இப்போது அறிக்கை வெளியாகியபோது அறிக்கையை கேட்டு கூச்சலிட்டனர். இப்படியான பிரச்சினைகளின்போது கடந்த ஆட்சிக் காலத்தில் இவ்வாறான அறிக்கை கோரல் கூச்சல்களை நான் கேள்விப்படவில்லை. சபாநாயகரது அறிவிப்புக்கு எதிராக சபா மண்டபத்தின் நடுவே நின்று பெரும் கூச்சல் எழுப்பினார்கள்.

ஏற்கனவே தயார் நிலையில் வந்த அவர்கள் நல்ல சுவரொட்டிகளையும் ஏந்தி போராட்டம் செய்தார்கள். நாடாளு மன்றத்தில் விவாதத்தை நடத்தவும், அதில் பல விடயங்களை முன்வைக்கவும் ஒன்றிணைந்த எதிரணியினர் தயாராகவில்லை. மாறாக கீழே இறங்கி கலகத்தை ஏற்படுத்தவே அவர்கள் முயற்சித்தனர். ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றின் அறிக்கையை வெளியீடு செய்து அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்றார். (ம)

## சபையில் ஏற்பட்ட...

என நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு இராஜகிரியவிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல, நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மோதல் தொடர்பில் கருத்துவெளியிட்டார்.

இவை அனைத்தும் திட்டமிடப்பட்டே இடம்பெற்றுள்ளன. மத்திய வங்கி மோசடி தொடர்பாக விசேட நாடாளுமன்ற அமர்வை நடத்தும்படி பிரதமர் கோரியது உண்மைதான். ஆனால் அதற்கு முன்னரே நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன சபாநாயகரிடம் கடிதம் மூலம் கேட்டிருந்தார். நாடாளுமன்றத்தை கூட்டியும் இவர்கள் செய்த மோசடியை மறைக்கின்ற செயற்பாட்டினையே செய்தார்கள்.

குற்றவியல் சட்டக்கோவையின் 101ஆவது பிரிவின் கீழ் குற்றத்திற்கு அனுமதி வழங்குவதும் குற்றமாகும். அதேபோல 113ஆவது பிரிவின் கீழ் சூழ்ச்சி செய்வதும் குற்றமாகும். கோப் குழு உறுப்பினர்களுக்கு 100,150 தொலைபேசி அழைப்புக்கள் வந்துள்ளன.

மத்திய வங்கி மோசடியை மறைக்கின்ற செயற்பாடு ஒரு சூழ்ச்சி என்று இல்லாவிட்டால் அவ்வாறான அழைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருக்காது. எனவே இதனை இன்னும் மூடிமறைப்பதற்கு இந்நாட்டிலுள்ள மக்களும், ஊடகங்களும் பின்நிற்காது. மத்திய வங்கியின் மோசடியை மூடிமறைத்துக் கெள்வதற்காக இன்னுமொரு முயற்சியே நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது என்றார். (ம)

## கூச்சல், குழப்பம்...

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பான அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற விசேட அமர்வில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

இலங்கை வரலாற்றில் இடம்பிடிக்கும் அளவுக்கு புது வருடத்தில் நடத்தப்பட்ட முதலாவது நாடாளுமன்ற அமர்வு மாறிவிட்டது. இது தொடர்பான காணொளிகளும் தற்போது வெளிவந்துள்ளன.

பாரிய சர்ச்சையையும், மோதலையும், நாடாளுமன்ற மத்திய பகுதியில் பதாதைகளை ஏந்தியவாறு போராட்டங்கள் நடைபெற்றுள்ளது.

இதில் நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை "திருடன்.. திருடன்.." என கோஷமிட்டதும், போராட்டம் நடத்தியதும், நாடாளுமன்ற விதிமுறைகளை சற்றும் மதிக்காமல் செயற்பட்டதும் அனைவர் மத்தியிலும் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டிய நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சம்பவங்கள் மிகவும் மோசமானவையாக காணப்பட்டன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் உரையாற்றிக்கொண்டிருந்த போது பொது எதிரணி மற்றும் ஆளுங்கட்சியினருக்கிடையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

மத்திய வங்கியின் பிணை முறி தொடர்பான அறிக்கையை அடுத்தவாரம் பாராளுமன்றில் முன்வைப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாக சபாநாயகர் கருஜயசூரிய நேற்றுக் காலை அறிவித்தார். இந்நிலையில், பிணை முறி விவகாரம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் சிறப்புரையாற்றினார். எனினும் அதற்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர், சபைக்கு மத்தியில் வந்து கோசமிட்டவாறு குழப்பம் விளைவித்தனர். ரணிலைத் திருடன் திருடன் என்று எதிர்க்கட்சியினரும், மகிந்தவைத் திருடன் திருடன் என்று ஐ.தே.க.வினரும் குரல் எழுப்பினர்.

மக்களின் பணம் எப்படி கொள்ளையிடப்பட்டது என்பது தொடர்பான உண்மைகள் இலங்கை நாடாளுமன்றத்தில் வெளிப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்ற இரு பிரதான அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

இதனால் சபையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டதுடன், இருதரப்பு உறுப்பினர்களும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். இரு தரப்பும் கைகலப்பில் ஈடுபட்டதால், காயங்களும் ஏற்பட்டன. ஐ.தே.க உறுப்பினர் மரிகார் மீது, கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் காமினி லொக்குகே கடுமையாகத் தாக்கினார்.

அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிய விடயங்கள் குறித்து கருத்துக் கூறினார்.

ஆனால், ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை சமர்ப்பிக்காமல் விவாதம் நடத்த முடியாதென கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஸ்குணவர்த்தன, ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம் ஆகியோர் சபாநாயகரிடம் வலியுறுத்தினர்.

மக்கள் பணம் கொள்ளையிடப்பட்டதை ஏற்க முடியாதென்றும் விவாதம் நடத்தப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சட்டத்தரணி சுமந்திரன் ஆகியோரும் காரசாரமான தொனியில் வலியுறுத்தினர்.

இவர்களின் கருத்துக்குப் பதிலளித்த சபாநாயகர் கரு ஜெயசூரிய, ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்தவாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளதாக அறிவித்தார். ஜனாதிபதி அனுப்பி வைத்த கடிதத்தையும் சபாநாயகர் சபையில் வாசித்தார்.

ஆனாலும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் தொடர்ந்து கூச்சல் குழப்பம் விளைவித்தனர். அந்தக் குழப்பங்களுக்கு மத்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 2006ஆம் ஆண்டில் இருந்து 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்கும் வரை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல்மோசடி மற்றும் படுகொலைகள் குறித்து விளக்கமளித்தார்.

அப்போது குறுக்கிட்ட கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், ரணில் விக்கிரமசிங்க மீது காரசாரமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உரக்கச் சத்தமிட்டனர். சபை நடுவாகச் சென்று கையில் வைத்திருந்த நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திர புத்தகங்களை வீசினர்.

உரையாற்றுவதை குழப்புவதற்கு கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முற்பட்டபோது, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சுற்றி காவல் புரிந்தனர். தொடர்ச்சியான கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றி முடித்தார்.

ஆனாலும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட ஊழல் மோசடி குறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த குற்றச்சாட்டுக்களை தற்போது ஏற்க முடியாதெனவும் மத்திய வங்கி பிணைமுறி ஊழல் தொடர்பாக பேசுவதற்காகவே நாடாளுமன்றத்துக்கு வந்ததாகவும் ஜே.வி.பி கூறியது. கூட்டு எதிர்க்கட்சியும் அவ்வாறு தெரிவித்தது.

எதிர்த்தரப்பு, அவ்வாறு கூறியதையும் பொருட்படுத்தாமல், மகிந்த ராஜபக்ஷ கள்வன் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைகளை உயர்த்தியவாறு உரக்கச் சத்தமிட்டார். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் அவ்வாறு கூறி கோசம் எழுப்பினர். இதனால் கடும் சர்ச்சை ஏற்பட்டது.

இந்த சர்ச்சைகளை, நல்லாட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள், உறுப்பினர்கள் அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஜே.பி.வி. உள்ளிட்ட ஏனைய கட்சிகளும் கூச்சல் குழப்பங்கள் ஏற்பட்டபோது அமைதியாக இருந்து அவதானித்துக் கொண்டிருந்தனர்.

கூச்சல் குழப்பத்தினால் சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டு, கட்சித் தலைவர்களின் கூட்டம் இடம்பெற்றது. பின்னர் சபை கூடியதும் மீண்டும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. இதனால் சபையை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை சபாநாயகர் ஒத்திவைத்தார். (ம)

## உண்மையான திருடர்...

கில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஏற்பாடு செய்துள்ள மக்கள் சந்திப்புக்களின் முதல் சந்திப்பு நேற்று இடம் பெற்றது.

நாட்டை நேசிக்கும் ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய அரசியல் பயணத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுடன் அடியெடுத்து வைப்போமென தெரிவித்த ஜனாதிபதி அரசியலுக்கு பிரவேசித்ததன் பின்னர் பணம் சம்பாதித்து தமது பைகளை நிரப்பிக்கொண்டு மக்களின் மனச்சாட்சியை எட்டி உதைத்து செல்வந்தர் ஆகுவதற்கு எதிர்வரும் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் எந்தவொரு பிரதிநிதிக்கும் இடமளிக்கப்படமாட்டாதென மக்களுக்கு உறுதிமொழி வழங்கினார்.

2015 ஜனாதிபதி தேர்தலின் அப்போதைய அரசாங்கம் தோல்வியடைவதற்கு ஏதுவான பல காரணங்கள் காணப்பட்ட போதிலும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் மேற்கொண்ட ஊழல் மோசடி மற்றும் முறையற்ற செயற்பாடுகளே முக்கிய காரணமாகுமென குறிப்பிட்ட ஜனாதிபதி, பிரதேச சபைகளுக்கும், மாகாண சபைகளுக்கும், பாராளுமன்றத்திற்கும், பிரதமர் பதவிக்கும், ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்படும் எந்தவொரு நபருக்கும் மக்களின் பணத்தை கையாடல் செய்வதற்கு உரிமையில்லை என வலியுறுத்தினார்.

எல்லா தேர்தல்களின் போதும் வாக்குறுதியளிக்கப்பட்ட, ஆயினும் நிறைவேற்றப்படாத மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்து ரஜரட்ட மக்களுக்கான உரிமையானது அந்த விவசாய மக்களுக்காக நிறைவேற்றப்பட்ட வரலாற்று ரீதியான பொறுப்பாகுமென ஜனாதிபதி தெரிவித்தார். தற்போது உரிமை கொண்டாட எத்தனிக்கும் சிலர் ஐந்து வருடங்களாகியும் ஒரு சதத்தையேனும் வழங்காதவர்களே என்பது கவலைக்குரிய விடயமாகுமென குறிப்பிட்ட ஜனாதிபதி, அன்றே இதன் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருப்பின் மொரகஹகந்த நீரினால் ரஜரட்ட பிரதேசத்தின் வயல் நிலங்கள் இதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்னரே செழிப்படைந்திருக்குமெனக் குறிப்பிட்டார்.

இராணுவத்தினர் பழிவாங்கப்படுவதாக இன்று அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும் உண்மையான பழிவாங்கல்கள் இடம்பெற்றது, கடந்த காலத்தில் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா சிறை பிடிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலாகுமென தெரிவித்த ஜனாதிபதி, சர்வதேசத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டு க்களிலிருந்து இராணுவத்தினர், கடற்படை மற்றும் விமானப் படையினரை பாதுகாத்து அவர்களது கௌரவத்தையும் அபிமானத்தையும் பேணுவதற்காக கடமையை தற்போதைய அரசாங்கமே நிறைவேற்றி வருகின்றதென்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்களென தெரிவித்தார்.

தேசப்பற்று நாட்டின் அடையாளம் மற்றும் எமது உரிமைகளை பாதுகாத்து என்றும் தாய் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் முற்போக்கு அரசியல் இயக்கமான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து எதிர்காலத்தில் தூய்மையான அரசியல் செயற்பாடுகளின் ஊடாக சுபீட்சமிக்க நாட்டை கட்டியெழுப்ப நாட்டை நேசிக்கும் அனைவரும் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியினதும் பொதுஜன முன்னணியினதும் தேசிய சுதந்திர முன்னணியினதும் செயற்பாட்டாளர்கள் பலரும் சுயேட்சைக் குழுக்களை பிரதிநிதித்துவம் செய்த அபேட்சகர்கள் பெரும்பாலானோரும் இதன்போது ஜனாதிபதி முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஆதரவு தெரிவித்து மேடைக்கு வருகை தந்தமை விசேட அம்சமாகும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திசாநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீர, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் மக்கள் பிரதிநிதிகள் பலரும் இந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம)

## நாடாளுமன்ற பிரச்சினை...

மன்றத்திற்கும் இடையில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பிணை முறிப்பத்திர விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது, எதிர்க்கட்சியினர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

சபாநாயகரின் நடவடிக்கைகள் காரணமாகவே சபையில் அப்போது அமளி ஏற்பட்டதாகவும் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

எதிர்ப்பு தெரிவிக்கும் தட்டிகளை ஏந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபை நடுவுக்கு வந்து எதிர்ப்பில் ஈடுபட்டதுடன் மோதல்களும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## முதலமைச்சர்...

நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் விசேட உரையுடன் நடைபெறும் இக் கருத்தமர்வில் இடைக்கால அறிக்கையின் மாயைகளை எடுத்துரைத்தல் என்ற விடயப்பொருள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் கருத்துரைக்கவுள்ளார்.

இவ் விசேட கருத்தமர்வில் சகலரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ் மக்கள் பேரவை கேட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

யோகராஜமலர் ஆனந்தநடேசனும் எனது மகள்மாரான ராதை ஆனந்தநடேசனும் ஆனந்தி ஆனந்தநடேசனும் இணைந்து ஐக்கியராஜ்ஜியத்திலிருந்து கருகம்பானை கீரிமலை என்னும் முகவரியில் வதியும் தம்பி திருநாவுக்கரசு என்பவருக்கு வழங்கிய அற்றோணித்தத்துவப்பத்திரத்தை நாங்கள் கைவாங்கி விட்டோமென்பதை இத்தால் யாவருக்கும் அறியத்தருகிறேன்.

குறித்த தம்பி திருநாவுக்கரசு என்பவரிடம் எமது காணி விடயமாக எவரும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் வைக்கவேண்டாம் என்றும் அதற்கு நாங்கள் இனிமேல் பொறுப்பாளர் அல்ல என்பதையும் அறியத்தருகிறோம்.

(2362) திருமதி மேபல் யோகராஜமலர் ஆனந்தநடேசன்





Vacancies In Mullaitiu

We are looking for Accounts Trainee, Stewards, Barman, Housekeeping Supervisor, Receptionist, Security Offices and Garden Maintenance

Salary : Negotiable
Please Contact 021 229 0444
Send CV : info@hoteloceanpark.com

(C-1183)


## ஜனாதிபதி...

இதில் பொதுமக்களுக்கும் உரிமையுண்டு என்று எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், பிணைமுறி தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை தொடர்பாக தொடர்ந்தும் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் தற்காலத்திலும், கடந்த காலங்களிலும் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி, உண்மைத் தன்மையை வெளியிடுவது அவசியம் என்று வலியுறுத்தினார். (ம)

# தவறிவிட்டது

சந்தணகுமார் சுலக்சன் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் வாகன காப்புறுதி பத்திரம் என்பன ஆவரங்காலுக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்க.

**077 657 5907,**
**076 871 2788** (2368)


## சகல விதமான சளி இருமல்களிற்கு சிறந்த மூலிகை இருமல் பாணி

# எவரெஸ்ட் மூலிகை இருமல் பாணி

100% இயற்கையானது




**உள்ளடக்கம்**
ஆடாதோடை, திப்பலி,அதிமதுரம், கண்டங்கத்தரி, சிறு தேக்கு, மிளகு, பனங்கற்கண்டு.

தொடர்ந்து பாவித்து வருவதன் மூலம் ஆஸ்மா நோய் தணிவடையும்

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பு:- எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர் **பிரமநாதன் and Co**

எண் 28,26,
பேரின்ப நாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண் :
0776389356, 0777153571

(1394)


# வாடகைக்கு

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் அலுவலகமாக அல்லது தங்குமிடமாக பாவிக்க கூடிய 8 அறைகளும் சிறிய மண்டபமும் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
071 496 2868, 076 972 0606 (2359)


## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-1120)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


To the Members of The Alumni Faculty of Medicine Jaffna

# NOTICE OF MEETING-AGM

Notice is hereby given that the 2nd Annual General Meeting of The Alumini, Faculty of Medicine, Jaffna will be held at the Board Room, Faculty of Medicine, Jaffna at 2.00 p.m. on Saturday 10th February 2018 for the following purposes.

1.To receive and adopt the report of the Committee and the Audited Accounts for the Year ended 31st December 2017

2.To elect office bearers for 2018/19

3.To appoint an Auditor

4.To consider any other business of which due notice has been given

BY ORDER OF THE COMMITTEE OF MANAGEMENT

Vinayagamoorthy Elankumar

**SECRETARY, THE ALUMINI FACULTY OF MEDICINE JAFFNA**

(2361)

# சேவை நலன் பாராட்டு

11.01.2018



திருமதி **வசந்தமலர் பத்மநாதன்**
(ஆரம்பப்பிரிவு - பகுதித்தலைவர் )

*பிறப்பு 11.10.1958*
*தந்தை - இராசையா தாய் - இராசம்மா*
*பிறப்பிடம் - சண்டிலிப்பாய் மேற்கு சண்டிலிப்பாய்*

**கல்வி கற்ற பாடசாலை**
ஆரம்பக்கல்வி - யா / சண்டிலிப்பாய் வாணி நிகேதன் வித்தியாசாலை
இடைநிலைக்கல்வி - யா/சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்
உயர்கல்வி - யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி

## சேவை விபரம்

யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி 1962.10.01–1995.12.30
மன்/இரணை இலுப்பைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 01.01.1996 – 25.08.1997
யா/சண்டிலிப்பாய் இந்து கல்லூரி 26.08.1997 – 17.02.2010
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை 18.02.2010 – இன்று வரை 10.01.2018

புன்னகை பூத்த நிலவு முகம்
பூவிதழ் மோதும் காற்று வேகம்
மென்நடை கொண்ட சுபாவம்
மெலிதான மொழியின் தேகம்
கற்பித்தல் வாழ்க்கைத் தாகம்
கண்டது மாணவர் பாசம்
இன்றுடன் நிறைவுறு ஆசிரியர் சேவை
இனிதான வாழ்த்துக்கள் இன்னும் தேவை அவர் சேவை



(2306)

**வாழ்த்துவோர் :- அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்கள்**
**(யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை)**

# புனித யோசே வாஸ் ஆண்டு யாழ்.மறைமாவட்ட நிறைவுதின யாத்திரை

*சில்லாலை 13.01.2018 சனிக்கிழமை அழைப்பு*



கிறிஸ்துவில் அன்புள்ள அருட் தந்தையர், அருட் சகோதரிகள், அருட்சகோதரர்கள், பொதுநிலை இறை மக்களுக்கு இலங்கையின் திருத்தூதரான புனித யோசே வாஸ் ஆண்டினை சிறப்பாக நிறைவு செய்யும் முகமாக ஜனவரி 13ஆம் திகதி சனிக்கிழமை சில்லாலையில் ஒழுங்கு செய்யப்படுகின்ற மறைமாவட்ட யாத்திரை நிகழ்வுகளில் தாங்களும் கலந்து எமது புனிதருக்காக இறைவனுக்கு நன்றி கூறவும், அவருடைய பரிந்துரையை மன்றாடவும் உங்களை அன்போடு அழைக்கின்றோம். நிகழ்வுகள் காலை 10 மணி முதல் 3 மணி வரை சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்திலும், 3 மணி முதல் 6 மணி வரை புதிதாக அமையவுள்ள புனித யோசே வாஸ் திருத்தல வளாகத்திலும் நடைபெறும்.

- காலை 10 மணி முதல் - கண்காட்சி
- பகல் 1 மணி முதல் 3 மணி வரை - புனித யோசே வாஸ் பற்றிய திருவுரைகள், தர்க்கப்பிரசங்கம்
- பி.ப 3 மணி - திருத்தல வளாகம் நோக்கிய பவனியும் ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியும்

தூர இடங்களில் இருந்து வருவோருக்கான பிரயாண ஒழுங்குகள், தங்குமிட வசதிகள் மற்றும் மதிய உணவு உங்கள் பங்குத்தந்தையர்களூடாக ஒழுங்கு செய்யலாம்
அனைவரும் வருவீர்! இறையாசீர் பெறுவீர் !!

(2356)

*ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.* *யாழ் மறைமாவட்ட புனித யோசே வாஸ் ஆண்டுக்குழு*

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org